மாதம் இருமுறை

# எங்கள் தேசம்

එංගල් දේසම් QD/28/NEWS/2013 *Engal Thesam*

மலர்: 12 இதழ்: 14 249 ஜூலை 15-31, 2013 விலை: ரூபா. 30.00

26/07/2013
PUBLIC LIBRARY JAFFNA

## எகிப்தில் இராணுவ புரட்சி



# அடுத்தது என்ன?

## இலங்கை-இந்திய உறவை உரசிப் பார்க்கும் 13வது திருத்தம்

24 JUL 2013
மாநகரசபை யாழ்ப்பாணம்




## ஊடகத்துக்கு ஒழுக்கக்கோவை குரல்வளை நசியப்போகிறதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதம் வாழுமிடமெல்லாம் எங்கள் தேசமே!

# சிங்கள-முஸ்லிம் நட்புறவை

## எந்த சக்திகளாலும் சீர் குலைக்க முடியாது

### பிரதமர் டி.எம். ஜயரத்ன



ஏ.எஸ்.எம். ஜாவித்

சிங்கள மக்களுக்கும் முஸ்லிம் களுக்கும் இடையில் சிறந்த நட்புறவும் ஒற்றுமையும் காணப் படுகிறது. அதனை எந்த சக்திகளா



லும் சீர் குலைக்க முடியாது. முஸ் லிம்கள் சுமார் 2600 வருடகால வர லாற்றைக் கொண்டவர்கள் மட்டு மல்லாது இந்த நாட்டிற்கு பெரு மைகளைத் தேடிக் கொடுப்பவர் கள் என பிரதமர் கலாநிதி டி.எம். ஜயரத்ன தெரிவித்தார்.

83 நாடுகள் கலந்து கொண்ட, 2012 ஆம் ஆண்டின் 34வது அரசர் அப்துல் அஸீஸ் சர்வதேச குர்ஆன் ஓதும் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட இலங்கை மாணவனான ஹாபிழ் எம்.ஆர்.எம். றிஸ்கானை கௌர விக்கும் நிகழ்வொன்றை அண்மையில் புத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சும் முஸ்லிம் சமய பண் பாட்டலுவல்கள் திணைக்களமும் இணைந்து புத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடத்தியது. இந்நிகழ் வில் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றிய போதே அவர் இவ் வாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்ததாவது:

உலகில் வருவாயுள்ள பல நாடு களுடன் போட்டி போட்ட இம் மாணவனின் வெற்றி அவருக்கோ அல்லது அவரது குடும்பத்திற்கோ மட்டும் உரிய வெற்றியல்ல. இந்த நாட்டுக்குரிய வெற்றியாகும். இத னையிட்டு நான் பெருமையடை கின்றேன்.

இவர்நாட்டிற்குத்தேடிக்கொடுத்த பெருமையையும் கருத்திற் கொண்டு ஜனாதிபதியால் கௌர விக்க நான் அனைத்து ஏற்பாடு களையும் செய்வேன். இந்த நிகழ் வானது ஒரு சிரேஷ்ட நிகழ்வா கும். இது எனக்கு சந்தோசமா கவுள்ளது.

இஸ்லாம் ஒரு சிரேஷ்ட மார்க்க மாகும். எல்லா மதங்களையும் நான் சமமானது என்று சொல்ல மாட்டேன். சமயங்கள் வேறு பட்டது. எனினும், எல்லா மதங் களும் ஒரு நல்ல மனிதர்கள் உரு வாவதையே எதிர்பார்க்கின்றன.

இம்மாணவன் சிறந்த முறை யில் படித்து நல்லதொரு பேரா சிரியராக வர வேண்டும் என இந்த வேளையில் வாழ்த்துகின்றேன். இவரின் உயர் கல்விக்கு உதவுவ தற்கு நான் தயாராகவுள்ளேன் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் புத்தசாசன மற் றும் மத விவகார பிரதி அமைச்சர் எம்.கே.ஏ.டி.எஸ். குணவர்த்தன, அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி, பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச். எம். அஸ்வர், மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா, கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ. மஜீத், சஊதி மற்றும் ஈரான் நாடுகளின் இலங்கைக் கான தூதுவராலய பிரதிநிதிகள் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் ஹாபிழ் எம். ஆர்.எம். றிஸ்கானுக்கு நினைவுச் சின்னமும் ஒரு இலட்சம் ரூபா பணப் பரிசும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# ஹஜ், உம்ரா யாத்திரை செல்பவர்களிடம் சுகயீன விடுமுறை கோரக்கூடாது இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் வழியுறுத்து

ஏ.கே.ஏ. ரவூப்

கிழக்கு மாகாண பாடசாலை களில் பணியாற்றும் அதிபர், ஆசி ரியர்கள் புனித ஹஜ் அல்லது உம்ரா யாத்திரையை மேற்கொள்ள விண் ணப்பிக்கும் போது சேமித்த சுகயீன விடுமுறையைக் கோரக்கூடாதென சம்பந்தப்பட்டவர்களுக்கு பணிப் புரை விடுக்குமாறு இலங்கை இஸ் லாமிய ஆசிரியர் சங்கம் கிழக்கு மாகாண முதலமைச்சரைக் கேட் டுள்ளது.

இது தொடர்பாக அதன் தலை வர் எம். அனஸ் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீ துக்கு அனுப்பி வைத்துள்ள கடி தத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

புனித ஹஜ், உம்ரா யாத்திரை களுக்காக விண்ணப்பிக்கும் கிழக்கு மாகாண அதிபர், ஆசிரியர்களிட மிருந்து விடுமுறை கோரும் நாட் களின் எண்ணிக்கைக்குச் சமனான சேமித்த சுகயீன விடுமுறை கோரப் படுகின்றது. போதிய அளவு சேமித்த சுகயீன விடுமுறை இல்லா தோருக்கு சம்பளமற்ற ஹஜ், உம்ரா விடுமுறைக்கான அனுமதி மாகாண கல்வித் திணைக்களத்தினாலும் மாகாணக் கல்வி அமைச்சினாலும் மறுக்கப்படுகிறது.

இதனால் தம்மீது கடமையான ஹஜ், உம்ராவை உரிய காலத்தில் மக்கா சென்று நிறைவேற்ற முடி யாத துர்ப்பாக்கிய நிலையில் கிழக்கு மாகாண முஸ்லிம் அதிபர், ஆசிரி யர்கள் உள்ளனர். இவ்வாறு அவர்களது அடிப்படை சமய உரிமை பாதிக் கப்படுவதை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது.

எனவே, புனித ஹஜ் உம்ராவை மேற்கொள்ளவிருக்கும் கிழக்கு மாகாண அதிபர் ஆசிரியர்களின் சேமித்த சுகவீன விடுமுறையைக் கோராது சம்பளமற்ற வெளிநாட்டு விடு முறையில் செல்வதற்கு சம் மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

# ஷரீஆ சட்டங்கள் பற்றி அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும்

### கலாநிதி வீரமந்திரி



இலங்கையில் உள்ள பல்க லைக்கழகங்களில் பயிலுகின்ற மாணவர்களுக்கு முஸ்லிம் சட்டம் பற்றி 2 வீத அறிவு மட்டுமே போதிக் கப்படுகின்றன. ஆனால், இஸ் லாம் மற்றும் ஷரீஆ சட்டங்கள் பற்றி எமது நாட்டில் உள்ள சகலரும் நிறைய தெரிந்து கொள்ள வேண்டும் என முன்னாள் நீதியரசர் சீ.ஜீ. வீர மந்திரி தெரிவித்தார்.

சர்வதேச நீதிபதிகளின் உப தலைவரும் முன்னாள் நீதியரசரு மான சீ.ஜீ. வீரமந்திரி அவர்களால் "Islamic Jurisprudence- International Perspective (சர்வதேச பார் வையில் இஸ்லாமிய சட்டவியல்)" ஆங்கில மொழி மூலமான நூலின் சிங்கள மொழிபெயர்ப்பு நூல் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் வெளி யிட்டு வைக்கப்பட்டது.

இவ்வெளியீடு ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் அனுசரணையில் நடைபெற்றது. இந்நூலை முன் னாள் குவைத் நாட்டின் தூதுவராக கடமையாற்றிய எஸ்.ஏ.சி.எம். சுகையில் சிங்கள மொழிக்கு மொழி பெயர்ப்புச் செய்திருந்தார்.

இந்நிகழ்வில் முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என். எம். அமீன், ஜாமிஆ நளீமியா கலாபீட பணிப் பாளர் கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி, சட்டமா அதிபர் சரத் பாளித்த பெர் னாண்டோ ஆகியோர் கலந்து கொண்டனர். நூல் பற்றிய ஆய்வினை கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியை சாவித்திரி குணசேகர நிகழ்த் தினார்.

இங்கு உரையாற்றிய சீ.ஜீ. வீர மந்திரி மேலும் தெரிவித்ததாவது:

இஸ்லாம் ஒரு சீரிய வாழ்க்கை முறையாகும். இஸ்லாமிய பாண் பாடு மற்றும் முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லம்) அவர்களின் சீரான வாழ்க்கை முறை ஆகியவற்றை கட்டாயம் வளர்ந்து வரும் இளம் சமூகம் தெரிந்து கொள்ள வேண்டும். அதே போன்று தற்காலத்தில் இலங்கை யில் மிகவும் தேவைப்பாடான தொரு கால கட்டத்தில் இந்த இஸ்லாமிய சட்டவியல் சிங்கள மொழி மூலமான நூல் வெளிவந் துள்ளது. அதேபோன்று முஸ்லிம் களும் ஏனைய மதங்களின் வாழ்க்கை முறைகள், பண்பாடு மற்றும் மதங் களைத் தெரிந்து கொள்ளல் வேண்டும்.

முஹம்மது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், "சீன தேசம் சென்றாலும் சீர் கல்வியைத் தேடிக் கற்க வேண்டும்" எனச் சொல் லியிருக்கிறார்கள். இஸ்லாமிய கற்கை சம்பந்தமான 800க்கும் அதி கமான பாகங்களைக் கொண்ட நூல்கள் உலக நாடுகளின் நூலகங்க ளில் உள்ளன. லண்டன் ஒக்ஸ் போர்ட் பல்கலைக்கழகத்தில் கூட 200 பாகங்களைக் கொண்ட நூல் உள்ளது. ஆகவே, இஸ்லாம் பற்றிய பாரிய அறிவு விருத்திகளுக்கு இந் நூல்களை நாம் தேடிக் கற்றுக் கொள்ள வேண்டும்.


**Fathima Zahra**

**Ladies Arabic College**

M.P.C.S ROAD, ODDAMAVADI

**ஷரீஆ துறை ஆசிரியர்களுக்கான வெற்றிடம்**

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும், முன்னணிவகிக்கும் பிரபல்யமான அரபுக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் என்பவற்றில் ஷரீஆ துறையில் பட்டம் பெற்ற ஆண், பெண் இரு பாலாரிமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

- ஆண்களாயின் 30 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- கல்வித் தகைமைக்கேற்ப பொருத்தமான சம்பளம், ETF,EPF உட்பட ஏனைய வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.
- விண்ணப்பங்களை 30.08.2013ஆம் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பபடிவங்களுக்கும்

0772992218, 0778850868


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA.



# ஊடகத்துக்கு ஒழுக்கக் கோவை!

# குரல்வளை நசியப் போகிறதா?

கடந்த சில வருடங்களாக ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் பல அத்துமீறல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் நிலையில் அதை நிவர்த்திக்கவோ, நியாயம் வழங்கவோ எவ்வித நடவடிக்கையும் எடுக்கது, இடைநடுவில் ஒழுக்கக் கோவையொன்றைக் கொண்டு வருவது நல்ல நோக்கத்துக்காக இருக்காது என்றே பல தரப்பினரும் கருதுகின்றனர். கடந்த காலங்களில் சில ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டன. அதற்கான விசாரணைகள் முறையாக முன்னெடுக்கப்படவில்லை. பல ஊடகவியளாலர்கள் கொலை செய்யப்பட்டும் காணமற் போயுமுள்ளனர். அவை பற்றிய நீதி விசாரணைகள் முறையாக மேற்கொள்ளப்படவில்லை. 25க்கு மேற்பட்ட ஊடகவியலாளர்கள் நாட்டில் அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளில் சென்று வாழ வேண்டி ஏற்பட்டுள்ளது. பத்திரிகைகளில் நாளாந்த செய்திப் பிரசுரிப்பில் கூட அரசு தலையிடும் நிலையுள்ளது.

வெப் தளங்களைப் பதிவு செய்யும் சட்டம் அமுலில் உள்ளது. ஊடக நிறுவனப் பொறுப்பாளர்களை மாதாந்தம் ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்து அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன. ஊடகங்களைக் கட்டுப்படுத்த அல்லது அவர்கள் தாமாக முன்வந்து கட்டுப்பட்டு நடக்க வைக்கும் கைங்கரியமே இது. அரச ஊடகங்களுக்கு எவ்விதக் கட்டுப்பாடும் கிடையாது. மக்களைப் பாதிக்கும் செய்திகளை விட ஆட்சியாளரைப் புகழும் செய்திகளே அவற்றை ஆட் கொண்டுள்ளன. அரசைச் சாராத தனி மனிதர்கள், நிறுவனங்கள், கட்சிகள் ஆகியவை அரசாங்க ஊடகங்களில் மிக மோசமாகச் சித்திரிக்கப்படுவதைக் காணலாம். அண்மையில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவின் மகன் குடிபோதையில் பறக்கும் விமானத்தின் கதவைத் திறக்க முற்பட்டு விமானப் பயணிகள் பீதிக்குள்ளாகிய விடயத்தை அரச ஊடகங்கள் மூடி மறைத்தன. கழிவறைக் கதவென்று நினைத்து வாசற் கதவை திறக்க முற்பட்டார் என்றும் தூக்கத்தில் நடக்கும் வியாதி காரணமாக அப்படிச் செய்தார் என்றும் பலவாறு சமாளித்தன. அதே விடயம் ஓர் எதிர்க் கட்சி உறுப்பினரின் மகனாக அல்லது ஒரு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவராக இருப்பின் அரசாங்க ஊடகங்கள் எந்தளவு கூப்பாடு போட்டிக்கும் என்பதை எம்மால் கற்பனை செய்ய முடியும்.

ஊடகங்களுக்கு ஒழுகக் கோவை வழங்க முன் அரசாங்க ஊடகங்களுக்கு அவற்றை வழங்கி பரீட்சித்துப் பார்த்து ஏனைய தனியார் ஊடகங்களில் அவற்றைத் தாமாகவே முன்வந்து பின்பற்றும் நிலையை ஏற்படுத்த முடியும். ஆனால், அரசாங்கம் அப்படிச் செய்வதில்லை. மக்களின் தகவல் அறியும் தாகத்தை ஓரளவாவது தீர்க்கும் தனியார் ஊடகங்களைக் கட்டுப்படுத்தவே முனைகின்றது.

அரசாங்கம் அடிக்கடி ஊடக ஒழுக்கக் கோவை பற்றிக் கூறினாலும் அதன் உள்ளடக்கம் என்ன என்பதை இதுவரை வெளியிடவில்லை. மேலோட்டமாக சில விடயங்களே கூறப்பட்டுள்ளன. அதன் உள்நோக்கம் அரசை விமர்சிக்கும் ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதேயாகும்.

ஜனநாயகத்தின் ஒரு முக்கிய கூறாக ஊடகம் கருதப்படுகிறது. இலங்கையில் எதிர்க்கட்சிகள் கூட பலமற்ற நிலையிலுள்ள இக்காலகட்டத்தில், பொதுசன அபிப்பிராயத்தை ஓரளவேனும் பிரதிநிதித்துவப்படுத்துவதாக ஊடகங்களே காணப்படுகின்றன.


ஊடகங்களுக்கு ஒழுக்கக் கோவை தேவை என்பதில் சர்ச்சைகள் இருக்க முடியாது. எந்தவொரு தொழில் வான்மைக்கும் ஒழுக்கக் கோவை இருக்க வேண்டியது அவசியம். அத்தகைய ஒழுக்கக் கோவை மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டுமே தவிர, ஜனநாயக விரோதமான, அரச நலனை அடிப்படையாகக் கொண்டதாக அமையக் கூடாது. வைத்தியர்கள், வழக்கறிஞர்கள், கணக்காளர்கள் போன்றோருக்கு ஒழுக்கக் கோவை இருக்க வேண்டியது அவர்களின் கௌரவத்தைப் பாதுகாக்க மட்டுமல்ல. பொதுமக்களுக்கு வகை கூறும் வகையில் அமைய வேண்டும் என்பதற்குமாகும்.

உலகளாவிய ஊடகவியலாளர்கள் ஒழுக்கக் கோவைக்குக் கட்டுப்பட வேண்டிய தேவை என்பது மக்கள் உண்மையை அறிந்து கொள்ள உரித்துடையவர்கள் என்ற அடிப்படையிலாகும். அரசாங்கம் கொண்டு வர உத்தேசிக்கும் ஒழுக்கக் கோவை உண்மையில் அந்த நோக்கம் கொண்டதா என்பது கேள்விக்குறியே.

எந்த அடிப்படையுமற்ற, உண்மைக்குப் புறம்பான செய்திகள் மற்றும் தகவல்கள் ஊடகங்களில் வருவதை நாம் அறிவோம். சம்பந்தப்பட்டவர்களை இழிவுபடுத்தவோ அல்லது அவர்களின் நன்மதிப்பைக் குறைக்கவோ மட்டுமன்றி, ஜனரஞ்சகமான நிறுவனங்களை சிரமத்தில் ஆழ்த்தும் வகையில் இத்தகைய செய்திகள் வருகின்றன.
ஊடகவியலாளருக்குப் பணம் கொடுத்து தம் தேவைகளைச் செய்தியாக வெளியிட்டுக் கொள்ளும் பணம் செலுத்தும் ஊடகக் கலாசாரம் (Paid Journalism) இன்று வழக்கில் உள்ளது. அண்மையில் இந்தியாவில் இத்தகைய செய்தி வெளியிட்ட ஊடகங்கள் பலவற்றுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை அரம்பிக்கப்பட்டுள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

தேர்தலுக்கான செலவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் ஊடகங்களுக்கு இலஞ்சம் கொடுத்து தேர்தல் பிரசாரங்களை செய்திகளாக அலங்கரித்து வெளியிடும் மோசடிகள் பல நாடுகளில் அம்பலத்துக்கு வந்துள்ளன. சமயத் தலைவர்களை இழிவு படுத்தும், சமயங்களைக் கொச்சைப்படுத்தும் செய்திகள் வேண்டுமென்றே வெளியிடப்படுகிறன. ஊடக சுதந்திரம் என்ற பெயரால் நடைபெறும் இத்தகைய முறைகேடுகளை அனுமதிக்கவே முடியாது. இனங்களுக்கிடையில் முறுகல் நிலையைத் தோற்றுவிக்கும் செய்திகளும் இதில் அடங்கும். இன்று ஊடகவியல் என்பது வெறும் தொழிலாக கணிக்கப்பட்டு தகுதியற்ற, பண்பாடற்ற பலரும் அதில் நுழைந்திருக்கின்றமை இதற்கான காரணம் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

அரசாங்கம் ஊடக ஒழுக்கவியல் கோவையை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் மக்களின் உண்மையை அறியும் உரிமையை உத்தரவாதப்படுத்த வேண்டும். இந்தியாவில் அத்தகைய நிலையுண்டு. மேலை நாடுகளில் நீண்ட காலமாகவே இம்முறை பின்பற்றப்படுகின்றது. நல்ல நோக்கத்தில் ஒழுக்கக் கோவை கொண்டு வரப்படுவதாயின் மக்களின் செய்தியறியும் உரிமையை உத்தரவாதப்படுத்துவதாகவே அது அமைய வேண்டும். மாறாக, அரசாங்கத்தின் பிழைகளைச் சுட்டிக்காட்டும் ஊடகங்களின் குரல்வளையை நசுக்குவதாக இருக்கக் கூடாது.




**"அண்மையில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவின் மகன் குடிபோதையில் பறக்கும் விமானத்தின் கதவைத் திறக்க முற்பட்டு விமானப் பயணிகள் பீதிக்குள்ளாகிய விடயத்தை அரச ஊடகங்கள் மூடி மறைத்தன. கழிவறைக் கதவென்று நினைத்து வாசற் கதவை திறக்க முற்பட்டார் என்றும் தூக்கத்தில் நடக்கும் வியாதி காரணமாக அப்படிச் செய்தார் என்றும் பலவாறு சமாளித்தன. அதே விடயம் ஓர் எதிர்க் கட்சி உறுப்பினரின் மகனாக அல்லது ஒரு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவராக இருப்பின் அரசாங்க ஊடகங்கள் எந்தளவு கூப்பாடு போட்டிக்கும் என்பதை எம்மால் கற்பனை செய்ய முடியும்."**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தேசம்

மலர் : 12 இதழ் : 14 ஜூலை 15 - 31, 2013

77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு- 09, இலங்கை
தொலைபேசி: 0112 698771 / 0777 412561, பெக்ஸ்: 0112 686030,
மின்னஞ்சல்: engalthesamnews@gmail.com


## தெரிவுக்குழுவும் 13ஆவது யாப்பும்

பாராளுமன்ற ஜனநாயகம் செயற்படும் நாடுகளில் பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒரு ஜனரஞ்சகமான முறையாகக் கருதப்படுகிறது. பாராளுமன்றத்துக்கு உள்ளும் வெளியிலுமுள்ள அரசியல் கட்சிகள் மற்றும் நிறுவனங்கள் பொதுமக்களிடம் கருத்துக்கள் பெற்று ஒரு பரந்த நோக்கிலான மசோதாவைத் திட்டமிடுவதே இதன் நோக்கமாகும். இதற்கு முன்னரும் இலங்கைப் பாராளுமன்றத்தில் இத்தகைய பல்வேறு தெரிவுக்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. ஏனைய நாடுகளிலும் இது பரவலாக வழக்கிலுள்ளது. இதனூடாக பல சிறப்பான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்போது தெரிவுக்குழு அமைக்கப்பட்டிருப்பது ஓர் அசாதாரண சூழ்நிலையிலாகும். ஏற்கனவே பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூலம் நிறைவேற்றப்பட்ட யாப்பின் ஒரு பகுதியாக மாறியுள்ள 13ஆவது யாப்புத் திருத்தத்தில் மீண்டும் திருத்தம் செய்ய வேண்டும் என்ற நோக்கிலேயே இது அமைக்கப்பட்டுள்ளது.


எட்டு மாகாணங்களில் செயற்படும் மாகாண சபை 9ஆவது மாகாணத்தில் உருவாக்கப்பட முனையும் போது சிறுபான்மையினர் என்பதற்காக அதன் அதிகாரங்களைக் குறைக்க வேண்டும் என்ற கோரிக்கை இனவாத, தேசியவாதக் கட்சிகளில் இருந்து எழுந்தமை தெரிவுக்குழுவுக்கான உடனடிக் காரணமாகும். அரசின் பங்காளிக் கட்சிகளிடையே இரு வேறு கருத்துக்கள் நிலவுகின்ற நிலையிலும் தமிழ் மக்களும், இலங்கையுடன் 13ஆவது திருத்தம் தொடர்பில் ஒப்பந்தம் செய்த இந்தியாவும் கொண்டிருக்கும் நிலைப்பாட்டுக்கு முரணாக, மாகாண சபைகளின் அதிகாரத்தைக் குறைக்க முற்படுவது அநியாயமானது என்ற கருத்தை வலியுறுத்தும் அமைச்சர்கள், கட்சித் தலைவர்களும் இருக்கவே செய்கின்றனர். முஸ்லிம் காங்கிரஸ் உட்பட்ட சிறுபான்மைக் கட்சிகளும் மாகாண சபையை அதிகாரக் குறைப்புச் செய்யாது பாதுகாக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளன.

ஒரு தெளிவான திறந்த முடிவை நோக்கியதாக தெரிவுக்குழுவின் கட்டமைப்பு இல்லை என்று குற்றம் சாட்டப்படுகிறது. சர்வகட்சி மாநாட்டில் நீண்ட காலம் தலைமை தாங்கிய அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண போன்றோர் வேண்டுமென்றே தவிர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தமிழ் மக்களுக்கு சார்பான முடிவு வருவதைத் தடுக்கவே இவ்வாறு செய்யப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாயத் தலைவர்கள் மாநாடு வரை இப்பிரச்சினையை ஒத்திவைப்பதற்கான காலங்கடத்தலாகவே இத்தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது. அன்றியும், எதிர்க்கட்சிகளின் பங்களிப்பற்ற இத்தெரிவுக்குழு வெறுமனே அரசாங்கக் கட்சிக் கூட்டமாகவே அமையும்.


இதற்கிடையில் இந்தியாவின் விஷேட தூதுவர் மேனனின் வருகையும் அமைச்சர் பஷில் ராஜபக்ஷவின் இந்திய விஜயமும் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தின என்பது வெளிப்படையாகத் தெரியாத நிலையில், தெரிவுக்குழு கண் துடைப்பாக, காலங்கடத்துவதாக அமையும் என்ற கருத்து வலுப் பெறுகிறது. அமைச்சர் விமல் வீரவன்ச, அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஆகியோரின் கோரிக்கையை ஏற்கவும் முடியாமல் தவிர்க்கவும் முடியாமல் ஒரு தள்ளாடும் நிலைப்பாட்டில் அரசாங்கம் இருப்பது இந்த விவகாரங்களால் தெளிவாகிறது.

பல தசாப்தங்களாக இலங்கையின் சமூக வாழ்க்கையைக் குழப்பிய, பொருளாதாரத்தைச் சீரழித்த, உயிர்களையும் உடைமைகளையும் பேரழிவுக்குட்படுத்திய ஒரு பிரச்சினையை பரந்த நோக்கில் கையாளாமல் உள்நோக்கோடும் தந்திரமாகவும் கையாள்வது வேறு பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கவே வழி செய்யும்.

அந் தரங்க சுத்தியோடும் பரந்த நோக்கோடும் இப்பிரச்சினை அணுக்கப்பட வேண் டும் என்பதே இந்நாட்டின் சமாதான விரும்பிகளின் அபிலாஷையாக உள்ளது என்ற செய்தியை எல்லோரது உள்ளங்களிலும் பதிவு செய்வோம்.




## சொல் வெட்டு



- வடக்குத் தேர்தலை நடத்த விடவே மாட்டோம் என்று கூக்குரலிட்ட விமல், சம்பிக்க எங்கே?

  -மனோ கணேஷன்-

- **அதெல்லாம் சும்மா பூச்சாண்டி சேர். உண்ணாவிரதமிருந்து தண்ணீர் பருக்கிய கதையெல்லாம் மறந்திட்டீங்களா?**

- மேனனின் வருகையை அடுத்து 13 விவகாரத்தில் அரசாங்கம் பதுங்குவது ஏன்?

  -ரவி கருணாநாயக்க-

- **வந்தவர் நாக்க புடுங்குற மாதிரி நாலு வார்த்த பேசிருப்பாராக்கும்.**

- பஸ் கட்டணத்தை அதிகரிக்க அரசு ஒருபோதும் அனுமதியாது

  -அமைச்சர் சீ.பி. ரத்நாயக்க

- **நள்ளிரவு 12.01 இற்குப் பிறகு பார்ப்போம்!**

- 13ல் கை வைக்க இடமளியோம்

  -இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன்

- **'கை' வைக்க இடமளியோம்– கத்தி, பொல்லு வெச்சால் எங்களால் என்னதான் செய்ய முடியும்?**

- பாதுகாப்பு என்றால் என்ன? இலங்கையிடம் இந்தியா கற்க வேண்டும்

  -பொது பல சேனா-

- **அதோட, இனவாதம் என்றால் என்னவென்டும் நாங்களே கற்றுத் தருகிறோம்**

- வடக்குத் தேர்தலைக் கண்காணிக்க ஐரோப்பிய ஒன்றியத்தை அனுமதிக்கக் கூடாது

  -பேராசிரியர் ஓமல்பே சோபித தேரர்-

- **சிங்கத்த காவல் வெச்சா, குள்ள நரிகளுக்கு குழப்பமாகிடும் என்றாமா?**

- இன்னொரு மதத்தின் சுதந்திரத்தில் கை வைக்க பொது பல சேனாவுக்கு என்ன உரிமை இருக்கிறது

  -செல்வம் அடைக்கல நாதன் எம்.பி-

- **பெரும்பான்மை இனம் என்ற கர்வம் இருக்கிறது; மஞ்சள் உடை கவசம் இருக்கிறது; வேற என்ன வேணும் சேர்.**

- அரசியல்வாதிகளும் பொலிஸாரும் இணைந்து நாட்டை முன்னேற்ற உதவ வேண்டும்

  -சம்பரகமுவ முதலமைச்சர் மஹிபால ஹேரத்-

- **அது சரி! இன்றைக்கு நாளாந்தம் கைது செய்யப்படுகிறவங்கள்ள அதிகமானாக்கள் இவங்கதான். நல்ல முன்னேற்றம்!**


| எங்கள் தேசம் சந்தா விபரம் | உள்நாடு | வெளிநாடு | |
|---|---|---|---|
| | தனிப்பிரதி: 30.00<br>வருட சந்தா: 1200.00<br>ஆறு மாதங்கள்: 600.00 | இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, மலேஷியா, சிங்கப்பூர்:3600.00<br>மத்திய கிழக்கு நாடுகள்: 3750.00 | அவுஸ்திரேலியா, தென்கொரியா: 4700.00<br>இங்கிலாந்து: 5750.00, அமெரிக்கா, கனடா: 6900.00, ஜப்பான்: 4800.00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கை-இந்திய உறவை உரசிப் பார்க்கும் 13வது திருத்தம்

எம்.எச்.எம். ஹஸன்


இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1987இல் இலங்கைப் பாராளுமன்றத்தில் அவசரமாக நிறைவேற்றப்பட்ட 13ஆவது யாப்புத் திருத்தம் மூலம் மாகாண சபை முறை ஏற்படுத்தப்பட்டது. ஜே.ஆர். ஜயவர்தனவும் ராஜிவ் காந்தியும் ஒப்பமிட்ட அந்த ஒப்பந்தம் அன்றைய கால சூழ்நிலையில் இன்றியமையாததாகவே கருதப்பட்டது. மாகாண சபை முறை ஒற்றையாட்சி முறைக்குத் தடையாக அமையாது என்ற தீர்ப்பையும் இலங்கையின் உச்ச நீதிமன்றம் எடுத்திருந்தது. அதிகாரப் பரவலாக்கல் செயலொழுங்கில் அதற்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த மாவட்ட அபிவிருத்தி சபை முறையை வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அதில் போதிய அதிகாரப் பகிர்வு இருக்கவில்லை என்று அப்போது குறை கூறப்பட்டதும் தெரிந்ததே. பல கட்சிகள், மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்களைப் பகிஷ்கரித்தன. யாழ்ப்பாணத்தில் நடந்த மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் இலங்கைத் தேர்தல் வரலாற்றிலேயே மிக மோசமான தேர்தலாக பதிவு செய்யப்பட்டுள்ளமையும் இங்கு நோக்கத்தக்கது.

வட மாகாணத்தில் செயற்படாத போதும் மாகாண சபை முறை கால் நூற்றாண்டுகளுக்கு மேல் இலங்கையில் சீவித்துள்ளது. இதற்கு முன் பதவிக்கு வந்த எந்த அரசாங்கமும் அதனை நீக்க நடவடிக்கை எடுக்கவில்லை. ஒன்றிணைந்த வடக்கு-கிழக்கு மாகாண சபையின் ஒரே முதலமைச்சராக இருந்த வரதராஜப் பெருமாள் சுய நிர்ணய உரிமைப் பிரகடனமொன்றை வெளி யிட்ட போது, இலங்கை மட்டுமன்றி இந்தியாவும் அதை எதிர்த்தது. அந்த முயற்சி பிழையானது என இந்தியா நேரடியாகவே கூறியது.

பிரபாகரன் தலைமையிலான எல்.ரீ.ரீ.ஈ. மாகாண சபை முறையை ஏற்றுக் கொள்ள மறுத்து தனி நாடு கோரி ஆயுதப் போராட்டத்தில் இறங்கியமையால் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண வந்த மாகாண சபை, வடக்கு-கிழக்கில் செயற்படாமலே போய் விட்டது. உயர் நீதிமன்றத் தீர்ப்பு மூலம் வடக்கு-கிழக்கு மாகாண சபை பிரிக்கப்பட்டதைத் தொடர்ந்து இப்போது இரண்டாவது தடவையாகவும் கிழக்கில் மட்டும் மாகாண சபை பதவிக்கு வந்துள்ளது. யுத்தம் முடிவடைந்து நான்கு வருடங்கள் கழிந்த நிலையில் வட மாகாண சபைத் தேர்தல் சாத்தியமாகும் வேளையில் மீண்டும் இந்தியாவும் இலங்கையும் கெடுபிடியில் ஈடுபடும் ஒரு விடயமாக இது மாறியுள்ளது.

13ஆவது திருத்தம் குறித்து இலங்கையின் இனவாதிகள், தேசியவாதிகளின் கோரிக்கையாக இருப்பது அதனை இரத்துச் செய்து விட்டு மீண்டும் பழைய ஒற்றையாட்சிக்குத் திரும்ப வேண்டும் என்பதாகும். இலங்கை அரசாங்கமும் 13இன் அதிகாரங்களைக் குறைக்கவே விரும்புகிறது. ஜனாதிபதியின் தம்பியான பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மாகாண சபை முறை ஒழிக்கப்பட வேண்டுமென்று பகிரங்கமாகவே கூறியுள்ளார். இது அவரின் தனிப்பட்ட கருத்தாக இருக்காது. அதற்கான மறுப்புகள் எதுவும் அரச உயர் பீடத்திலிருந்து வந்ததாகவும் தெரியவில்லை. தேசிய ஐக்கிய முன்னணி, ஜாதிக ஹெல உறுமய, தேசப்பற்றுள்ள தேசிய அமைப்பு போன்றவை மட்டுமன்றி, கபினட் அந்தஸ்துள்ள அமைச்சர்களும் இப்போதுள்ள கட்டமைப்பில் தமிழ் மக்களுக்கு மாகாண சபை போய்ச் சேரக் கூடாது என்பதில் குறியாக இருப்பது தெரிகிறது.





யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர இந்தியா பல வழிகளில் உதவியது. யுத்தம் முடிவில் 13க்கு அப்பால் அதிகாரப் பரவலாக்கல் தருவதாக இலங்கை ஜனாதிபதி பல தடவைகள் இந்தியத் தலைமைக்கும் இலங்கைக்கு வந்த தூது கோஷ்டிகளுக்கும் வாக்குறுதி அளித்துள்ளார். இலங்கையின் இனவாதிகள் 13ஐ ஒழிக்க குரல் கொடுப்பது போன்றே இந்தியாவிலும் குறிப்பாகத் தமிழ் நாட்டில் இலங்கை தமிழர்களின் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் போக்கு அதிகரித்துள்ளது. யுத்தம் நடைபெற்ற காலத்தில் தமிழ் நாட்டு அமைப்புகள் பெரிதாக அலட்டிக் கொள்ளாவிட்டாலும் பிரபாகரனின் இறப்பைத் தொடர்ந்து இலங்கையில் தனி ஈழம் வேண்டும் என்ற கொள்கையைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கைவிட்ட போதும் தமிழ் நாட்டு அமைப்புகள் கைவிடத் தயாராக இல்லை. மனித உரிமை ஆணைக்குழுவில் இந்தியா இலங்கைக்கு எதிராக வாக்களிக்க வேண்டி ஏற்பட்டதில் தமிழ் நாட்டு விவகாரமும் முக்கியத்தும் பெறுகிறது.

இன்றைய அரசாங்கம் அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவதற்கு இனவாதிகளின் ஆதரவு தேவையாயுள்ளது போன்றே காங்கிரஸ் கட்சிக்கும் தென் இந்தியாவின் குறிப்பாக, தமிழ் நாட்டின் ஆதரவு தேவைப்படுகின்றது. இந்தியக் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணியமைத்துத் தேர்தலில் நிற்கும் திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கைத் தமிழர் விடயத்தில் தீவிரமாக இருப்பதும் தமிழ் நாட்டில் ஆளும் கட்சியான ஜயலலிதாவின் அண்ணா திராவீட முன்னேற்றக் கழகமும் அதே நிலைப்பாட்டில் இருப்பதும் அடுத்த பொதுத் தேர்தலில் தமிழ் நாட்டு மக்கள் வாக்களிப்பு நடத்தையில் இலங்கைத் தமிழர் விவகாரம் முக்கிய இடத்தைப் பெறும் என்பதை எதிர்வு கூர்வதாகவேயுள்ளது.

உலகளாவிய தமிழ் டயஸ் போராவும் தமிழ் நாட்டு விடுதலை அமைப்புகளும் 13ஆவது திருத்தம் பற்றி அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை. இலங்கையில் 13 ப்ளஸ், மைனஸ் விவகாரம் சூடு பிடித்துள்ள இன்றைய நிலையில் தமிழ் நாட்டின் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள், எதிர்ப்புகள் நடந்திருக்க வேண்டும். ஐரோப்பிய நாடுகளிலும் டயஸ் போராவின் எதிர்ப்புகள் கிளம்பியிருக்க வேண்டும். (18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம்கள் ஒத்துழைப்பு வழங்க மாட்டார்கள்

## அஸ்வர் எம்.பி



கிழக்கு வாழ் முஸ்லிம்கள் வடக்கோடு இணைவதற்கு ஒரு போதும் ஒத்துப்போக மாட்டார்கள். இந்த நிலைப்பாட்டைத்தான் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபத் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரஃப் கொண்டிருந்தார் என பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்தார்.

கல்முனை 'ஹெலி பீல்ட்' விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் கல்முனை சந்தாங்கேணி மைதானத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் பொலிஸ், காணி அதிகாரங்கள் இல்லாதிருந்த பொழுதே ஒரு லெட்சம் அளவிலான முஸ்லிம்கள் யாழப்பாணத்திலிருந்து அடித்துத்துரத்தப்பட்டனர். பொலிஸ் அதிகாரம் இருந்திருந்தால் முஸ்லிம்கள் எவ்வளவு தூரம் கஷ்டத்துக்குள்ளாவார்கள் என்பதை நாம் இலகுவில் உணர்ந்து கொள்ளலாம். அதுமட்டுமல்ல, யாழ்ப்பாண ஆதி பத்தியத்தின் கீழ் மட்டக்களப்பு வருவதை மட்டக்களப்புத் தமிழர்கள் ஒருபோதும் விரும்ப மாட்டார்கள். யாழ்ப்பாணத்தில் இன்றும் தாண்டவமாடும்தீண்டாமைக்கொள்கையை மட்டக்களப்புத் தமிழர்கள் ஏற்றுக் கொள்ளவே மறுக்கின்றனர்.

'மேற்கு, மேற்குதான், கிழக்கு, கிழக்கு தான்.' இரண்டும் ஒன்று சேர முடியாது என ஆங்கிலேயே அறிஞன் மார்க் டுவைன் கூறியது போன்று, இங்கு எமது சூழ்நிலையைப் பொறுத்து வடக்கு, வடக்கு தான், கிழக்கு, கிழக்குதான்! இரண்டும் இணைய முடியாது. இரு மாகாண சபைகளின் கீழ்தான் இவ்விரு மாகாணங்களும் இயங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை இந்நாட்டில்பெரும்பான்மை மக்கள் கொண்டிருக்கின்றனர்.

விளையாட்டு மூலம் ஓர் ஆரோக்கியமான இளைஞர் சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென மஹிந்த சிந்தனை தெளிவாகக் கூறுகிறது. சந்தாங்கேணி மைதானம் தேசிய மட்டத்தில் தரம் உயர்த்தப்பட வேண்டுமென நான் பாராளுமன்றத்தில் முன்பு தனிப்பட்ட பிரேரணையொன்றைக் கொண்டு வந்தேன். அதனை நடைமுறைப்படுத்தி மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் அனைத்து இன வாலிபர்களினதும் விளையாட்டுத் திறமைகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென விளையாட்டுத்துறை அமைச்சரை கேட்டுக் கொள்கின்றேன்.

கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.எம்.எம். நியாஸ், முஸ்தபா மாஸ்டர், டாக்டர் எம். நியாஸ், எம்.எம். ஜெஸ்மின் முதலானோரும் இங்கு உரை நிகழ்த்தினார்.

# மாணவர்களுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு

கந்தளாய் நிருபர்

மூதூர் கொட்டியாரக் குடாக் கடலை அண்மித்திருக்கும் தி/மு/ உமர் பாரூக் வித்தியாலயத்தில் பயிலும் மாணவர்களுக்கு சுனாமி அனர்த்த ஆபத்து தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு மற்றும் செயன்முறைப் பயிற்சி அண்மையில் பாடசாலையில் நடைபெற்றது.

இவ் விழிப்புணர்வுக் கருத்தரங்கின் செயன்முறைப் பயிற்சியாக, பாதுகாப்புத் தேடும் முகமாக சுனாமி எச்சரிக்கை சமிக்ஞை போன்ற மாதிரி ஒலி எழுப்பப்பட்டு வகுப்பறையிலிருந்து மாணவர்களும், ஆசிரியர்களும் பின் வாயில் வழியாக நடுத்தீவு கிராமத்தை நோக்கி ஓடி பயிற்சியை நிறைவு செய்தனர்.

இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கின் செயன்முறைப் பயிற்சியை பாடசாலையைச் சூழவுள்ள பொது மக்களும் அவதானித்தனர். இப் பாடசாலை மாணவர்களுக்கு அவசியம் உணர்த்தப்பட வேண்டிய விழிப்புணர்வு செயற்பாடாக இது நடத்தப்பட்டு விளக்கப்பட்டதாகவும் அதிபர் எஸ். கஸ்ஸாலி தெரிவித்தார்.

# கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் துறைத் தலைவராக நியமனம்



கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீட, இஸ்லாமிய கற்கைகள் துறையின் தலைவராக சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எம்.டி.எம். றிஸ்வி (மஜீதி) நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பேராதனைப் பலகலைக்கழக சிறப்புக் கலைமாணி பட்டதாரியாவார். இவர் தனது முதுகலை மற்றும் முது தத்துவக் கலைமாணிப் பட்டங்களை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய நாகரிகத்துறையில் பூர்த்தி செய்துள்ளதுடன், கல்வி டிப்ளோமா சான்றிதழும் பெற்றுள்ளார். இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி மட்டக்களப்பு மாவட்ட நாஸிமாக செயற்படும் இவர், சிறந்த ஆய்வாளரும் எழுத்தாளருமாவார்.

# மூதூர் தள வைத்தியசாலையின் குறைகளை நிவர்த்திக்குக! மக்கள் பேரணி



மூதூர் முறாசில்

மூதூர் தள வைத்தியசாலையில் நிலவும் பௌதிக மற்றும் ஆளணி வளப் பற்றாக்குறையை நிவர்த்திக்குமாறு கோரிக்கை விடுத்து அண்மையில் மூதூரில் பேரணியொன்று இடம்பெற்றது.

ஆயிரத்திற்கும் அதிகமானோர் கலந்திருந்த இப்பேரணி மூதூர் எரிபொருள் நிலைய சந்தியிலிருந்து ஆரம்பித்து தள வைத்தியசாலை வரை சென்றது.

பேரணியில் கலந்து கொண்டவர்கள், வைத்தியசாலைக்குத் தேவையான ஆளணியினரை பெற்றுத் தருமாறும் போதிய கட்டிட வசதிகளை ஏற்படுத்தித்தருமாறும் கோரி எழுதப்பட்ட சுலோக் அட்டைகளை ஏந்திச் சென்றனர்.

மிகப் பழைமையான இவ்வைத்தியசாலை 2006ஆம் ஆண்டு முதல் தள வைத்தியசாலையாக தரமு யர்த்தப்பட்ட போதும் போதிய அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத நிலையிலேயே இருந்து வருகின்றது.

இப்பேரணியை ஏற்பாடு செய்த வைத்தியசாலை அபிவிருத்திக் குழுத் தலைவரும் முன்னாள் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கே.எம். தௌபீக் கருத்து தெரிவித்த போது:

இவ்வைத்தியசாலையானது தள வைத்தியசாலையாக இருப்பதனால் மூதூர் பிரதேச மக்கள் மட்டுமன்றி ஈச்சிலம் பற்று, சேருவில பிரதேசங்களையும் உள்ளடக்கி சுமார் ஒரு லெட்சம் பேர்களின் வைத்தியத் தேவைகளைநிறைவு செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறது. ஆனால், குறைந்தளவான ஆளணியினரும் பௌதிக வளப் பற்றாக்குறையும் மக்களுக்கு போதிய வைத்திய சேவையை பெறுவதற்குப் பெரும் தடையாக அமைந்துள்ளது எனத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

நாளொன்றுக்கு வெளி நோயாளர் பிரிவிற்கு மட்டும் 400 இற்கும் அதிகமான நோயாளர்கள் வருகின்றனர். அவர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்காக ஓரிருவரே கடமையில் இருக்கின்றனர். இதனால் ஒரே நேரத்தில் பெருந்தொகையாக வந்து குவிகின்ற நோயாளர்கள் சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

சில காலமாக இயங்கி வந்த சத்திர சிகிச்சை கூடம் ஆளணி பற்றாக்குறையினால் இழுத்து மூடப்பட்டுள்ளது. அவசர சிகிச்சைப் பிரிவும் போதிய வசதிகள் இன்றியே இயங்கி வருகிறது. கதிரியக்க கூடமும் முறையாக இயங்க முடியவில்லை.

கிளினிக் வரும் நோயாளர்கள் அமர்ந்திருப்பதற்கு போதிய இடமில்லாது அவர்கள் அங்குமிங்கும் குந்தித்திரியும் நிலையே காணப்படுகிறது.

வைத்தியர்களுக்கும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் முறையான விடுதி வசதி கூட இவ்வைத்தியசாலையில் இல்லை. அவர்கள் பெரும் தியாகத்தோடுதான் இங்கு தங்கியிருந்து சேவையாற்றுகின்றனர்.

எனவே, இவ்வைத்தியசாலையில் வைத்திய விடுதிகள், நோயாளர் விடுதிகள், மருந்துக்களஞ்சியம், கதிர்இயக்க கூடம், இரத்த வங்கி, ஆய்வு கூடம் முதலானவை முறையாக அமைக்கப்பட வேண்டும்.

அவ்வாறே பற்றாக்குறையாக இருந்து வருகின்ற அத்தியவசிய உபகரணங்களும் போதிய ஆளணியினரும் வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் இவ்வைத்தியசாலையால் சிறந்த சேவையை வழங்க முடியும் எனக்குறிப்பிட்டார்.

மக்கள் பேரணியின் முடிவின் போது ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்கென மகஜர் ஒன்றும் மூதூர் பிரதேச சபை தவிசாளர் ஏ. எம். ஹரீஸ் மற்றும் மூதூர் பிரதேச செயலாளர் என். பிரதீபன் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டது.

# சமாதான நீதவான்



சாய்ந்தமருதைச் சேர்ந்தஹுசைன் முஹம்மது ஹஸ்ஸான் கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

வர்த்தகப் பட்டதாரியான இவர், தனது ஆரம்பக் கல்வியை கல்முனைக்குடி அஸ்ஸுஹரா வித்தியாலயத்திலும் உயர் கல்வியை கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையிலும் கற்றார்.

சமூக நல சேவைகளில் ஈடுபாடுடையவரான இவர் மர்ஹூம்களான இப்ராஹிம் முஹம்மது ஹுசைன் முஹம்மது காசிம் செய்னம்பு தம்பதிகளின் இளைய மகானவார்.



பீகாஸ் கல்வி நிறுவனத்தின் மட்டக்களப்பு கிளையின் இவ்வாண்டுக்கான விருது வழங்கும் விழா அண்மையில் மட்டக்களப்பு அரசடி தேவநாயகம் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பீகாஸ் கல்வி நிறுவனத்தின் தலைமையக பணிப்பாளர் எம்.எம். அப்துர் றஹ்மான் சான்றிதழ் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

படமும் தகவலும்: பழுலுல்லாஹ் பர்ஹான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிபெருக்கி துஷ்பிரயோகம்

▲ கலாநிதி மஸிஹூத்தீன் இனாமுல்லாஹ்

## ஒலிபெருக்கிப் பாவனை மார்க்கத்தின் பெயராலான அறியாமை

இன்று நாடு முழுவதிலும் மூலை முடுக்குகளிலும் ஜுமுஆப் பள்ளிவாசல்கள், தக்கியாக்கள், தர்ஹாக்கள் என சகல மத வழிபாட்டுத் தலங்களிலும் ஒலிபெருக்கி அத்தியாவசிய சாதனமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றமை தெரிந்த விடயமே. ஆனால், முஸ்லிம்கள் இந்த சாதனத்தை எந்த வரைமுறைகளும் கட்டுக்கோப்புகளும் இன்றி உபயோகிக்கின்றமை கவலைக்குரிய விடயமாகும்.

உலகிற்கு விஞ்ஞானத்தையும் நாகரிகத்தையும் இஸ்லாம் போதித்ததென பெருமைப்பட்டுக் கொள்ளும் நாம், பல்வேறு விடயங்களில் மிகவும் பாமரத்தனமாகவும் அநாகரிகமாகவும் மார்க்கத்தின் பெயரால் நடந்து கொள்கின்றோம். அவற்றுள் இந்த ஒலி பெருக்கி துஷ்பிரயோகமும் ஒன்றாகும்.

அதிகரித்து வரும் பள்ளிவாசல்கள் குறித்து அச்சம் கொண்டுள்ள பெரும்பான்மை சமூகம் மஸ்ஜித்களில் முழங்கும் ஒலி பெருக்கிகளின் அதிர்வலைகளை ஆக்கிரமிப்பு மனப்பான்மையின் அடையாளங்களாகவே பார்க்கின்றனர். இப்பொழுது ஒலிபெருக்கித் துஷ்பிரயோகம் எமது இருப்புக்கே அச்சுறுத்தலாக வந்துள்ளபோதும் நாம் திருந்தவே தயாரில்லை என்பதை நிரூபித்துக் கொண்டே வருகின்றோம்.

ஒலி அலைகளின் தீர்வுகளை அளவீடு செய்ய டெசிபல் அளவீடுகள் உள்ளன. அந்த வகையில், ஒரு பள்ளிவாசலுக்கு அதான் சொல்ல மட்டும் சுமார் 110 டெசிபல் முதல் 120 டெசிபல் அளவு போதுமானது. 15 முதல் 35 வாட் வரையிலான மின்சார சக்தி தேவைப்பாடு உடைய டெசிபல் அளவு சப்தம் போதுமானது. 100 வாட் சக்திக்கு மேற்பட்ட அம்ப்ளிபயர்களை பள்ளிவாசல்களில் பாவிக்க வேண்டிய அவசியம் கிடையாது.

தேவைக்கு அதிகமாக குரலை உயர்த்தக் கூடாது என்பதே அல்குர்ஆனும் சுன்னாவும் நமக்கு போதித்துள்ள தர்மமாகும். நாங்கள் தேவைக்காக ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவதாயின் அதான் சொல்லுவதற்காகவும் ஏதேனும் அறிவிப்புகளை செய்வதற்காகவுமே அவற்றை உபயோகிக்க வேண்டும். அல்லது மிகவும் அத்தியவசியம் எனக் கருதப்படுகின்ற ஒரு நிகழ்வின் போதும் பயன்படுத்தலாம்.

அதன்போதும் அளவாகவே அவற்றின் சப்தத்தை உயர்த்தியும் தாழ்த்தியும் வைத்துக் கொள்ள வேண்டும். இதுவே உயரிய பண்பாடும் இஸ்லாமிய வழிமுறையுமாகும்.

உதாரணமாக, இன்று ஒவ்வொரு மகல்லாவிலும் ஒரு பள்ளிவாசல் காணப்படுவதால் அந்தந்த மஹல்லாவிற்குள் மாத்திரம் கேட்கின்ற அளவு சப்தத்தை கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். மாறாக, இருக்கின்ற இடத்திலிருந்து ஐந்து மஹல்லாக்களுக்கோ, ஐந்து சதுர கிலோ மீற்றர் தொலைவிற்கோ கேட்குமளவு சப்தத்தை முழு அளவில் முடுக்கி விடுவது எமது முழு சமூகத்தையே கொச்சைப்படுத்தும் செயலாகும்.

முஸ்லிம்கள் செறிந்து வாழும் கிராமங்களாக இருந்தாலும் அல்லது மாற்று மதத்தவருடன் கலந்து வாழும் பிரதேசங்களாக இருந்தாலும் இந்த அடிப்படை நாகரிகத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். குறிப்பாக, அடுத்த சமூகங்கள் மத்தியில் வாழும் நாம் பல்வேறு கோணங்களில் இந்த விவகாரத்தை கையாள வேண்டும்.

அதான் கூற இரண்டு அல்லது மூன்று நிமிடங்கள் போதுமாயிருக்க அதற்கு முன் நீண்ட சலவாத்துகளுக்காகவும் பின்னர் இகாமத்து சொல்வதற்காகவும் ஒலிபெருக்கிகளை உபயோகிக்க வேண்டிய அவசியமே கிடையாது. சில இடங்களில் தொழுகைகளைக் கூட ஒலி பெருக்கியில் நடத்துவது விசனத்துக்குரிய விடயமாகும்.

அதேபோன்று, ஜுமுஆ குத்பாக்களையோ, வேறு ஏதும் பயான்களையோ எல்லா இடங்களிலும் எல்லா சந்தர்ப்பங்களிலும் ஒலி பெருக்கியில் நிகழ்த்துவதும் பொருத்தமற்ற ஒரு விடயமாகும். வீட்டில் உள்ள பெண்கள் குத்பாக்களைக் கேட்க வேண்டும் என்பதற்காக இன்று நேரடி குத்பாக்கள் ஒலிபரப்புச் செய்யப்படுகின்றன என்பதை முஸ்லிம்கள் கவனத்திற் கொள்ள வேண்டும்.

இன்று நமது சமூகத்தில் பல்வேறு கருத்து வேறுபாடுகளை மையமாக் கொண்டு பள்ளிவாசல்கள் அருகருகாமையில் இருப்பதும், அவர்கள் ஒருவருக்கொருவர் போட்டா போட்டியுடன் ஒலிபெருக்கிகளில் உயர்ந்த தொனியில் குத்பாக்களையும் பயான்களையும் முழக்குவது, மாற்று மதத்தவர்கள் எவ்வாறு இருப்பினும் அண்டை அயலவர்களை அல்லோலகல்லோலப் படுத்துகின்றமை மார்க்கத்தின் பெயரால் அரங்கேற்றப்படும் தீய செயற்பாடாகும்.

நோன்பு மாதம் வந்து விட்டால் இரவுகளை உயிர்ப்பிப்பதாகக் கூறிக் கொண்டு அமைதியாக அமல் செய்ய வேண்டிய இரவுகளை அல்லோலகல்லோலப்படுத்தும் அவலங்களை நாம் யாரிடம் போய்ச் சொல்வது. ஸஹருக்கு எழும்பி தஹஜ்ஜுத் தொழுது விட்டு உணவு தயாரிக்கும் பெண்கள், வயோதிபர்கள், நோயாளிகள் ஏன் பச்சிளம் பாலகர்கள் எவரையும் தூங்க விடாது முழுவதுமாக முடுக்கிவிடப்பட்ட ஒலி பெருக்கிகளின் முழக்கம் பகிரங்கமான அட்டகாசமாகும்.

அடுத்த சமூகங்கள் குறை கூறுகி றார்கள் அல்லது அரசாங்கம் ஒலிபெருக்கி பாவனையை மட்டுப்படுத்தச் சொல்கிறது என்பதற்கப்பால் நாம் எமது உயரிய இஸ்லாமிய வாழ்வியல் ஒழுக்கங்களை, நாகரிகத்தை அடுத்த சமூகங்களுக்கு எடுத்துக்காட்டுவதற்கு முன் வர வேண்டும்.

அகம்-புறம் இரண்டினதும்தூய்மையை இஸ்லாம் வலியுறுத்துகிறது. அகமும் புறமும் மாசடைவதை இஸ்லாம் ஒருபோதும் அனுமதித்தது கிடையாது. ஒலி மாசடைதலும் இஸ்லாத்தினால் வெறுக்கப்படுகின்ற விடயமாகையால் தேவைக்கு அதிகமாக குரலை உயர்த்தி பேசுபவர்களை கழுதையோடு குர்ஆன் ஒப்பீடு செய்துள்ளது.

ஸூரத்துல் லுக்மானில் லுக்மான் (அலைஹிஸ்ஸலாம்) தனது மகனுக்கு வழங்கும் அதி முக்கிய உபதேசங்களை குறிப்பிடும் அல்குர்ஆன் தேவைக்கதிகம் குரலை உயர்த்திகத்துவது குறித்து இவ்வாறு கூறுகிறது:

"உன் நடையில் (மிக வேகமோ, அதிக சாவதானமோ இல்லாமல்) நடுத்தரத்தை மேற்கொள்; உன் குரலையும் தாழ்த்திக் கொள். குரல்களிலெல்லாம் வெறுக்கத்தக்கது நிச்சயமாக கழுதையின் குரலேயாகும்." (31: 19 )


ஜாஹிலிய்யாக் கால அரபிகள் ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் உயர்ந்த குரலில் சப்தமிட்டு கதைப்பதை அல்குர்ஆன் ஸூரத்துல் ஹுஜ்ராத்தின் ஆரம்ப வசனங்களில் கண்டித்திருப்பதை நாம் பார்க்கலாம். தமக்கிடையே உள்ள ஜாஹிலிய்யா பண்பாடுகளை அரங்கேற்ற வேண்டாம் என ஓர் உயரிய நாகரிகத்தை அன்றைய அறியாமைக்கால அரபிகளுக்கு இஸ்லாம் போதிப்பதை நாம் இங்கு அவதானிக்கலாம்.


"அதான் கூற இரண்டு அல்லது மூன்று நிமிடங்கள் போதுமாயிருக்க அதற்கு முன்னால் நீண்ட சலவாத்துகளுக்காகவும் பின்னர் இகாமத்து சொல்வதற்காகவும் ஒலி பெருக்கிகளை உபயோகிக்க வேண்டிய அவசியமே கிடையாது. சில இடங்களில் தொழுகைகளைக் கூட ஒலி பெருக்கியில் நடத்துவது விசனத்துக்குரிய விடயமாகும்."

நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுடையே இரட்சகனோடுதானே உரையாடுகிறீர்கள். ஏன் ஒருவருக்கொருவர் குரலை உயர்த்தி குர்ஆனை ஓதுகிறீர்கள் என்றும், ஒருவரின் நித்திரையை பாதிக்கும் விதத்தில் குர்ஆன் ஓத வேண்டாம் என்றும், நமது நாவாலும் கரங்களாலும் அடுத்தவருக்கு இடையூறு செய்ய வேண்டாம் என்றும், நாவின் விபரீதங்கள் பற்றியும் பல ஹதீஸ்கள், நமது உரையாடல்கள், தொடர்பாடல்கள், ஓசை, குரல் பிரயோகங்கள் எவ்வாறான கட்டுக்கோப்பில் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

குர்ஆனிலும் சுன்னாவிலும் அறிவியல் ஆதாரங்களைத் தேடும் நாங்கள் இந்த விவகாரத்தில் அறிவியல், உளவியல் மற்றும் நாகரிக விழுமியங்களைத் தேட மறுக்கின்றோம்.

(18ஆம் பக்கம் பார்க்க...)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# சமூக குற்றங்களை ஒழிப்பதற்கு பாகுபாடின்றி பணியாற்ற வேண்டும்

## மட்டு அரசாங்க அதிபர் பி.எஸ்.எம். சார்ல்ஸ்



பழுளுல்லாஹ் பர்ஹான்

சமூக குற்றங்களை ஒழித்துக் கட்ட அனைவரும் இன, மத பாகுபாடின்றி பணியாற்ற வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம். சார்ல்ஸ் தெரிவித்தார்.

கலாசார அலுவல்கள் திணைக்களமும் மட்டக்களப்பு மாவட்ட செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த தேசிய உணவுக் கலாசார மேம்பாட்டுத்திட்ட வைபவம் அண்மையில் மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்ததாவது:

எமது மாவட்டத்தில் சமூக குற்றங்கள் தொடர்ந்தும் அதிகரித்த வண்ணமே உள்ளன.

மது மற்றும் போதைவஸ்து பாவனை, பாலியல் துஷ்பிரயோகம், குடும்ப வன்முறை, சிறுவர்கள் பாடசாலைக்கு செல்லாதிருத்தல், சிறுவர்களை வேலைக்கமர்த்தல் உள்ளிட்ட பல்வேறு சமூக குற்றங்கள் வயது பாகுபாடின்றி இடம் பெற்று வருகின்றன. பெற்ற தகப்பன் என்ற உணர்வில்லாமல் தனது மகளை பாலியலுக்கு உட்படுத்தக் கூடிய அளவுக்கு போதை மனிதனை மாற்றி விடுகிறது. இப்படியானதொரு இக்கட்டான சூழ்நிலையில் நாம் எல்லோரும் இன, மத வேறுபாடின்றி மிகப் பெரிய சமூகக் குற்றங்களுக்கெதிரான போராட்டத்தில் ஈடுபட வேண்டும். சமூகக் குற்றங்கள், பாலியல் நடவடிக்கைகள் என்பதற்கும் அப்பால் ஆரோக்கியமான, வளமானசமுதாயத்தைகட்டியெழுப்ப வேண்டிய தேவைப்பாடு இன்று எமக்குள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 'மரபுரிமைகளை பாதுகாப்போம்' எனும் சிந்தனையின் கீழும் 'ஆசியாவின் அறிவுப் பொக்கிஷமாக இலங்கை திகழ வேண்டும்' என்ற எண்ணத்திற்கு அமைவாகவும் சமூகத்திற்கு மத்தியில் பாரம்பரிய கலாசார உணர்வுகளை வளர்க்க வேண்டும்.

இலங்கை வரலாற்றில் பல்வேறு கலாசாரங்கள், சிறப்பம்சங்கள், பாரம்பரிய விழுமியங்கள் கொண்ட மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் காணப்படுகின்றது. ஆனால், மக்கள் பாரம்பரிய கலாசார உணர்வுகள் அற்றவர்களாக மாறியிருக்கிறார்கள்.

இவற்றை நீக்கி மீண்டும் பாரம்பரிய கலாசாரத்துக்கு புத்துயிர் அளித்து, அதை புனரமைத்து வருகின்றோம். அதன் ஒரு கட்டமாகத்தான் இந்த உணவுக் கலாசார மேம்பாட்டுத்திட்ட நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம்.

இன்று எமது உணவுப் பழக்க வழக்கத்தில் சிறுவர்கள் முதல் முதியோர் வரை 'பாஸ்ட் பூட்' தாராளமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இலங்கையின் பாரம்பரிய உணவுகளை சாப்பிடுவதற்காக வெளிநாடுகளில் நீண்ட வரிசையில் நின்று அதை சாப்பிடுகின்றார்கள். வெளிநாடுகளில் எமது பாரம்பரிய உணவுகளுக்கு இருக்கின்ற கவனம் இங்கு இல்லாதுள்ளது.

இந்த பாரம்பரிய உணவுப் பழக்க வழக்கங்களை இன்றைய நவீன முறைக் கேற்ப ஆரோக்கியமான முறையில் பூரண சுகாதாரத்துடன் வழங்குவதற்கான நடவடிக்கையை நாங்கள் எடுத்து வருகின்றோம். இதற்கு பிரதேச செயலாளர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்புத் தர வேண்டும்.

# அபிவிருத்தித்திட்ட மீள் ஆய்வுக் கூட்டம்



எம்.ரீ.எம். பாரிஸ்

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவுகளில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலான மீள் ஆய்வுக் கூட்டம் அண்மையில் பிரதேச செயலாளர் எம்.சீ. அன்சார் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் கே.பீ. எஸ். ஹமீட், ஓட்டமாவடி கோறளைப்பற்று மேற்கு பொதுச் சுகாதார பணிமனையின் வைத்திய பொறுப்பதிகாரி எம்.முஸ்பா, பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.ஐ. றியாஸ் உள்ளிட்ட சுகாதார, விவசாய மற்றும் அரச திணைக்கள அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள் என முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் உரிமை, பயன்படுத்தப்படாத கட்டடங்கள், போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தல், தனியார் கல்வி நிறுவன நேர ஒழுங்குகள், சமூக சேவை நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டன.

அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்டு வரும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மற்றும் சிரமதானம் குறித்தும் விஷேட கவனம் செலுத்தப்பட்டதுடன், செயலக பிரிவின் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் ஓட்டமாவடி பொதுச்சுகாதார பணிமனை மற்றும் பிரதேச சபைகளின் உதவியுடன் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளைத் துரிதமாக முன்னெடுப்பதற்கான தீர்மானங்கள் பலவும் எடுக்கப்பட்டன.

# சிவில் பாதுகாப்பு குழுக்களுக்கு விசேட செயலமர்வு

கந்தளாய் நிருபர்

'நமது கிராமங்களை நாமே பாதுகாப்போம்' என்ற தொனிப் பொருளில் விசேட செயலமர்வொன்று ஆசிய மன்றத்தின் அனுசரணையுடன் கிராமிய பொருளாதாரம் மற்றும் சமூக அமைப்பின் ஏற்பாட்டில் அண்மையில் கந்தளாய் தலைமை பொலிஸ் நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள 19 கிராம சேவையாளர் பிரிவுகளில் வாழும் மூன்று சமூகங்களையும் சேர்ந்த சிவில் பாதுகாப்புக் குழுக்களின் 150க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இச்செயலமர்வில் பங்குபற்றினர்.

இவ்வமர்வின் நிறைவாக சிவில் பாதுகாப்புக் குழுக்கள் ஒன்றியத்தின் தலைவராக கந்தளாய் பிரதேச சபை தவிசாளர் நுவன் அத்துகோரலவும் உப தலைவராக ஜே.எம். அசாரும் தெரிவு செய்யப்பட்டனர்.

கந்தளாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிமல் பண்டார தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் முதன்மை அதிதியாக கந்தளாய் பிராந்திய பொலிஸ் அதிகாரி கிரிபண்டா, விஷேட அதிதியாக கந்தளாய் சமூக பொலிஸ் பொறுப்பதிகாரி பண்டிதரத்ன ஆகியோரும் பங்குபற்றினர்.

# பொம்மை ஆட்சியாளர்கள் முஸ்லிம்களை பகடைக் காய்களாக பயன்படுத்துகின்றனர்

## அஸாத் சாலி மற்றும் கலாநிதி மனமேந்திர



கிண்ணியா நிருபர்

பொம்மை ஆட்சியாளர்கள் முஸ்லிம் மக்களை பகடைக் காய்களாகப் பயன்படுத்தி சுயநல அரசியலையே செய்கின்றனர். அப்பாவி முஸ்லிம்களோ அடிமைப்பட்டு சாகிறார்கள் என அஸாத் சாலி தெரிவித்தார்.

அண்மையில் கிண்ணியாவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் முஸ்லிம்களாலும் தமிழர்களாலும் தலை நிமிர்ந்து வாழ முடியாத அளவுக்கு இந்த அரசாங்கம் எம்மைக் கட்டிப் போட்டுள்ளது.

நான் சிறையில் கிடந்த போது எனது விடுதலைக்காக நோன்பு நோற்று, துஆப் பிரார்த்தனை செய்த மக்களைச் சந்தித்து அவர்களுக்கு நன்றி சொல்லக் கூட முடியாதளவுக்கு எம்மைக் கட்டுப்படுத்த பொலிஸாரையும் பாதுகாப்புப் படையினரையும் வீதிகளில் நிறுத்தியது. எமது நன்றியை மக்களுக்குச் சொல்ல அரசியல்வாதிகளும் இடம் தர மறுத்து விட்டார்கள்.

இந்த அரசாங்கம் ஏன் இப்படிச் செய்கிறது, எமது பேச்சு உரிமையைக் கட்டுப்படுத்துகிறது.

அரசாங்கத்தின் பொம்மைகளாக இருக்கின்ற முஸ்லிம் அரசியல்வாதிகள் முஸ்லிம்களுக்கு அநீதி நடக்கின்ற போது தட்டிக் கேட்க முடியாது தவிக்கின்றனர். அரசாங்கத்திலிருந்தும் அமைச்சுப் பதவியிலிருந்தும் அகற்றி விடுவார்கள் என்ற அச்சமே இதற்குக் காரணமாகும்.

### நவ சிஹல உறுமய கட்சி தலைவர் கலாநிதி மனமேந்திர

ஜனநாயக ஆட்சியை வாய் மூலம் கூறி விட்டு அராஜக ஆட்சியைச்செய்து வரும் அரசாங்கத்தின் காலக்கேடு மிகவும் அண்மித்து விட்டது. நாங்கள் கிண்ணியாவுக்கு விஜயம் செய்கிறோம் என்பதை அறிந்து முன்கூட்டியே திட்டமிட்டு எமது கருத்தை வெளியிட முடியாதளவுக்கு தடை செய்துள்ளார்கள் என்றால் எம்மீது அரசாங்கத்துக்குள்ள பயம் எத்தகையது என்பதை அறிந்து கொள்ளுங்கள் என நவ சிஹல கட்சியின் தலைவர் கலாநிதி மனமேந்திர தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் பேசிய அவர் தெரிவித்தாவது,

மஹிந்தவின் ஆட்சியும் அவரது அடாவடித்தனமான செயற்பாடுகளும் மக்களுக்கு நன்றாகத் தெரியும். மிக விரைவில் அவரது ஆட்சி நலிவடையும். மக்கள் இப்போதே ஒன்று திரண்டு விட்டார்கள். முஸ்லிம்களும் தமிழர்களும் சுதந்திரமாக வாழ முடியாத நிலை உருவாகியுள்ளது. அரசாங்கத்தின் கெடுபிடி அதிகரித்துள்ளது. சுதந்திரமாக பேச முடியாது. எம்மை தடுக்கின்ற நிலை உருவாகியுள்ளது. இதற்கெல்லாம் முடிவு மிக விரைவில் கிடைக்கும் என மேலும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் விக்கிரமபாகு கருணாரத்ன உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கையெழுத்து சஞ்சிகை போட்டி

கந்தளாய் நிருபர்


கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் 2013ஆம் ஆண்டுக்கான கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டிகளை நடத்துவதற்கான அறிவுறுத்தல்களை, கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.டி. நிஸாம் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகள் பாடசாலை மட்டம், வலய மட்டம், மாகாண மட்டம் என நடத்தப்படவுள்ளன. இப்போட்டிகள்: பாலர் கீழ் பிரிவு, பாலர் மேல் பிரிவு, இடைநிலைப் பிரிவு, கல்லூரி நிலையப் பிரிவு என நடைபெறவுள்ளன.

சித்திரம், பாட்டு, விடுகதை, துணுக்கு கதை, சிறுகதை, கட்டுரை, நகைச்சுவை, விளம்பரம், ஓவியம், நாடகம், கவிதை மற்றும் இலக்கிய திறனாய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கியதாக இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

எங்கள் தேசத்தில்
விளம்பரம் செய்வதற்கு
தொடர்பு கொள்ளவும்
ரீ. முஸ்தாக்
0777 396 306

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மக்களைப் பற்றியும் தேசிய அரசியலைப் பற்றியும் எந்தவொரு அபிப்பிராயமும் இவர்களுக்குக் கிடையாதா? இ.தொ.கா. என்பது அப்பன் வீட்டு சொத்தாகி விட்டதா? நாங்களும் எங்கள் பதவிகளும் என்ற சிந்தனை மட்டும்தானா?**




பார்க்க முடிகிறது.

-மலைஞானி

வாசுதேவ நாணயக்கார ஜனாதிபதியின் தயவால் தேசிய பட்டியல் மூலம் நாடாளு மன்றம் வந்தவர். திஸ்ஸவிதாரண, டியூகுண சேகர ஆகியோர் பலவீனமான இடதுசாரி கட்சிகளின் பிரதிநிதிகள். ராஜித ஐ.தே.க. இல் இருந்து வந்து அமைச்சரானவர். எனினும், இவர்களுக்கும் தமிழர் பிரச்சினையின் பேரில் ஒரு கொள்கை, ஒரு பார்வை உள்ளது. அதை செஞ்சோற்றுக் கடனுக்காக விட்டுக் கொடுக்கவோ, அஞ்சி நடுங்கவோ தயாரில்லை. ஏனெனில், அவர்களின் கைகள் சுத்தமானவை. எனவே, சுத்தமாகப் பேசுகிறார்கள். அவர்களுக்கு இந்நாட்டு அரசியலில் ஒரு மரியாதை என்றென்றும் இருக்கும். அரசுடன் இணைந்து ஆகப் பெரிய பலம் அதன் வாக்கு வங்கி. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தன் வாக்கு வங்கியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அதன் தலைவரான ஜனாதிபதி அவ்வப்போது எதையாவது செய்து வருகிறார். அவ்வப் போது தன் மக்கள் பலத்தை பரீட்சித்துப் பார்த்துக் கொள்ளவும் செய்கிறார்.

ஆனால், இப்படி எந்தவொரு சிந்தனையும் இ.தொ.கா. தலைமைக்கு இருப்பதாகத் தெரிய வில்லை. முன்னர் இ.தொ.கா. முதுகில் ஏறி ஐ.தே.க. சவாரி போனது. இந்த ஒவ்வொரு சவாரிகளின் மூலமும், ஐ.தே.க.வின் மத்திய

(18ஆம் பக்கம் பார்க்க)

# மத்திய மாகாண சபைத் தேர்தல்:
# இ.தொ.கா. வின் நிலைப்பாடு என்ன?

இலங்கைத் தமிழ் மக்கள் மற்றும் முஸ்லிம் சமூகத்தின் கனவாக இருந்த வட மாகாணத் தேர்தல் நடைபெறுவதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு வந்து விட்டது. அது எப்படி நடக்கும், நடத்தப்படும் என்பதெல்லாம் பெரிய பெரிய கேள்விக் குறிகள். மாகாண சபைத் தேர்தல் என்பது அதுவும் இலங்கையில், ரொம்ப சாதாரண விஷயம். ஆனால், வட மாகாண சபைத் தேர்தல் என்பது இன்று சர்வதேச விஷயமாகி விட்டது. பல நாடுகளும் கோடிக்கணக்கான தமிழர்களும் என்ன நடக்கப் போகிறது என்று உன்னிப்பாகக் கவனிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இவ்வளவு பெரிய ஒரு விஷயத்தைப் பற்றித்தான் எந்தக் கருத்தும் தெரிவிக்காமல், அலாங்காவில் நடைபெறப் போகிற ஒரு குட்டித் தேர்தலைப் போல நினைத்துக் கொண்டு கல்லுளி மங்கனாக இருந்து வருகிறார் ஆறுமுகன் தொண்டமானும் அவரது இ.தொ.கா. வும் என்பதில் இருந்தே,

தெரிகிறது அல்லவா ஆறுமுகனின் வீரமும், தைரியமும்!

இது தெரிந்ததுதான்; விட்டு விடுங்கள். இதே செப்டெம்பர் மாதம்தான் மத்திய மாகாண சபைத் தேர்தலும் நடக்கவிருக்கிறது. இந்தத் தேர்தலில் நாம் தனியாக மண்வெட்டிச் சின்னத்தில் போட்டியிடப் போவதாக ம.ம.மு. அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் வே. இராதா கிருஷ்ணன் அறிவித்திருக்கிறார். எமது தனித்துவத்தை நிலை நாட்டவும், எமது வாக்காளர்களை எமக்கே வாக்களிக்கச் செய்யவும் நாம் தனித்தே போட்டியிட வேண்டியிருக்கிறது என்று அவர் காரணத்தையும் சொல்லியிருக்கிறார்.

இத்தனைக்கும் இது ஒரு சிறிய கட்சி. சந்திரசேகரனின் மறைவின் பின்னர் பிரச்சினைகள் பலவற்றை சந்தித்து வரும் கட்சி. உறுதியான ஒரு தலைமை அதற்கு இல்லை. சாந்தினி அம்மையார் போதிய அரசியல் அறிவும் நெழிவு சுழிவுகளையும் அறிந்தவர் அல்லர். எனினும் அந்தக் கட்சி, தன் தனித்துவம் பற்றி பேசுகிறது. ஒரு சில ஆசனங்களைப் பெற்றாலும் தனித்தே பெறுவோம் என்று கூறும் துணிச்சல் கொண்டிருக்கிறது. தேர்தல் முடிந்ததும் ஆட்சி அமைக்கப் போகும் கட்சியுடன் பேரம் பேசலாம் என்பது இராதா கிருஷ்ணனின் நிலைப்பாடு. இதை ஜனாதிபதியும் அல்லது ரணிலும் சரி ஏற்றிருப்பார்கள்.

இனி இ.தொ.கா. வுக்கு வருவோம்.

வட மாகாண சபைத் தேர்தல், 13ஆம் திருத்தச் சட்டம் பற்றியெல்லாம் வாயே திறக்காத இ.தொ.கா, மத்திய மாகாண சபைத் தேர்தல் பற்றியும் மூச்சு விடாமல் இருக்கிறது. இது, இக்கட்சிக்கு சமூக பிரக்ஞையே கிடையாதா என்ற கேள்வியையே எழுப்புகிறது. மக்களைப் பற்றியும் தேசிய அரசியலைப் பற்றியும் எந்தவொரு அபிப் பிராயமும் இவர்களுக்குக் கிடையாதா? இ.தொ.கா. என்பது அப்பன் வீட்டு சொத்தாகி விட்டதா? நாங்களும் எங்கள் பதவிகளும் என்ற சிந்தனை மட்டும்தானா?


இதை நீதியாக எவருமே சிந்திக்க விரும்ப வில்லைதான். ஆனால், இந்தக் கடுமையான மௌனம், இக்கேள்விகளைத்தானே எழுப்புகிறது!

இந்த மௌனம் தெரிவிக்கும் செய்தி என்ன?

இ.தொ.கா. என்ற கட்சி மற்றும் தொழிற் சங்கம் என்ற இரண்டையுமே நாங்கள் அரசிடம் அடமானம் வைத்து விட்டோம். எங்களுக்கென ஒரு சுதந்திர சிந்தனையும் செயற்பாடும் கிடையாது. அனைத்தும் அரசாங்கம் தீர்மானிப்பது போலத்தான். அரசாங்கம் என்ன சொல்கிறதோ அதையே நாங்கள் செய்வோம் என்பதுதான் இ.தொ.கா. வின் எழுதப்படாத சட்டமாகி விட்டதா?

எவ்வளவு பரிதாபமான நிலை இது! இலங்கையில் எந்தவொரு அரசியல் கட்சியும் இவ்வளவு மோசமான நிலையில் இல்லை என்பது வெளிப்படை.

அரசுடன் இணைந்திருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் இக்கட்டான நிலையை சந்தித்து வருகின்ற போதிலும், 13ஆம் திருத்த சட்டம் தொடர்பில் அது ஒரு நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறது. இச் சட்டத்தின் மீது கை வைப்பதற்கு நாங்கள் விடமாட்டோம் என்று அமைச்சரவையிலேயே சொல்லும் துணிச்சலை அமைச்சர் ஹக்கீம் கொண்டிருந்தார் என்பதோடு, வட மாகாண தேர்தலில் அரசுடன் இணைந்தா அல்லது தனித்து மரச் சின்னத்திலா போட்டியிடுவது என்பதிலும் அவர் கட்சிக்குள் எதிர்ப்புகளை சந்தித்து வருகிறார். அதாவது, அக்கட்சியில் ஜனநாயகப் பண்புகளையும் கொள்கைப் பிடிப்பையும் பார்க்க முடிகிறது. கருத்துகளையும் மாற்றுக் கருத்துக்களையும் அரசியல் நடத்தி வரும் டக்ளஸ் தேவானந்தவும் பிள்ளையானும் கூட தமது நிலைபாட்டில் தெளிவாக இருக்கிறார்கள், 13 பலவீனப்படுத்தப்படக் கூடாது என்பதில்.




இவ்வாறு அனைவருக்கும் அனைத்துக் கட்சிகளுக்கும் 13 மற்றும் வட மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக ஒரு தெளிவான நிலைப்பாடு இருக்க, இ.தொ.காவுக்கு மட்டும் எந்தவொரு கருத்தும் கிடையாது. ஊடகங்களை அதன் தலைவர்கள் சந்திக்கத் தயங்குகிறார்கள், தவிர்க்கிறார்கள். மாகாண சபைகளில் இது தொடர்பாக பிரேரணை வரும் போது வாக்கெடுப்பில் கலந்து கொள்வதை இ. தொ. கா. உறுப்பினர்கள் தவிர்ந்து விடுகிறார்கள்.

இது இப்படியிருக்க, இம்மத்திய மாகாண சபைத் தேர்தல் தொடர்பாகவும் வாய் பொத்தி மௌனம் காக்கிறது இ.தொ.கா. இக்கட்சி சேவல் சின்னத்தில் கேட்க வேண்டும் என்பதே சரியான முடிவாக இருக்கும் என்பது ஒரு புறமிருக்க, மத்திய மாகாண வாக்காளர்களின் விருப்பமும் அப்படித்தான் இருக்கும். இக்கட்சி தொடர்ந்து வெற்றிலைச் சின்னத்தில் கேட்டு வந்தால் இதன் தனித்துவம் படிப்படியாக மறையத் தொடங்கும் என்பதும், சேவல் சின்னத்தை வாக்காளர்கள் மறந்து விருவார்கள் என்பதும் யதார்த்தம். இதனால்தான் ம.ம.மு. எப்போதும் மண்வெட்டிச் சின்னத்தில் கேட்பதையே விரும்புகிறது.



ஆனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ன தீர்மானத்தை எடுக்கிறதோ அதையே தாமும் தமது முடிவாக எடுப்போம் என்ற சிந்தனையில் இ.தொ.கா. இருப்பதாகவே எமக்குப் படுகிறது. இந்த மௌனம் அதையே குறிப்பதாக பரவலாக தமிழ் வாக்காளர்கள் கருதுகிறார்கள். இவ்வளவு மோசமான நிலைக்கு இக்கட்சி தள்ளப்பட்டிருப்பதற்கு தலைமையே காரணம்.



இ.தொ.கா. தனது வாக்கு வங்கியின் பலம் என்ன என்பதை அவ்வப்போது பரீட்சித்துப் பார்க்க வேண்டிய தேவை உள்ளது. ஒரு கட்சியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஜம்இய்யதுஸ் ஷபாப் நிறுவனத்தின் அனுசரணையில் மூதூர் அந்நஹ்ழா இஸ்லாமிய சமூக ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இரத்ததான முகாம் அண்மையில் மூதூர் தள வைத்தியசாலையில் இடம்பெற்றது. மூதூர் தள வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் வீ.பிரேம் ஆனந்த் பரிசோதிப்பதையும் மக்கள் இரத்ததானம் வழங்குவதையும் படங்களில் காணலாம். படமும் தகவலும்: மூதூர் முறாசில்



கல்முனை சிவில் பாதுகாப்பு குழுவின் பிரதிபலன் சம்பந்தமான கலந்தாலோசனைக் கூட்டம் அண்மையில் கல்முனை இருதயநாதர் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் அம்பாரை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் கபில ஜெய சேகர உரையாற்றுவதையும் கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் காமினி தென்னக்கோன், கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.டபிள்யூ.ஏ. கபார் மற்றும் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். படமும் தகவலும்: றாசீக் நபாயிஸ்



தேசிய நுளம்பு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை முன்னிட்டு ஓட்டமாவடி பிரதேச செயலக பிரிவுகளில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நியமிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் அண்மையில் நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைககள் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது மக்களுக்கு விளக்கமளிக்கப்படுவதையும் வடிகான்கள் துப்பரவாக்கப்படுவதையும் படங்களில் காணலாம். படமும் தகவலும்: எம்.ரீ.எம். பாரிஸ்



இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் ஓட்டமாவடி மன்றத்தினால் நடத்தப்பட்டு வரும் குர்ஆன் வஸ்ஸுன்னா மஜ்லிஸ் சொற்பொழிவுத் தொடர் "சுவனம் நோக்கிய பாதையில் ரமழான் ஒரு பாக்கியம்" எனும் தலைப்பில் அண்மையில் ஓட்டமாவடி ஜும்ஆ மஸ்ஜிதில் நடைபெற்றது. இதில் அஷ்ஷெய்க் ஆர்.எம். இப்றாஹீம் அவர்கள் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

படமும் தகவலும்: எம்.எஸ். அப்துல் அஸீஸ்



முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் ஏற்பாட்டில் பெண்களின் உரிமை சம்பந்தமான பரிந்துரை செயலமர்வு அண்மையில் அமைப்பின் கல்முனை அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் வளவாளராக கலந்து கொண்ட அஷ்ஷெய்க் றவூப் ஸெய்ன் அவர்கள் விரிவுரை நிகழ்த்துவதையும் இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். படம்: றாசீக் நபாயிஸ்

# புரூணையில் சில நாட்கள்...

தொடர்-06



பஷீர் அலி
kinniyabasheerali@gmail.com

அப்போதுதான் காதைக் கிழிக்கும் அந்த சப்தம் கேட்டது...

எழுந்து உட்கார்ந்து கொண்டேன். 'சோவென' ஊற்றிக் கொண்டிருந்தது மழை. இடி முழக்கம் இன்னும் காதைக் கிழித்துக் கொண்டே இருந்தது.

தென் கிழக்காசிய நாடான புரூணை கடலால் சூழப்பட்ட ஒரு தீவு போன்று அமைந்திருப்பதாலும் அடர்ந்த காடுகளையும் பச்சைப் பசேலென்ற சோலைகளையும் கொண்டிருப்பதால் வருடத்தில் அதிக நாட்கள் மழையாகவே இருக்கம். பெரும்பாலும் மாலை வேளையில் மழை பெய்வது வழக்கமாக இருக்கும். நான் இப்படி சொல்வதால் "அப்போவ்...! சேரும் சகதியுமான அந்த நாட்டுக்குப் போகவே கூடாது" என்றெல்லாம் முடிவெடுத்து விடாதீர்கள்.

நாள் முழுக்க மழை பெய்தாலும் மழை விட்டு பத்தே நிமிடத்தில் குருவி குடிக்கக் கூடத் தண்ணீர் இருக்காது புரூணை வீதிகளில்! நமது நாட்டு நீர் வழங்கள் வடிகாலமைப்பு அமைச்சின் அதிகாரிகள் சிலரை புரூணைக்கு சுற்றுலா அனுப்ப வேண்டும் என்று எனது நாட்குறிப்பில் பதிந்து வைத்திருக்கிறேன்.

காலை 5.45 மணியளவில் தேனீர் குடிக்க வருமாறு அழைத்தார் அப்வர்தீன் சேர். சேருடன் நானும் இஸ்மத் அலியும் சாப்பாட்டு மேசையில் உட்கார்ந்தோம். சீஸ், படர், ஜாம், பாண் என சாப்பாட்டு மேசை நிறைந்திருந்தது. "சுத்த சுபஹோடு காலை சாப்பாடா?" என்று சேரிடம் கேட்டேன்.

"இல்லை காலைச் சாப்பாடு பிறகு! இது எங்கள் வழக்கம். நாம் மாலைதீவு, மலேசியா போன்ற நாடுகளில் பணி புரிந்த போதும் அதிகாலையிலேயே தேனீருடன் ஏதாவது லைட்டாக சாப்பிடும் பழக்கத்தை மேற்கொண்டிருக்கிறோம். இரவு முழுவதும் வயிற்றுக்குள் எந்த உணவுமே செல்வதில்லை. எழுந்தவுடன் ஏதாவது சாப்பிடா விட்டால் 'கேஸ்டிக்' போன்ற பிரச்சினைகள் வரக் காரணமாகிடும். அதனால்தான் இதனைப் பழக்கமாகவே ஆக்கிக் கொண்டோம்." இப்படி பேசிக் கொண்டிருக்கும் போதே தேனீரைக் கொண்டு வந்து வைத்தார் சேரின் மனைவி.

முற்றத்து மல்லிகை மணப்பதில்லை என்பதில் நம்நாட்டுத் தேயிலை நல்ல உதாரணம். நம்நாட்டுத் தேயிலையின் சுவையை அறிய வேண்டுமானால் எங்காவது ஒரு நாட்டுக்கு விமானம் ஏறிப் பறக்க வேண்டும். நான் சென்ற சில நாடுகளில் தேனீர் வாங்கிக் குடித்து



புரூணை சுல்தான் ஹஸன் அல் பொல்கியா
Hassanal Bolkiah

விட்டு பணம் கொடுக்கக் கவலைப்பட்டிருக்கிறேன்.

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்து இறங்கும் வெள்ளைக்காரர்கள் அங்குள்ள உணவுச் சாலையில் 'பிலேண் டீ' வாங்கிப் பருகிக் கொண்டிருப்பதைப் பல முறை அவதானித்த நான் 'பிச்சைக்காரர்கள்' என்று கூட மனசுக்குள் நினைத்திருக்கிறேன். ஆனால், வெள்ளைக்காரனுக்கு மணத்த நம் நாட்டு தேயிலைச் செடி நமக்கு இன்னும் முற்றத்து மல்லிகையாகத்தான் இருக்கிறது.

தேனீருக்குப் பின் சோபாவில் உற்கார்ந்த நானும் இஸ்மத் அலியும் ஸிஹானும் புரூணையில் நான் தங்கியிருக்கும் நாட்களில் பார்க்க வேண்டிய இடங்கள் குறித்தும் சந்திக்க வேண்டிய நபர்கள் குறித்தும் கலந்துரையாடினோம்.

எங்கள் தலைவராக இஸ்மத் அலி ஏகமனதாகத் தெரிவானார். புரூணை முழுக்க எந்த சந்து பொந்தில் குப்பை கொட்டும் இடம் எங்கிருக்கிறது என்பது தொட்டு சுல்தானின் மாளிகையின் பிரதான மண்டபம் வரை ஒரு வீதி தவறாமல் புரூணையைக் கரைத்துக் குடித்துள்ள ஸிஹானை செயலாளராகவும் வழி காட்டும் சாரதியாகவும் தெரிவு செய்தோம். பொருளாதார அமைச்சராகவும் தானே இருக்க வேண்டும் என்பதை அவரே கேட்டு வாங்கிக் கொண்டார்.

இன்றிலிருந்து புரூணையை சுற்றிப் பார்க்க இருப்பதனால் புரூணையைப் பற்றிய மேலோட்டமான விளக்கம் ஒன்றை எனக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தேன். அதனை ஏற்றுக் கொண்ட தலைவர் இஸ்மத் அலி, புரூணை பற்றி குறிப்பொன்றைத் தந்தார்.

'புரூணை தாருஸ்ஸலாம்' என அழைக்கப்படும் தென் கிழக்காசிய நாடான புரூணை போர்னியோ தீவிலுள்ள ஒரு நாடாகும்.

கடல் மார்க்கமாக சீன எல்லையையும் தரை மார்க்கமாக மலேசியாவையும் எல்லைகளாகக் கொண்ட புரூணையின் சனத்தொகை வெறும் நான்கு இலட்சம் பேர்தான்!

நமது நாட்டை விட 10 மடங்கு சிறிய நாடான புரூணையில் மூன்று மாவட்டங்களே உள்ளன. 14ஆம் நூற்றாண்டில் இருந்து மன்னராட்சி நிலவும் புரூணையின் மன்னர், 'சுல்தான்' என அழைக்கப்படுகிறார்.

மனித அபிவிருத்தி சுட்டெண்ணில் தென் கிழக்காசிய நாடுகளில் சிங்கப்பூருக்கு அடுத்த நிலையில் புரூணை உள்ளமை குறிப்பிடத்தக்கது.

182 செல்வந்த நாடுகளின் பட்டியலில் ஐந்தாவது இடத்தில் இருக்கும் புரூணையின் பிரதான வருமானம் பெற்றோலியமும் எரிவாய்வுமாகும்.

இந்தக் குறிப்பைச் சொல்லி முடிப்பதற்குள் 'அங்கு' போய் நின்றது கார்.

நிமிர்ந்து பார்த்த நான் மலைத்துப் போனேன். என்ன ஆச்சரியம்...!

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே.எம். அஸீம் (நளீமி)
www.azeemzain.org




# Blogger: கனவு நனவானது

சின்னச் சின்ன ஆசைகள் கனவாகும், நிஜமாகும். அந்நாளில் மனம் பூரிக்கும். சின்னஞ் சிறுசுகளின் ஆசைகளும் அப்படித்தான். சிறுசுகளின் ஆசைகளின் அலங்காரம்தான் இன்றைய சமூக வலைத்தளங்கள் (Social Media). Facebook இதற்கு நல்ல உதாரணம். அதுபோல இன்னுமொரு இளைஞனின் கனவு நனவானதுதான் நாம் இன்று எழுதிக் கொட்டிக் கொண்டிருக்கும் Blogger (வலைப் பூ).

Blogger பயன்படுத்துபவரா நீங்கள்? ஆம், என்றால் அடுத்த பந்தியை வாசியுங்கள். இல்லை என்றால் அதனைத் தெரியாதவர்களுக்காக சில வரிகள் சொல்கிறோம். இணயதளங்கள் போலவே, சில நிறுவணங்கள் இணயத்தில் இலவசமாக சில பக்கங்களை பாவனையாளர்களுக்கு வழங்குகிறார்கள். அதில் நீங்கள் உங்களுக்குத் தெரிந்தவற்றை எழுதலாம். மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளலாம்.

பள்ளிப் படிப்பில் ஆர்வம் குறைந்த எவான் வில்லியம்ஸ் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். குடும்பத் தொழில் விவசாயம். படித்து என்ன செய்வது? ஆனால், விவசாயத்திலும் ஆர்வம் இல்லை. அப்படியென்றால் ஏதாவது பயனுள்ளதாகச் செய்ய வேண்டும். கிராமத்திலிருந்து நகரத்திற்குப் போய் அங்கு நல்ல உத்தியோகம் பார்க்கலாம். பிறரின் கீழ் இருந்தும் பணியாற்ற விருப்பமில்லை. ஹூம்... அப்படியென்றால் என்ன செய்வது?

வீட்டில் சும்மா இருந்து ஓசி சோறு சாப்பிடலாம் அல்லது தனியாக தொழில் தொடங்கலாம்.

தனியாக தொழில் தொடங்குவதையே தேர்ந்தெடுத்தான் எவான் வில்லியம்ஸ். தொட்டதெல்லாம் பொன்னாகும். தொடங்கிய மாத்திரத்தில் தொழில் ஓஹோ என நடந்தது. கொள்ளை லாபம். அப்படியொன்றுமில்லை. புத்தாக்க சிந்தனை எப்போதும் ஓஹோ என பணம் சம்பாதித்துத் தராது. நட்டத்தின் மேல் நட்டம். கடனின் மேல் கடன்.

இப்படித்தான் ஆரம்பமானது Blogger இன் வரலாறு. தன்னைப் போல் ஆர்வமுள்ளவர்கள் வலைப் பூ வில் எழுத வேண்டும். பணம் செலுத்தி எழுதுவதெல்லாம் பாவனையாளர்களால் இயலாது. இலவசமாக வழங்க வேண்டும். அதற்கு நானென்ன குபேரனா? என்ன தான் சிந்தித்தாலும் எனது கனவு Blogger வாழ வேண்டும். இதுதான் எவான் வில்லியம்ஸ் இன் கனவு.

அங்கு, இங்கு என பல தொழில்கள் செய்து ஒன்றும் சரிவராததால் தனியான ப்றொஜக்ட் மெனேஜ்மன்ட் சொப்ட்வெயார் கம்பனியை தொடங்கி நடத்தினார் எவான் வில்லியம்ஸ். அப்போது உதித்த யோசனைதான் தனது கம்பனியில் பணியாற்றுபவர்கள் ஒரு பட்டனைக் கிளிக் பண்ணுவதன் மூலம் தமது கருத்துக்களை இணயத்தில் பதிவேற்ற வேண்டும் என்பது. அதனை திறமையாக செய்து முடித்தார் எவான் வில்லியம்ஸ்.

பின்னர் இதனை பொதுமக்கள் பாவனைக்கு விட சிந்தித்தார். பாவனைக்கு விட்டபோது 100, 200 என தொடங்கி இலட்சம் பல லெட்சம் ஆனது. பல இலட்சம் பேருக்கு இலவச சேவையா? எப்படி வழங்குவது திண்டாடினார் எவான் வில்லியம்ஸ்.


பேசாமல் இழுத்து மூடி விடுவோமா? அல்லது யாருக்காவது விற்று விடுவோமா? இரண்டும் செய்ய முடியாமல் முடிவெடுத்தார் எவான் வில்லியம்ஸ். காரணம் இதனை வாங்குபவர்கள் தனது கனவு நிஜமாகும் வகையில் இதனை வளர்த்தெடுப்பார்களா என்பதே! ஆம், அப்போது அவருக்கு அறிமுகமான நண்பர் ஒருவர் மூலம் கூகுளிடம் இதனை விலை பேசினால்.....?

ஆம், நண்பரின் ஆலோசனைக்கேற்ப கூகுளிடம் விலை பேசப்பட்டது. ப்ளாகரின் வளர்ச்சியை அவதானித்துக் கொண்டிருந்த கூகுள் அதனை வாங்க முன்வந்தது மட்டுமல்ல, எவான் வில்லியம்ஸ் ஐயும் அங்கு பணிக்கமர்த்திக் கொண்டது.

எவான் வில்லியம்ஸின் கனவு நிறைவேறியது. ஆனால், சிறைப்பட்டாரா எவான் வில்லியம்ஸ். சுவாரசியமான தகவல்களுடன் அடுத்த இதழில்...




# பெயர் வந்தது எப்படி




வலைப்பதிவுக்கு ஆங்கிலத்தில் Web Log என்பர். அதனைச் சுருக்கி Blog என மாற்றினார் எவான் வில்லியம்ஸ். பின்னர் அதற்கு Blogger எனப் பெயரிட்டார்.

Blogger போன்ற மற்றுமொரு வலைப்பூ தான் Tumblr. இதனை அண்மையில் Yahoo. நிறுவனம் வாங்கிக் கொண்டது.

இப்போது Blogger ஆனது Google நிறுவனத்தின் உடமையாகவும் Tumblr ஆனது Yahoo நிறுவனத்தினது உடமையாகவும் மாறிட்டது.

அதேபோலத்தான், டுவிட்டருக்குப் பெயர் வைக்கும்போதும், FriendStalker என்று பெயர் வைக்கலாம் என்றார் ஒருவர்.

"ரொம்ப பெரிய பெயர். ஷோர்ட் எண்ட் ஸ்வீட்டா ஒரு பெயர் வைக்கலாமே!" என்றார் மற்றொருவர்.

"Twitch எப்படி?"

"இது ஷோர்டா இருக்கு. ஆனால், நமக்குப் பொருத்தமாக இல்லையே" என்று கூறவும், அகராதியை எடுத்து Twitch ஐத் தேட ஆரம்பித்தார்.

அப்போது Twitch க்குப் பக்கத்தில் இருந்த Twitter என்ற பெயர் அவரது கண்ணை இழுத்தது.

"டுவிட்டர் என்ற பெயர் எப்படி?" என்று கேட்டார்.

"அப்படின்னா, என்ன அர்த்தம்?" என்று கேட்டார் ஒருவர்.

"டுவீட் என்பது பறவைகள் போடும் சிறிய சத்தம். கீச் கீச் என்பது போன்ற சின்ன செய்தி" என்றார். பெயர் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதுவும் பெரிதென்று Twttr.com என பெயர் பதிவு செய்யப்பட்டது. இன்று Twitter.com என்றே பயன்படுத்தப்படுகிறது.

**சமூக ஊடகங்கள் (Social Media) பற்றிக் கற்க ஆர்வமாக உள்ளீர்களா? உங்கள் தொழில் மற்றும் கல்வியை சமூக ஊடகங்கள் மூலம் முன்னேற்ற விரும்புகிறீர்களா?**

f SHARE tumblr. Blogger LinkedIn

அப்படியாயின், **Just Media Foundation** நடத்தும் ஒருநாள் சமூக ஊடக செயலமர்வில் கலந்து கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு: 0777 871758, 071 939 2121

# உலகில் கழிப்பறையை விட செல்போன்கள்தான் அதிகம்!



ஐ.நா. நிறுவனம் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் பின்வரும் அதிர்ச்சித் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

உலகில் 600 கோடி மொபைல் போன்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால், கழிப்பறை வசதிகளோ 450 கோடிப் பேருக்குத்தான் இருக்கின்றன. இந்தியாவில் 40 கோடிப் பேருக்குத்தான் சரியான கழிவறை வசதி உள்ளது. ஆனால், 100 கோடி மொபைல் போன்கள் இந்தியாவில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைப்பேறு இல்லாதவர்களுக்கு மருத்துவத்துறையில் தீர்வுண்டு

## - டாக்டர் வாணி சுந்தரபாண்டியன் -



புகைத்தல், மதுபானம், போதை வஸ்துப் பாவனை, மன அழுத்தம் போன்றன ஆண்மைப் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் அவர்களது அனைத்து வாழ்க்கையிலும் இவை தாக்கம் செலுத்தும். இவ்விடயத்தில் ஆண்கள்கவனமாக செயற்பட வேண்டிடும் என தமிழ்நாடு ஜனனம் கருவூட்டல் நிலையத்தின் (Jananam Fertility Centre) நிறை வேற்றுப் பணிப்பாளரும் செயற்கை கருவூட்டல் சிகிச்சை நிபுணருமான டாக்டர் வாணி சுந்தரபாண்டியன் தெரிவித்தார்.

இலங்கையில் அப்ரார் கல்வி நிறுவனத்துடன் இணைந்து பிள்ளைப் பேற்றுப் பிரச்சினை உள்ளவர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்துவதற்கு அண்மையில் இலங்கை வந்திருந்தார். அவரிடம் மேற்கொண்ட நேர்காணலியே அவர் இவ்வாறு தெரிவித்தார். டாக்டர் வாணி சுந்தரபாண்டியன் செயற்கைக் கருவூட்டல் துறையில் அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளில் விசேடகற்கைகளை மேற்கொண்டு 10 வருடங்கள் அந்நாடுகளில் மருத்துவத் துறையில் பணியாற்றிய அனுபவம் கொண்டார். அவருடனான நேர்காணலை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.

<u>எங்கள் தேசம்: குழந்தையின்மை ஏற்படுவதற்கான காரணங்கள் என்ன?</u>

முன்பு சமூகத்தில் குழந்தையின்மைக்கு பெண்களுக்குத்தான் பிரச்சினையிருக்கும் என்ற மனப்பதிவு காணப்பட்டது. ஆனால், தற்போது ஆண்களுக்கும் பெண்களுக்கும் குழந்தைப் பேறின்மைக்கான பிரச்சினைகள் உண்டென்பது கண்டறியப்பட்டுள்ளது.

குழந்தைப் பேறின்மைக்கு ஆண்-பெண் இருபாலாரிடத்திலும் பல்வேறு காரணங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. குறிப்பாக, பெண்களுக்கு கர்ப்பப் பையில் கட்டி, கர்ப்பப் பை வளர்ச்சியின்மை, சினைப்பை பிரச்சினை, கரு முட்டை எண்ணிக்கை குறைவு, கருக் குழாயில் அடைப்பு, கர்ப்பப் பையில் தொற்று நோய் போன்றவை காணப்படுகின்றன. இவை பெண்கள் குழந்தைப் பேற்றினை அடையாமைக்கான காரணங்களாகும்.

ஆண்களுக்கு விந்தில் ஆண் அணு எண்ணிக்கை குறைவாக இருக்கலாம். சில நேரம் விந்தில் ஆண் அணு இல்லாமல் கூட இருக்கலாம். விந்தணுவின் பீச்சுத் திறன் இல்லாமை, உயிர் அணுக்கள் வெளியேறும் பாதையில் அடைப்புக்கள், விதை வீக்கம் போன்றன ஆண்களுக்குள்ள மிக முக்கியமான பிரச்சினைகளாகும்.

<u>எங்கள் தேசம்: இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுவதற்கு மூல காரணங்கள் எவை?</u>

தற்போது இந்தியாவைப் பொறுத்தவரை கூட, அதிகளவான பெண்கள் காலம் கடந்துதான் திருமணம் செய்து கொள்கிறார்கள். குறிப்பாக, 24 வயதில்தான் துரிதமாக கருத்தரிக்கக் கூடிய வாய்ப்பு (Quick Fertility age) அதிகம் உள்ளது. ஆனால், அந்த வயதை விட்டு மேற்படிப்பு மற்றும் தொழில் என்று சொல்லி 30 வயது வரை திருமணத்தை பிற்போடுவதால் கருத்தரிப்பதற்கான பிரச்சினை பெண்களுக்கு ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

ஆண்களுக்கு மன அழுத்தம், புகைப் பழக்கம், மது அருந்துதல், தொடர்ந்து மடிக் கணினிகளை வைத்துக் கொண்டு வேலை பார்த்தல், துரித உணவுப் பழக்கம் (Fast Food), காற்றில் இருக்கும் நுண்ணங்கிகள் தொற்றுதல், அளவுக்கு அதிகமான உடற்பயிற்சி என்பன ஆண்களின் விந்தில் உயிர் அணுக்களின் எண்ணிக்கையைக் குறைத்து விடுகின்றன. இவை தவிர, ஆண்களுக்கு 20 வருடங்களுக்கு முன்பு இருந்ததை விட தற்போது விந்தணுக்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது என்பது ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

<u>எங்கள் தேசம்: இயற்கை வழிமுறைகள் அல்லாது மருத்துவத்துறையில் கருத்தரிப்புக்கான வேறு வழிமுறைகள் உண்டா?</u>

முன்பெல்லாம் குழந்தை இல்லையென்றால் அப்படியே விட்டு விடுவார்கள். ஆனால், தற்போது அதற்குத் தீர்வு இருக்கிறது. மருத்துவத்துறையில் குழந்தை பெற்றுக் கொள்வதற்கான பல வழிகள் காணப்படுகின்றன.

முதலில், புதிய தம்பதிகளுக்கு திருமணமாகி ஒரு வருடத்திற்குள் பிள்ளைப்பேறு இல்லாமலிருந்தால் சிகிச்சை வேண்டாம் என்றே சொல்வோம். அதுவும் 35 வயதுக்குக் குறைவான வயதையுடைய, உடலில் பிரச்சினைகள் இல்லாதவர்களை சுயமாக முயற்சி எடுக்குமாறு நாம் அறிவுறுத்துவோம்.

எவ்விதமான பிரச்சினைகளும் இல்லாத தம்பதிகள் ஒரு மாதத்தில் கருத்தரிக்கும் வாய்ப்பு பெரும்பாலும் 20 வீதம் ஆகும். அதனால்தான் உலகிலுள்ள எல்லா உயிரினங்களிலும் மனித கருத்தரிப்புதான் மிகவும் பலவீனமானது என்று சொல்வார்கள். தம்பதிகள் தொடர்ந்து ஒரு வருடத்திற்கு முயற்சி செய்வார்கள் என்றால் 85 வீதம் கருத்தரிப்பதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளன. இதில் எஞ்சியிருக்கின்ற 15 வீதமானவர்களைத்தான் நாங்கள் பரிசோதிக்க வேண்டியுள்ளது.

ஒவ்வொரு தம்பதியினருக்கும் உள்ள பிரச்சினையைப் பொறுத்து சிகிச்சை வேறுபடுகின்றது. கருக் குழாயில் அடைப்பு ஏற்பட்டிருந்தால் அதனை அகற்ற முயற்சி செய்வோம். அப்படி முடியாத பட்சத்தில் பரிசோதனைக் குழாய்க் குழந்தை (Test tube baby) முறையைத்தான் செய்ய வேண்டும். கர்ப்பப் பையில் கட்டியென்றால் அதனை அகற்றி விட்டு சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

> "எவ்விதமான பிரச்சினைகளும் இல்லாத தம்பதிகள் ஒரு மாதத்தில் கருத்தரிக்கும் வாய்ப்பு பெரும் பாலும் 20 வீதம் ஆகும். அதனால்தான் உலகிலுள்ள எல்லா உயிரினங்களிலும் மனித கருத் தரிப்புதான் மிகவும் பலவீனமானது என்று சொல்வார்கள். தம்பதிகள் தொடர்ந்து ஒரு வருடத்திற்கு முயற்சி செய்வார்கள் என்றால் 85 வீதம் கருத்தரிப்பதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளன. இதில் எஞ்சியிருக்கின்ற 15 வீதாமானவர்களைத்தான் நாங்கள் பரிசோதிக்க வேண்டியுள்ளது."

ஆண்களைப் பொறுத்தவரையிலும் ஆண் விந்தணுக்களின் எண்ணிக்கை ஓரளவுக்குக் குறைவாக இருந்தால் intra uterine insemination(IUI) எனும் அடிப்படை சிகிச்சையை அளிக்க முடியும். அதாவது, ஆணின் விந்தை எடுத்து கர்ப்பப் பையில் வைப்பது. ஆணின் விந்தில் ஆண் அணுக்கள் மிகவும் குறைவாக இருந்தால் Test tube baby சிகிச்சை செய்தல். இதில் இரண்டு விதமான முறைகள் உள்ளன. ஒன்று, In vitro fertilizaion(IVF). அதாவது பெண்களுக்கு ஊசி மூலம் நிறைய கரு முட்டைகளை உருவாக்கி அதை சினைப் பையிலிருந்து வெளியிலெடுத்து ஒவ்வொரு கரு முட்டையிலும் 100 ஆயிரம் விந்தணுக்களை வைத்து தானாகவே கரு உண்டாக வைத்தல். இன்னும் விந்தணுக்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்தால் அந்த கரு முட்டைக்கு விந்தணுவை எடுத்து உட்செலுத்துவது (Inject). இதை Intra cytoplasmic sperm injection(ICSI) என்று கூறப்படும்.

**நேர்காணல்: ஏ. முஹம்மத் பாயிஸ்**
**படப் பிடிப்பு: ஷபீக் ஹுஸைன்**

சில ஆண்களுக்கு விந்தில் அணுக்களே இருக்காது. அவ்வாறானவர்களுக்கு விதையில் இருக்கலாம். ஆண்களின் விதையிலிருந்து உயிர் அணுக்களை எடுத்து அதை உட்செலுத்துவதனூடாக (Inject) பெண்களின் கரு முட்டையோடு கருக்கட்ட வைக்கும் சிகிச்சை முறையாகும். இதை Surgical Sperm Recovery (PESA) என்று சொல்லப்படும். இவ்வாறான முறைகளினூடாக இன்று குழந்தையில்லாதவர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.

<u>எங்கள் தேசம்: இவ்வகையான சிகிச்சை முறைகளினூடாக ஏதும் பாதிப்புக்கள் உள்ளனவா?</u>

இச் சிகிச்சை முறைகளினூடாக பாத்திப்புக்கள் எதுவுமில்லை. பிறக்கும் குழந்தைகளுக்கும் எந்தவித அசாதாரண நிலைமையும் (abnormality) இருப்பதில்லை. ஏனைய குழந்தைகளைப் போன்றுதான் அவர்களும் இருப்பார்கள். மருத்துவத்துறையில் மிகக் குறைவான பாதிப்புகளைக் கொண்ட பகுதி இந்தப் பிரத்தியேக கருக்கட்டல் பகுதிதான்.

இவ்வாறான செயற்கை சிகிச்சையினால் முதல் சோதனைக் குழாய்க் குழந்தை பிறந்து 33 வருடமாகி விட்டது. அது இன்றும் இயல்பான நிலையோடுதான் இருக்கிறது. அவ்வாறுதான் அதன் பிறகு பிறந்த குழந்தைகளும் இருக்கின்றன. இருப்பினும், இம்முறைகளினூடாக ஒரு தாக்கம் இருக்கிறது. சிலருக்கு இரட்டைக் குழந்தைகள் பிறக்கும். ஏன் என்றால் சிறந்த பலனைப் பெறுவதற்காக நாங்கள் இரண்டு கருக்களை வைப்போம். இதன் போது சில நேரங்களில் இரண்டு கருக்களும் வளர ஆரம்பிக்கலாம். இரண்டும் ஆண்,



அல்லது இரண்டும் பெண் அல்லது ஆண்-பெண் என உருவாகும். இதனை பாதிப்பு என்று சொல்ல முடியாது. இது சிகிச்சையின் பிரதிபலிப்பு. குழந்தையே இல்லாதவர்களுக்கு இரண்டு குழந்தைகள் கிடைத்தால் மிகவும் சந்தோஷப்படுவார்கள் அல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

<u>எங்கள் தேசம்: தம்பதிகளின் ஒருவரிடத்தில் உயிர் அணு முற்றாக இல்லாத பட்சத்தில் அதனை உயிர் அணுக்கள் தானம் செய்பவர்களிடமிருந்து பெற்று கருக் கட்டும் செயற்பாடுகள் உலகளவில் மேற் கொள்ளப்படுகிறது. இது பற்றி உங்களது கருத்து என்ன?</u>

இவ்வாறான முறைகள் எல்லா நாடுகளிலும் பயன்படுத்தப்படுவதில்லை. ஆணுக்கு விந்தில் அல்லது விதையில் அணுக்களே இல்லை என்று அறியப்பட்டால் சில தம்பதிகள் Sperm Donners இடமிருந்து விந்து அணு வாங்கி வைக்கலாம் என்று சொல்வார்கள். ஆனால், அது ஒவ்வொரு மதத்தைப் பொறுத்துள்ளது. எல்லா மதத்திலும் இது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்காது. இது ஒரு விதமான சிகிச்சை முறை. அதேபோல சில பெண்களுக்கு கரு முட்டைப் பிரச்சினை இருக்கும். வழமையாக பெண்களுக்கு 50 வயதில் கரு முட்டை தீர்ந்து விடும். சில நேரங்களில் 23 அல்லது 25 வயது இளமைப் பருவங்களிலும் பெண்களுக்கு கரு முட்டை இல்லாமல் போய்விடும். அது அவர்களுடைய உடல் அல்லது மரபணு ஆகியவற்றைப் பொறுத்து அமையும். அவ்வாறானவர்களுக்கு சில நேரம் கரு முட்டை தானம் செய்பவர்களிடமிருந்து வாங்கி வைக்க வேண்டிய தேவை ஏற்படும்.

இன்று கரு முட்டை, விந்தணு போன்றவற்றை பணம் பெற்று தானம் செய்பவர்கள் உள்ளனர். விந்தணு மற்றும் கரு முட்டை ஆகியவற்றை தானம் செய்பவர்களிடமிருந்து பெற்று குறித்த பெண்ணுடைய கருப்பையில் கருக்கட்ட வைப்பதாகும். இது போன்று பல முறைகள் காணப்படுகின்றன.

இப்படியான முறைகளை குறிப்பாக கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், இந்துக்கள் போன்றவர்கள் செயற்படுத்தமாட்டார்கள். இது அவர்களது மதத்தில் ஏற்றுக் கொள்ளப் படாததாக இருக்கும். ஆகவே, நாங்கள் வைத்தியர்கள் என்ற முறையில் அதனை மதிக்கிறோம்.

<u>எங்கள் தேசம்: இலங்கையில் உள்ளவர்களுக்கு செயற்கை கருவூட்டல் மருத்துவ சிகிச்சை தொடர்பான விழிப்புணர்வு எவ்வாறு உள்ளது?</u>

இலங்கையில் சிலருக்கு செயற்கைக் கருவூட்டல் மருத்துவ சிகிச்சை தொடர்பில் தெளிவு இருக்கிறது. சிலருக்கு அது பற்றி தெளிவுபடுத்த வேண்டிய தேவையும் ஏற்படுகிறது. ஒரு காலத்தில் சிலர் குழந்தை பெற முடியவில்லை என்றால் சில அனுஷ்டானங்களை மேற்கொள்வர். இந்தியாவில் இப்படியான அனுஷ்டானங்களை செய்பவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு போதியளவு விழிப்புணர்வு இல்லை என்று தான் சொல்ல வேண்டும். ஆனால், தற்போது இவ்வாறான நிலை மாறிவருகிறது. குழந்தை பெறுவதில் பிரச்சினை உள்ளவர்கள் நேரடியாக சிகிச்சைக்கு வரத் தொடங்குகிறார்கள். இலங்கையில், மக்கள் எவ்வாறு உள்ளார்கள் என்பது தெரியாது. ஆனால், படித்தவர்கள் நிறையப்பேர் என்னிடம் சிகிச்சைக்காக வருகிறார்கள்.

<u>எங்கள் தேசம்: இயற்கையாக குழந்தைப் பேறினைப் பெறுவதில் ஏற்படும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?</u>

பெண்கள் காலத்தைப் பிற்போடாமல் நேரத்துக்கு திருமணம் செய்து கொள்ள வேண்டும். ஆனால், இன்று பெண்கள் படித்து நல்ல நிலையை அடைய வேண்டும்; சம்பாதிக்க வேண்டும் என்று திருமணத்தை தள்ளிப் போடுகிறார்கள். இது உண்மையில் அவர்களது குழந்தைப் பேறுக்கு எதிர்காலத்தில் பிரச்சினையை ஏற்படுத்தும். மேலும், உணவில் மிகவும் கவனம் தேவை. அதிகளவு இன்றி அளவோடும் சுகாதாரமானதாகவும் உணவை எடுத்துக் கொள்ள வேண்டும். அதே போன்று உடற் பயிற்சியையும் அளவோடு செய்து கொள்வது நல்லது.

ஆண்களைப் பொறுத்தவரைக்கும் புகைத்தல், மதுபானம், போதைவஸ்துப் பாவனை, மன அழுத்தம் போன்றன ஆண்மைப் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் அவர்களது அனைத்து வாழ்க்கையிலும் இவை தாக்கம் செலுத்தும். இவ்விடயத்தில் ஆண்கள் கவனமாக செயற்பட வேண்டியுள்ளது.

<u>எங்கள் தேசம்: உங்களது 'ஜனனம் கருவூட்டல் நிலையம்' தொடர்பாக விளக்க முடியுமா?</u>

ஜனனம் நிறுவனத்தை 2007இல் சென்னையில் ஆரம்பித்தோம். இது கருவூட்டலுக்கு விசேடமாக உருவாக்கப்பட்ட வைத்தியசாலை. எமது நிறுவனத்தில் Clean Room Lab இருக்கிறது. அதாவது இங் கிலாந்தில் கிட்டத்தட்ட 6 Clean Room Lab அளவில் தான் இருக்கிறது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரைக்கும் எங்களிடம் மாத்திரம் தான் Clean Room Lab இருக்கிறது. அத்தோடு, எமது வைத்தியசாலைக்கு இங்கிலாந்து தர நிர்ணய கம்பனி ஒன்றினால் தரச் சான்றிதழ் வழங்கப் பட்டுள்ளது.

கருவுக்கு ஆரம்பத்தில் நோய் எதிர்ப்பு சக்தி இருக்காது. கருவை நாங்கள் வெளியில் 5 நாட்கள் வைத்து பாதுகாத்து வளர்க்க வேண்டியுள்ளது. அதற்கு வெப்பநிலை, வெளிச்சம், காற்று என்பன மிகவும் கட்டுப் பாட்டுடனும் சுகாதாரமாகவும் வழங்க வேண்டியுள்ளது. அதற்கான முழு ஏற்பாடுகளையும் எமது வைத்தியசாலையில் நாம் கொண்டிருக்கிறோம். அதேபோன்று கருவுறுதல் நிபுணர்கள், நீரிழிவு நோய் சிகிச்சை வல்லுநர்கள், பொது வைத்தியர்கள், அறுவை சிகிச்சை நிபுணர்கள், மரபணு ஆலோசகர்கள், பயிற்றப்பட்ட தாதிமார்கள் எனப் பல ஆளணியினர்களையும் கொண்டுள்ளது. மேலும், எமது வைத்தியசாலை முழுமையாக குழந்தையில்லாதவர்களுக்கு சிகிச்சை வழங்குவதாக உள்ளது. அதற்கான அனைத்து வசதிகளையும் இது கொண்டிருக்கிறது.

<u>எங்கள் தேசம்: ஜனனம் நிறுவனத்தினூடாக இலங்கையில் எவ்வகையான செயற்பாடுகளைச் செய்கிறீர்கள்?</u>

இலங்கையில் எமது நிறுவனத்திற்கென ஒருங்கிணைப்பு நிலையம் இருக்கிறது. அதாவது அப்ரார் நிலையத்துடன் இணைந்து எமது செயற்பாடுகளை மேற்கொள்கிறோம். இங்கு குழந்தையில்லாத தம்பதிகளுக்கு அறிவூட்டல் கருத்தரங்குகளை செய்து வருகிறோம். குறிப்பாக, குழந்தைப் பேற்றுப் பிரச்சினை உள்ளவர்களுக்கு சரியான விளக்கங்களையும் அவர்களுக்கான செயற்பாட்டுத் திட்டங்களையும் வழங்குகிறோம். அத்தோடு, எம்மிடம் வரும் தம்பதிகளுக்கு அவர்களது நிலைமைகளுக்கு ஏற்ப இலங்கையில் அல்லது இந்தியாவில் சிகிச்சை பெறுவதற்கான வழிகாட்டல்களையும் நாம் வழங்கி வருகிறோம்.

**பெண்கள் காலத்தைப் பிற்போடாமல் நேரத்துக்கு திருமணம் செய்து கொள்ள வேண்டும். ஆனால், இன்று பெண்கள் படித்து நல்ல நிலையை அடைய வேண்டும்; சம்பாதிக்க வேண்டும் என்று திருமணத்தை தள்ளிப் போடுகிறார்கள். இது உண்மையில் அவர்களது குழந்தைப் பேறுக்கு எதிர் காலத்தில் பிரச்சினையை ஏற்படுத்தும்.**

## ஊரைச் சுற்றி...

# காவல் காக்கிறதென்பது சும்மாவா?

"ஆட்ட, மாட்ட கட்டி வெச்சி சரியா பாதுகாக்கலாம்; மனிசன காக்குறது என்பது சும்மா காரியமா?"

அவர் கேட்ட கேள்வியிலேயே 'செக்கியூரிட்டி' தொழிலின் கஷ்டத்தைப் புரிந்து கொள்ள முடிந்தது.

"யார சந்திக்கனும்? ஒங்க நேம் என்ன?"

எனக் கேட்டு விட்டு அனுமதி கிடைத்தவுடன் கேற்றைத் திறந்து உள்ளே அனுப்புவதும், அங்குள்ள பொருட்களைப் பாதுகாத்துக் கொண்டிருப்பதும்தான் அவரது தொழில்.

கொழும்பில் தனியார் நிறுவனமொன்றில் செக்கியூரிட்டி கடமை பார்க்கும் செய்லாப்தீன் நானாவை சந்தித்து உரையாடினோம்.

"நான் கடந்த மூன்று வருடங்களாக இந்த நிறுவனத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றுகிறேன். நான் இந்த நிறுவனத்தால் வேலைக்கு அமர்த்தப் படவில்லை. செக்கியூரிட்டி கம்பனிகள் இருக்கின்றன. நாம் அந்தக் கம்பனிகளுக்கே இணைத்துக் கொள்ளப்படுவோம். பின்னர் அவர்கள் வெவ்வேறு இடங்களுக்கு எங்கலை சப்ளை பண்ணுவார்கள். என்னை கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் தற்போது வேலை பார்க்கும் இந்த நிறுவனத்துக்கு காவலாளியாக அனுப்பினார்கள். அன்றிலிருந்து இங்கேயே வேலை பார்க்கிறேன்"

"அப்படியானால் உங்களுக்கு சம்பளம் தருவது யார்?"

"நான் வேலை பார்க்கும் இந்த நிறுவனத்துக்கும் எமது சம்பளத்துக்கும் தொடர்பில்லை. இவர்கள் எங்கள் செக்கியூரிட்டி கம்பனியுடன் ஒப்பந்தம் செய்திருப்பார்கள். கொடுப்பனவுகளை அங்கேயே செலுத்துவார்கள். எமக்கு கம்பனியிலிருந்துதான் சம்பளம் வரும்.

நான் 9 வருடங்களாக ஹார்ட்வெயார் ஒன்றில் இரும்பு தூக்கிக் கொண்டிருந்தேன். செக்கியூரிட்டி வேலை அதைவிட இலகுவாக இருக்கும் என்று இதில் இணைந்து கொண்டேன. ஹ்ஹீம்.. அது எங்கே? கொஞ்சம் ரெஸ்ட் கிடைக்கிறது அவ்வளவுதான். மற்றப்படி இரும்பு தூக்குறத விட கஷ்டம் மனிசன பாதுகாக்குறது."

என்று புலம்பும் செய்லாப்தீனிடம் ஒரு நாளைக்கு எத்தனை மணி நேரம் கடமை பார்க்கிறீர்கள் என்று கேட்டோம்.

"நான் மட்டுமில்ல, இலங்கையில் உள்ள எல்லா செக்கியூரிட்டிகளும் பன்னிரெண்டு மணித்தியாலயங்கள் வேலை செய்தே ஆகனும்.

சிக்ஸ் டு சிக்ஸ். பகல் டியூட்டி என்றால் காலை 6 மணி முதல் மாலை 6 மணி மட்டிலும் இரவு டியூட்டி என்றால் மாலை 6 மணி முதல் மறுநாள் காலை 6 மணி வரையிலும் சிப்ட் அடிப்படையில் வேலை செய்யனும்"

"இந்த நிறுவனங்களில் உள்ள ஏதாவது பொருட்கள் தொலைந்து விட்டால் நமது கதை தொலைந்ததுதான் போங்க!" என்று கூறி சிரிக்கும் செய்லாப்தீன் அதற்கு விளக்கம் சொன்னார்.



இந்த நிறுவனங்களில் பொருட்களுக்கு நாங்களும் எங்கள் செக்கியூரிட்டி கம்பனியும்தான் பொறுப்பு கூற வேண்டும். யாராவது எங்கள் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு இங்குள்ள பொருட்களை அபேஸ் பண்ணிக் கொண்டு போயிட்டா, எங்கள் சம்பளத்துக்கு ஆப்புத்தான்" என்கிறார் செக்கியூரிட்டி செய்லாப்தீன்.

நமக்காக இன்னுமொரு திகில் அனுபவத்தையும் சொல்கிறார் கேளுங்கள்!

இந்த நிறுவனம் பராவாயில்லை. சில வருடங்களுக்கு முன்னர் நான் சில வாரங்கள் கொழும்பு பெரியாஸ்பத்திரி மோட்சரியில் (சவச்சாலையில்) செகியூரிட்டியாக அமர்த்தப்பட்டிருந்தேன் என்னு டைய காலமாக்கும் நைட் டியூட்டியே கிடைத்தது.

'அரண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்பது போல, நாய் குரைத்தாலும் குலை நடுங்கும் பயம். எனது செக்கியூரிட்டி தொழில் காலத்தில் ஒரு ஷெகன் கூட கண் மூடாமல் காவல் பார்த்தது மோட் சரியில்தான்" என்று சொல்லி சிரிக்கிறார், செய்லாப்தீன்.

இன்னொரு விடயத்தையும் சொல்கிறார் கேளுங்கள்,

"வேறு எல்லோரும் அவரவர் சொத்துகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பாடுபடுகிறார்கள். ஆனால், எங்கள் தொழிலே அதுதான்! எனவே, வீட்டிலும் எங்களுக்குத் தொழில் புத்திதான் வரும்.

சரி, காவல் காக்கும் நிமித்தம் நிறுவனங்களுக்கு அனுப்பும் போது உங்கள் கம்பனியால் ஏதாவது கட்டுப்பாடுகள் விதிப்பார்களா என்று கேட்டோம்.

"நட்டி வெச்ச கம்புதான்" என்றார் சிரித்துக் கொண்டு. அப்படியென்றால் என்ன என்று விளக்கம் கேட்டதற்கு,

"ஓர் இடத்தில் காவலாளியாக நிறுத்தப்பட்டால் அங்கும் இங்கும் செல்ல முடியாது. நைட்டி யூட்டி வந்தால் கண்ணில் விளக்கெண்ணையை ஊற்றிக் கொண்டு விழித்திருக்க வேண்டியதுதான்– நட்டி வச்ச கம்பு போல"

கிறீச்.. என கேற்றை இழுத்து திறந்து, "யார சந்திக்கனும். ஒங்க நேம் என்ன" என்று வந்தவர் ஒருவரிடம் பேசிக் கொண்டிருக்கும் செய்லாப் தீனுடைய தொழிலுக்கு டிஸ்டேப் இல்லாமல் அவரிடமிருந்து விடை பெற்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான முயற்சிகள் தோல்வி டோஹா காரியாலயம் மூடப்பட்டது



கட்டார், டோஹாவில் அண்மையில் தலிபான்களால் திறக்கப்பட்ட உத்தியோகபூர்வ காரியாலயத்தை தாம் மூடியுள்ளதாக தலிபான்கள் அறிவித்துள்ளனர். இக்காரியாலயம் கடந்த மே 18ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. அமெரிக்கா மற்றும் ஆப்கான் அரசுடனான தலிபான்களது சமாதான பேச்சுவார்த்தைக்காகவே இக்காரியாலயம் திறக்கப்பட்டது. வாக்குறுதிகள் மீறப்பட் டதன் காரணமாக, தாங்கள் தற்காலிகமாக டோஹா காரியாலயத்தை மூடியதாக பாகிஸ்தானை மையமாகக் கொண்டு இயங்கும் தலிபான் காரியாலயம் அறிவித்துள்ளது.

"நாங்கள் அமெரிக்காவுடன் சந்தோஷமாக இல்லை. அமெரிக்காவும் காபுல் அரசும், ஏனைய தரப்புகளும் எங்களுடன் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை" என தலிபான் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

இதேவேளை, டோஹா சமாதான முயற்சி வெற்றியளிக்காவிடினும் வேறு முறையில் சமாதானத்திற்கான வழிகளை நாம் மேற்கொள்வோம். ஏனெனில், உண்மையான ஆப்கானிஸ்தானின் சமாதானம் ஆப்கான் மக்களிடையே தங்கியுள்ளது. என வெள்ளை மாளிகை ஊடக செயலாளர் ஜே. கார்னி தெரிவித்தார். இந்த நடவடிக்கை மிகவும் கஷ்டமாயினும் அதனைத் தொடர உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# லிபியாவின் ஆயுதப் படைக்கு பிரிட்டன் இராணுவம் பயிற்சி



பிரிட்டிஷ் இரணுவத்தினால் 2000 லிபிய ஆயுதப் படை வீரர்களுக்கு பயிற்சியளிக்கப்பட உள்ளதாக பிரிட்டிஷ் வெளிவிவகார செயலாளர் வில்லியம் ஹோக் தெரிவித்தார்.

லிபிய இராணுவப் படையின் சிறிய குழுவினர் பிரிட்டனுக்கு அழைத்துச் செல்லப்பட இருப்பதாக பீ.பீ.சி. தெரிவித்தது. இப்பயிற்சியில் காலாற் படைக்கு அடிப்படைத் திறன்சார் பயிற்சி மற்றும் தலைமைத்துவப் பயிற்சி போன்றன வழங்கப்படவுள்ளன.

கடந்த மாதம் G8 மாநாடு வட அயர்லாந்தில் நடைபெற்றது. அம்மாநாட்டில் லிபிய இராணுவ வீரர்களுக்கு சில நாடுகளால் பயிற்சி வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, கடந்த வாரம் லிபியாவில் அரசாங்கத்தை பொலிஸ் படையை அமைக்கக் கோரி பொதுமக்களால் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

# சர்தாரியின் உயர் பாதுகாப்பு அதிகாரி படுகொலை



கடந்த வாரம் பாகிஸ்தான் கராச்சி நகரில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் பாகிஸ்தான் ஜனாதிபதி ஆஸிப் அலி சர்தாரியின் உயர் பாதுகாப்பு அதிகாரியான பிலால் அஹமட் கொலை செய்யப்பட்டுள்ளார்.

குண்டு துளைக்காத வாகனத்திலிருந்து வெளியேறி சந்தையில் பழங்கள் வாங்கச் சென்ற போது தற்கொலை தாரி மோதியதில் இரு வெடிப்பு சம்பவங்கள் ஏற்பட்டதாக பொலிஸ் தலைமை அதிகாரி இம்றான் சுஹார்த் தெரிவித்தார்.

இத்தாக்குதல் காரணமாக, ஷெய்க் பிலாலுடன் சேர்ந்து அவரது வாகன சாரதியும் பொருட்கள் விற்பனையாளர் ஒருவரும் உயிர் இழந்திருப்பதுடன் மேலும் 12 பேர் காயம் அடைந்துள்ளனர். அதில் 8 பொலிஸ் அதிகாரிகள் அடங்குவதாகவும் சுகார்த் தெரிவித்தார்.

# துருக்கிய ஊடகவியலாளர்கள் கெய்ரோவில் கைது


எகிப்திய தலைநகர் கைரோவில் வைத்து இரண்டு துருக்கிய தொலைக்காட்சி நிருபர்களை கடந்த வாரம் துருக்கி இராணுவம் கைது செய்துள்ளதாக அதன் ஊடகம் தெரிவித்துள்ளது.

துருக்கியின் தனியார் ஸ்டார் தொலைக்காட்சி நிறுவன சபைத் தலைவர் நாஸில் ஒஸ்தர்ஹான் இது பற்றி தெரிவிக்கையில்: முராத் உஸ்லு மற்றும் படப்பிடிப்பாளர் சபீர் ஆகிய நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள். அவர்கள் கைது செய்யப்பட்டமைக்கான காரணம் தெரியவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

கெய்ரோவிலுள்ள துருக்கிய தூதுவர் மற்றும் எகிப்திய வெளிவிவகார அமைச்சர், இராணுவத் தளபதி ஆகியோருடன் தொடர்பு கொண்டு அவர்களை விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரியதாகவும் நாஸில் ஒஸ்தர்ஹான் மேலும் தெரிவித்துள்ளார்.

இவர்கள் இருவரும் எதுவித காரணமும் இன்றி கைது செய்யப்பட்டுள்ளதுடன் இவர்களது உபகரணங்களும் கடவுச்சீட்டும் பறிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அமெரிக்காவின் அம்பலமான இரட்டை வேடம்




அரபு வசந்தத்தின் பின்னர் சில அரபு நாடுகளின் தலைவர்கள் மாற்றத்துடன் இன்னும் பல மாற்றங்களை சகிக்க முடியாது அமெரிக்கா மதச்சார்பற்ற வாதிகளுக்கும் இஸ்லாமிய எதிர்ப்பாளர்களுக்கும் பொருளாதார உதவிகள் வழங்கியுள்ளமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கில் தொடர்ந்தும் தனது இருப்பை, ஆதிக்கத்தை தக்க வைத்துக் கொள்ள 1.4 மில்லியன் அமெரிக்க டொலர்களை அமெரிக்கா செலவிடுவதுடன் ஜனநாயகத்திற்கான உதவி என்ற போர்வையில் 390 மில்லியன் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் வழங்கப்படுவதாக கூறப்படுகின்றது. இதேவேளை, எகிப்தின் தற்போதைய நிலை குறித்து அமெரிக்கா எதுவும் பேசாது எனவும் தாம் யாருக்கும் சார்பான நிலையை எடுக்கமாட்டோம் எனவும் அமெரிக்க அதிபர் ஒபாமா தெரிவித்தார்.

அண்மையில் பதவி கவிழ்க்கப்பட்ட எகிப்திய ஜனாதிபதி முர்ஸியின் ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் இடையே பதற்றம் மூண்டிருக்கும் வேளையில் முர்ஸியின் எதிர்ப்பாளருக்கு அமெரிக்கா பண உதவி வழங்கி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இவ்வுதவிகள் ஜனநாயகத்தின் போர்வையில் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஸ்நோடனுக்கு தஞ்சமளிக்க நாடுகள் தீர்மானம்



அமெரிக்காவினால் கடும் தேடுதலுக்கு உட்பட்டு வரும் அமெரிக்காவின் முன்னாள் உளவுத்துறை கணினி நிபுணர் ஸ்நோடனுக்கு அரசியல் தஞ்சம் வழங்க வெனிசுவேலா, நிக்கரகுவா, கியூபா, பொலிவியா ஆகிய நாடுகள் முன்வந்துள்ளதாக அறிவித்துள்ளன.

அவர் ஏற்கனவே 21 நாடுகளில் அரசியல் தஞ்சம் கேட்டு விண்ணப்பித்திருந்தார். பல நாடுகள் இவருக்கு தஞ்சமளிப்பதை நிராகரித்திருந்தன. இந்நிலையில் மேற்குறித்த நாடுகள் ஸ்நோடனை அழைத்துள்ளன.


அமெரிக்க உளவுத்துறையில் இரகசியக் கண்டு பிடிப்பு திட்டத்தை அம்பலப்படுத்தியமைக்காக அவர் மீது அமெரிக்க அரசு வழக்குத் தொடர்ந்துள்ளது.


தஞ்சம் பெறுவதற்கான உரிமையை மதிக்கின்றோம். சூழ்நிலைகள் சாதகமாகவே அமைந்ததால் நாங்கள் ஸ்நோடனை மகிழ்ச்சியுடன் வரவேற்போம். இங்கு நிக்கரகுவா அவருக்கு அடைக்கலம் கொடுக்கும் என அதிபர் போனிஸ் ஆட்டேகா தெரிவித்தார்.

ஸ்நோடனுக்கு ஆதரவளிக்க முடிவு செய்துள்ள வெனிசுவேலாவுக்கு ஆதரவாக கியூபா செயற்படும். அதன் இறையாண்மை, மனித உரிமைகள் ஆகியவற்றை பாதிக்காத வகையில் மனிதாபிமான அடிப்படையில் ஸ்நோடனை கியூபா பாதுகாக்கும் என கியூபா ஜனாதிபதி காஸ்ட்ரோ தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேசம்





# எகிப்தில் இராணுவ புரட்சி அடுத்தது என்ன?

ஸகி பவுஸ் (நளீமி)
விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா, அரபுக் கல்லூரி, மாதம்பை

எகிப்தில் ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி முஹம்மத் முர்ஸிக்கு எதிராக சென்ற 30ஆம் திகதி நன்கு திட்டமிடப்பட்ட ஓர் இராணுவப் புரட்சி அரங்கேற்றப்பட்டது. கலாநிதி ஹசன் ஷாபி சொல்வது போல், எப்போது முர்ஸி ஆட்சிக்கு வந்தாரோ அன்றே அவரை வீழ்த்தும் சூழ்ச்சிகள் மற்றும் திட்டமிடல்கள் ஆரம்பித்து விட்டன. முர்ஸியின் வருகை மத்திய கிழக்கின் வரைபடத்தை மீண்டும் திருப்பி வரையும் ஆற்றல் மிக்கது என்பதை அரபுத் தலைவர்களும், மேற்கும் நன்கு விளங்கி வைத்திருந்தனர். குறிப்பாக, இஸ்ரேல் தனது இருப்புக்கு சவாலாக முர்ஸியின் வெற்றியை கருதியது.

மத்திய கிழக்கில் இஸ்ரேலின் பாதுகாவலர்களாகவும், மேற்கின் அடிமைகளாகவும் இருந்து வந்த அரபு அரச பரம்பரையினருக்கு முர்ஸியின் வெற்றி பேரிடியாக விழுந்தது. இன்னும், 60 வருடங்கள் எகிப்து மக்களின் பொருளாதாரத்தை சூறையாடிய எகிப்திய இராணுவத்திற்கு முர்ஸியின் வெற்றி தமது பொருளாதார எதிர்காலம் பற்றிய அச்சத்தை ஏற்படுத்தியது. இவர்கள் அனைவரும் இறுதியாக முர்ஸியை வீழ்த்துவதற்கு ஒன்று சேர்ந்தனர்; நீண்ட திட்டமொன்றைத் தீட்டினர். பல கோடி பணத்தை அரபு மன்னர்கள் அதற்காகக் கொட்டினார்கள். இஸ்லாமிய வாதிகளின் சிந்தனைப் போக்கை அடியோடு எதிர்க்கும் ஷெய்குல் அஸ்ஹர் தமது திட்டத்திற்கு மார்க்க ரீதியான முலாம் பூசுதலை பயன்படுத்திக் கொண்டார். எகிப்தின் சந்தர்ப்பவாத ஸலபிகளின் அந்நூர் கட்சி தனக்கு பதவிகள் பெற்றுக் கொள்ளலாம் என்ற எதிர்பார்ப்பில் இராணுவத்துடன் இணைந்து கொண்டது. (தற்போது இராணுவம் எடுத்து வரும் திடீர் தீர்மானங்களால் தாம் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்பதை அந்நூர் கட்சி புரிந்து கொள்ள ஆரம்பித்துள்ளது.) மேலும், கிறிஸ்தவர்களை மடக்குவதற்காக அவர்களின் தலைவர்களை மடக்கிப் பிடித்தனர்.

### அரசைக் கவிழ்த்த சதி

இவ்வாறு கடந்த ஒரு வருட காலமாக திரை மறைவில் இடம்பெற்ற திட்டங்கள் சென்ற 30ஆம் திகதி கொந்தராத்து அடிப்படையில் 2 மில்லியன் அட்டகாசக்காரர்கள் தஹ்ரீருக்கு கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டன. பின்னர் எகிப்து மக்கள் முர்ஸியை எதிர்க்கின்றனர் என போலி சனத்தை ஆதாரம் காட்டி அறிக்கைகள் விடுக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து இராணுவம் தன்னிச்சையாக புதிய ஜனாதிபதியை பிரகடனம் செய்தது. மக்கள் விருப்பத்திற்குத் தான் முதலிடம் என தன்னை ஜனநாயகவாதியாக இராணுவத் தளபதி அப்துல் பதாஹ் ஸீஸி அறிவித்துக் கொண்டார். இவையனைத்தும் எகிப்தின் இராணுவப் புரட்சிக்கு முன்னர் இடம்பெற்ற காட்சிகள். இவை எல்லாவற்றுக்கும் மேலதிகமாக, முர்ஸியை வீழ்த்துவதற்கு நாட்டில் ஆழமாக ஊடுருவியிருந்த மதச்சார்பற்ற சக்திகளின் கீழ்த்தரமான செயற்பாட்டிற்கு சிறந்த உதாரணம்தான் எகிப்தின் அரசுக்கு எதிரான ஊடகங்களின் செயற்பாடுகளாகும்.

**வெறும் ஒரு வருடத்தில் கடந்த 60 வருட காலமாக ஹுஸ்னி முபாரக், அன்வர் சதாத் மற்றும் அப்துந் நாஸர் ஏற்படுத்தி விட்டுச் சென்ற பொருளாதார, அரசியல் ஸ்தீரமற்ற நிலைமையை எந்த ஆட்சியாளராலும் மீட்க முடியாது என்பதாகும். முர்ஸி வெறும் ஒரு வருடமே ஆட்சியில் இருந்த நிலையில் 60 வருடங்கள் நீண்டு செல்லும் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என எதிர்பார்ப்பதே அறிவீனமானது.**

முர்ஸி பதவியேற்ற முதல் நாளிலேயே எகிப்தின் ஊடகங்கள் அரசை எல்லையில்லாமல் போலியாக விமர்சிக்க ஆரம்பித்து விட்டன. ஆனால், புதிய ஜனாதிபதி சர்வதிகாரியாக செயலாற்றவில்லை. நிதானமாக அணுகினார். ஆனால், மறுபுறத்தில் வன்முறைகளை தூண்டி விட்ட எதிர்த்தரப்பு லிபரல் வாதிகளது சட்டவிரோத செயற்பாடுகளை பொலிஸார் கண்டும் காணாமல் இருந்து விட்டனர். அதை விட மிகவும் கேவலமான அம்சம்தான் யாருக்கு எதிராக எகிப்து மக்கள் ஒன்று சேந்தனரோ அவர்களுடன் போலி ஜனநாயகவாதிகளும் ஒன்று சேர்ந்தமையாகும்.

பின்னர், எகிப்தின் இராணுவப் புரட்சியை எதிர்த்து மக்கள் ராபிஆ அதவிய்யா மைதானத்தில் ஒன்றுகூடினர். அவர்களின் தொடர்ச்சியான மக்கள் போராட்டம் இன்று வரை உறுதியாக தொடர்ந்த வண்ணம் இருக்கிறது. மக்கள் இஃவான்களுக்கு ஆதரவாகவோ, முர்ஸிக்கு ஆதரவாகவோ களமிறங்கவில்லை. மாறாக, தமது வாக்குகளை இராணுவம் திருடிவிடக் கூடாது என்பதற்காகவும், தாம் தெரிவு செய்த சட்டபூர்வமான தலைவரை மீட்டித் தருமாறு இராணுவத்தை வேண்டியே களமிறங்கியுள்ளனர்.

### முர்ஸியின் ஆட்சி

ஜனாதிபதி முர்ஸியின் கடந்த ஒரு வருட ஆட்சி பலரினதும் விமர்சனத்திற்கு உட்பட்டமையும் இங்கு நோக்கத்தக்கது. குறிப்பாக, பல நடுநிலையான அரசியல் விமர்சகர்களின் விமர்சனத்திற்கு அவரது அரச தீர்மானங்கள், நடவடிக்கைகள் உட்பட்டன. ஆனால், எல்லோரும் ஒருமித்து உடன்படும் அம்சம் தான், வெறும் ஒரு வருடத்தில் கடந்த 60 வருட காலமாக ஹுஸ்னி முபாரக், அன்வர் சதாத் மற்றும் அப்துந் நாஸர் ஏற்படுத்தி விட்டுச் சென்ற பொருளாதார, அரசியல் ஸ்தீரமற்ற நிலைமையை எந்த ஆட்சியாளராலும் மீட்க முடியாது என்பதாகும். முர்ஸி வெறும் ஒரு வருடமே ஆட்சியில் இருந்த நிலையில் 60 வருடங்கள் நீண்டு செல்லும் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என எதிர்பார்ப்பதே அறிவீனமானது. என்றாலும், முர்ஸி எடுத்த சில தவறான தீர்மானங்களும், முடிவுகளும் ஏற்கனவே அவரை வீழ்த்த கங்கணம் கட்டிக் கொண்டிருந்த அரபு மற்றும் மேற்கு ஆட்சியாளர்களை இன்னும் வலுவூட்டின எனக் கூறலாம்.

ஜனாதிபதி முஹம்மத் முர்ஸி விட்ட முதல் தவறாக, தனது முதல் அமைச்சரவையை எல்லா கட்சிகளின் ஆதரவுடன் அமைக்கவில்லை. மாறாக, நாட்டில் அவசரமாக மாற்றங்களை சாதிக்கத்தக்க வகையில் பல துறைசார் நிபுணர்களையே தெரிவு செய்தார். கலாநிதி ஹிஷாம் கிந்தீல் பிரதமராக தெரிவு செய்யப்பட்டார். உண்மையில், கலாநிதி கிந்தீல் சிறந்த பொருளாதார நிபுணராக இருந்தாலும், ஓர் அமைச்சரவையை நடத்தக் கூடிய திறமைமிக்கவரல்ல. இவரது நியமனமும், தீர்மானங்களும் பல சிக்கல்களை எகிப்தில் ஏற்படுத்தியது. ஆனால், எல்லா கட்சிகளையும் உள்ளடக்கிய வகையில் அமைச்சரவை அமைக்கப்பட்டிருந்தால், நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலையை சமாளித்திருக்கலாம் என அரசியல் அவதானிகள் அபிப்பிராயப்படுகின்றனர். இன்னும், முஹம்மத் முர்ஸி சட்ட யாப்பை மாற்றுவது தொடக்கம், ஏனைய திருப்புமுனையாக அமைந்த பல மாற்றங்களைக் கொண்டு வரவும் அவசரப்பட்டார் என்ற ஒரு குற்றச்சாட்டும் விமர்சனமாக சர்வதேச அரசியல் விற்பன்னர்கள் முன்வைக்கின்றனர்.

பிரபல எகிப்திய ஊடகவியலாளர் அஹ்மத் மன்ஸுர்; முர்ஸி நல்லவர். ஆனால், அவர் ஒரு புரட்சியினூடாக ஜனாதிபதியாக வந்தவர் என்ற மனோபாவத்தில் தனது அரசைக் கொண்டு செல்லவில்லை. அவர் நாட்டில் கடந்த 60 வருடங்களாக ஆழ வேறூன்றி இருந்த மதச்சார்பற்ற மறைகரங்கள் பற்றி வாசித்த முறைமை பிழையானது என்கிறார். அதாவது, நாட்டின் இராணுவத்தை எந்த சந்தர்ப்பத்திலும் நம்பக் கூடாது. அவர்களை நம்பி தீர்மானங்கள் எடுக்கக் கூடாது என பல முறை கூறப்பட்ட போதும், இஃவான்களும் அரசுக்கு மிக நெருக்கமானவர்களும் இராணுவத்தை ஒரு சவாலாக கருதவில்லை.

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பரீட்சைக்குத் தயார் செய்வது எப்படி?

மாணவர்களை பரீட்சைக்குத் தயார் செய்தல் என்பது மாணவர்களின் எதிர்காலம் தொடர்பாக அவர்கள் கொண்டுள்ள அச்சத்தைப் போக்கி சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுக் கொடுக்கும் வழிமுறையாகும். இன்று பலவிதமான வழிகாட்டுதல்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டாலும் பொருத்தமான பரீட்சை வழிகாட்டல் முறையாக PQRST முறை காணப் படுகின்றது.

மதிப்பீடு செய்தல் (Preview), கேள்வி கேட்டல் (Question), வாசித்தல் (Read), சுருக்கமளித்தல் (Summary), பரீட்சித்தல் (Test) இவைகளினூடாக மாணவர்களின் கற்றல் நுட்பத்தினை வளர்த்துக் கொள்ள முடியும்.

மாணவர்கள் தமது கற்றல் ஆர்வத்தை வளர்த்துக் கொள்வதற்கு சில நுட்பங்களை கையாள முடியும். நினைவுபடுத்தல், கவனயீர்ப்பு, ஒழுங் கமைப்பு, சிந்திக்கும் ஆற்றல், ஈடுபாடு, விளங்கிக் கற்றல், சிறு சிறு பகுதிக ளாகக் கற்றல் போன்ற விடயங்களைக் கவனத்தில் கொள்வதன் மூலம் மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கைகளை இலகுபடுத்திக் கொள்ள முடியும்.

இன்று பெரும்பாலான மாணவர்கள் பாடசாலைக் கல்வி, மேலதிக வகுப்புகள் என்று மும்முரமாகத் திரிகின்றனர். ஆனால், இவ்வாறு கல்வி கற்கும் எல்லோருக்கும் இலக்குகளை அடைந்து கொள்ள முடிவதில்லை. இதற்கு, மாணவர்கள் கற்பதற்கு இலகு நுட்ப முறைகளை கையாளாமையே காரணமாக தெரிகிறது. பல்வேறு அறிஞர்கள் பல்வேறு நுட்ப முறைகளை முன்வைத்துள்ளனர். உளவியல் அறிஞர்களான சிம்சன், நெஸ்ற் ஆகி யோரின் ஆய்வின் பிரகாரம் பின்வருவன கற்றல் நுட்பங்களாக முன்வைக்கப்படுகின்றன:


- சுருக்கக் குறிப்புகளை எழுதுதல்
- கற்கும் பாடத்தின் பிரதான கருத்துக்களை பிரித்தெடுத்தல்
- சில தரவுகளை அட்டவணைப்படுத்தல்
- முக்கியமான சொற்பதங்களை அடிக்கோடிடல்
- பொருத்தமான பாடப் பகுதிகளைத் தனியாகவும் குழுவாகவும் கற்றல்

கற்றல் என்பது ஒவ்வொரு மனிதனும் மேற்கொள்ள வேண்டிய மிக முக்கியத்துவமிக்க ஒரு செயல் முறையாகும். ஆனால், பல மாணவர்கள் கற்கும் விடயங்களை எவ்வாறு தன்னுள் வைத்துக் கொள்ள முடியும் என்பதை அறிந்து கொள்வதில்லை. மேலும், கற்கின்ற விடயங்களை நினைவில் வைத்துக் கொள்ள கையாளும் வழிமுறைகளாக பின்வருவ னவற்றைக் குறிப்பிடலாம்:

ஒழுங்குபடுத்திக் கற்றல், முன்னர் படித்தவற்றை பின்னர் படித்த துடன் ஒப்பீடு செய்தல், உதாரணங்களைச் சிந்தித்தல், தனக்கு கேட்கும் வகையில் வாசித்தல், நண்பர்களுடன் படித்ததைப் பகிர்தல், இடைவெளி விட்டுக் கற்றல், திரும்பத் திரும்பக் கற்றல்.

**மாணவர்கள் பரீட்சைக் காலங்களில் மிக முக்கிய மாக தவிர்ந்து கொள்ள வேண்டிய விடயங்கள்**

மாணவர்கள் பரீட்சைக் காலங் களில் சோம்பல், தூக்கம், சினிமா, இசை போன்ற விடயங்களை மிக முக்கியமாக தவிர்ந்து கொள்ள வேண்டும். ஆனால், இவ்விடயங் களிலேயே மாணவர்கள் பலவீன மானவர்களாக இருக்கின்றார்கள்.



எனவே, பெற்றோரும் ஆசிரியர்களும் இது தொடர்பாக கவனம் செலுத்தியாக வேண்டும். இவ்விடயங்கள் மாணவர்களின் நினைவாற்ற லைக் குறைக்கின்றன. இதனால் பரீட்சையில் அவர்களால் படித்தவற்றை நினைவில் கொண்டு வந்து சிறந்த பெறுபேற்யைப் பெற முடிவதில்லை.

**மாணவர்களின் கற்றலைப் பாதிக்கின்ற ஏனைய காரணிகள்**

உடலியற்பண்புகள், தனியாள் வேறுபாடுகள், கற்றல் வேகம், நுழைவுத் தேர்ச்சிகள், எதிர்பார்ப்பு மட்டம், கற்கும் ஆற்றல், சமூக, பொருளாதாரப் பின்னணி.

பாடசாலைகளில் இன்று பயன்படுத்தப்படும் தனிக் கற்பித்தல் முறை கள் (Individual Methods), விளையாட்டு முறைகள் (Play way Methods), செயல் முறைகள் (Activity Methods), காட்சிப் பொருள் களைப் பயன்படுத்திக் கற்பித்தல் போன்றவை யாவும் உளவியலின் அடிப்படையில் எழுந்த முறைகளேயாகும். கல்வியென்பது ஒரு பாடப் பொருளைப் போதித்தல் மட்டுமன்று. கல்வியின் குறிக்கோள் ஒரு மாணவனின் முழு வளர்ச்சியேயாகும்.

மாணவர்கள் பாடசாலைக் கல்வி முறைகளினால் தமக்கு வழங் கப்படுகின்ற வழிகாட்டலுடன் தமது இயல்பான முயற்சி மற்றும் ஆர்வத்தை அதிகரித்து கல்வியில் முழு மூச்சாக ஈடுபட வேண்டும். மாணவர்கள் இல குவாக கையாள வேண்டிய விடயங்களையும் கஷ்டப்படுத்திக் கொள்ளக் கூடும். இதற்கு ஆய்வுகளின் மூலம் பல்வேறு அறிஞர்களால் முன்வைக் கப்பட்டுள்ள இவ் இலகு வழிமுறைகளைக் கையாள்வதன் மூலம் மாண வர்கள் கல்வியில் வெற்றி பெற முடியும்.

▸ றினோஸ் ஹனீபா

---

**இவ்வார சிந்தனைக்கு**

ஆகாயத்தின் கீழே கோட்டை கட்டுகிறவர்கள் மிகத் தாழ்வாகவே கட்டுகிறார்கள்.
- எட்வார்ட் யோங் -

மறைத்து வைக்கப்பட்டிருக்கும் உயரிய காரியங்கள் மிகவும் உயர்வாகவே மதிக்கப்படுகின்றன.
- பஸ்கால் -

---



## மேரி கியூரி

*அறிவியல் துறையில் ஆராய்ச்சிகளைச் செய்து சாதனை படைத்த பெண்மணிதான் மேரி கியூரி அம்மையார். இவர் 1867 நவம்பர் அன்று போலந்து நாட்டில் வோர்சோவ் எனும் இடத்தில் பிறந்தார். இவரது இயற் பெயர் மரியா ஸ்க்லோடோவ்ஸ்கா என்ப தாகும். ஹென்றி பெக்கரெல் என்பவரால் கதிரியக்கம் கண்டு பிடிக்கப்பட்ட பின்பு மேரி கியூரியும் அவருடைய கணவர் பியெர் கியூரியும் கதிரியக்கம் குறித்த ஆராய்ச்சி களைத் தொடங்கினார்கள். இதன்போது இவர் முதன் முதலாக 1898ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் கதிரியக்கத் தொழிற்பா டுடைய மூலகத்தை கண்டு பிடித்தார். இதற்கு தம் தாய் நாட்டின் நினைவாக பொலோனியம் எனப் பெயரிட்டார். இவர் இரண்டாவதாக 1898ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி ரேடியம் எனும் இரசாயன மூலகத்தைக் கண்டு பிடித்தார். இம்மூலகத்தை பிட்ச்பி ளெண்ட்(pitchblende) என்னும் தாதுவிலிருந்து பிரித்தெ டுத்தார். இக்கண்டுபிடிப்பானது மேரி கியூரியின் மிகச் சிறந்த சாதனையாகப் போற்றப்படுகிறது.*

*1903ஆம் ஆண்டு மேரி கியூரி, பியெர் கியூரி, ஹென்று பெக்கரல் ஆகிய மூவருக்கும் பௌதிகவியலுக்கான நோ பல் பரிசு வழங்கப்பட்டது. 1911ஆம் ஆண்டில் மீண்டும் மேரி கியூரிக்கு இரசாயணவியல் சாதனைக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. இதன் மூலம் இவர் இரண்டு முறை நோபல் பரிசு பெற்ற முதல் நபர் என்ற பெருமைக்கும் உரியவரானார். இவரது வழி காட்டலின் கீழ் கதிரியக்க மூலக சமதானி களைப் பயன்படுத்தி முதன் முதலாக உடற் கட்டிகளைக் குணப்படுத்த ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டன. முதலாம் உலகப் போரின் போது இராணுவத்துறையில் கதிரியக்க மையங்களை முதன் முதலாக நிறுவினார்.*

*இவ்வாறு சாதனைகள் புரிந்த மேரி கியூரியின் புகழுக்குக் காரணமாக இருந்த ரேடியமே அவரது மரணத்திற்கும் காரண மாக அமைந்தது. நீண்ட காலமாக கதிரி யக்க மூலகங்களை ஆராய்ந்து வந்தமை யால், கதிரியக்க தீய விளைவுகளுக்கு உள் ளாகி குருதிச் சோகை நோயால் மேரி கியூரி அம்மையார் 1934 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 04 ஆம் திகதி காலமா னார்.*


*மேரி கியூரியின் உடல் அவரது கணவர் பியெர் கியூரி யின் கல்லறைக்கு அருகே ஸ்கேயுக்சே எனும் இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது. அறுபது வருடங்களுக்குப் பிறகு 1995 ஆம் ஆண்டில் இவர்கள் சாதனைகளின் நினைவாக இருவரினதும் கல்லறைகள் பாரிஸ் பாந்தியன் எனும் இடத்திற்கு மாற்றப்பட்டது. இன்று வரை இவ்வாறு கௌர வப்படுத்தப்பட்டிருக்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க பெண் மனிதான் மேரி கியூரி அம்மையார்.*

---

# துணுக்குச் செய்திகள்

தொகுப்பு: எஸ்.எம். அர்ஷத்தீன்

ஐரோப்பிய ஒன்றியத்தின் 28வது உறுப்பு நாடாக குரேஷியா இணைந்துள்ளது. இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும் என குரேஷிய ஜானாதிபதி குறிப்பிட்டுள்ளார். சுதந் திரத்திற்கான கொடூர யுத்தம் இடம்பெற்று இரண்டு தசாப்தங்கள் கடந்துள்ள நிலையில், குரேஷியா ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு உரிமையைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



உலகில் நான்குபேரில் ஒருவர் கடந்த ஆண்டு லஞ்சம் கொடுக்க வேண்டி வந்துள்ளதாக என்று புதிய ஆய்வு ஒன்று கூறுகிறது. ஜேர்மனியின் பெர்லின் நகரில் தலைமையகத்தைக் கொண்டுள்ள டிரான்ஸ்பரன்ஸி இண்டர்நேஷனல் என்ற அமைப்பு இந்த ஆய்வை நடத்தியிருக்கிறது. செல்வந்த நாடுகளில் ஒருவர் லஞ்சம் கொடுக்க வேண்டி வருகின்ற தருணங்களைப் போல இரண்டு மடங்கு அதிக மான தருணங்களில் ஏழை நாடுகளில் ஒருவர் லஞ்சம் கொடுக்க வேண்டி ஏற்படுகிறது என இந்த ஆய்வு தெரிவிக்கிறது. 107 நாடு களிலிருந்து 1 இலட்சத்து 14 ஆயிரம் பேரிடம் சுற்றாய்வை நடத்தி இந்த ஆய்வின் அறிக்கை உருவாக்கப்பட்டுள்ளது.




கணினிக்கான மௌஸைக் கண்டு பிடித்தவரான அமெரிக்க தொழில்நுட்ப வல்லுநர் டக்ளஸ் எங்கெல்பார்ட் அண்மையில் தனது 88ஆவது வயதில் அமெரிக்காவின் கலிஃபோர்னியாவில் இயற்கை எய்தினார். இவர் மின்னஞ்சல், இணையம் போன்றவைகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்பாகவே இப்படியான வசதிகள் வரும் என்று கணித்துச் சொன்னவராவார். கணினியில் பயன் படுத்தப்படுகின்ற மௌஸ் எனப் படும் சுட்டுக் கருவியை உல கிற்கு முதன் முதலாக அறிமுகம் செய்த தோடு, ஐம்பது கிலோ மீட்டர் தொலைவில் இருந்த ஓர் இடத்துடன் காணொலி இணைப் புடன் கூடிய தொடர்பாடல் வலய மைப்பையும் அவர் செயல்படுத் திக் காட்டினார்.





2001ஆம் ஆண்டுக்கும் 2010ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட பத்தாண்டு களில் உலகம் முன்னெப்போதுமில் லாத தீவிர காலநிலை மாறுதல்களை பதிவு செய்துள்ளதாக உலக வானி லை ஆய்வுக் கழகம் தெரிவிக்கிறது. முந்தைய தசாப்தங்களில் இல்லாத அளவுக்கு அதிகமான வெப்பமும் குளிரும் பல்வேறு நாடுகளில் பதிவாகியிருப்பதாக அக்கழகத்தின் புதிய அறிக்கை கூறுகிறது. இந்த பத்தாண்டு காலத்தில் கொளுத்தும் வெயிலுக்கு பலியானவர்களின் எண்ணிக்கை முந்தைய தசாப்தங்களை விட அதிகம் எனத் தெரிவிக்கப்படுகிறது. 2010ஆம் வருடம் இதுவரை பதிவு செய்யப்பட்டதிலேயே மிக அதிக மழை பெய்த ஆண்டாக உள் ளது. உலக அளவில் சராசரியாக ஆண்டுக்கு 3 மில்லி மீட்டர்கள் என்ற அளவில் கடல் மட்டம் உயர்ந்து வருகிறது. நூறு ஆண்டு களுக்கு முந்தைய அளவுகளோடு ஒப்பிடுகையில் தற்போது இரு மடங்கு வேகத்தில் கடல் மட்டம் அதிகரித்து வருவதாகத் தெரி கிறது.

கையடக்கத் தொலைபேசி மற் றும் எம்பி3 பிளேயர்களிலிருந்து ஒலி கேட்க பயன்படும் ஹெட் போ னைப் பயன்படுத்தி சூரிய எரி சக்தி யிலிருந்து மின்சாரம் தயாரித்து, அதைக்கொண்டு கையடக்கத் தொ லைபேசி உள்ளிட்ட சிறு மின்னணு உபகரணங்களின் மின்சாரத் தேவையை நிறைவு செய்ய முடியும் என்று கிளாஸ்கோவில் இருக்கும் வடிவமைப்பாளர் ஆண்ட்ரூ ஆண்டர்சன் தெரிவித்திருக்கிறார். தமது இந்த புதிய கண்டு பிடிப்பு 2014ஆம் ஆண்டு விற்பனைக்கு வரும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார். ஏற்க னவே அமெரிக்காவில் இருக்கும் சிலர் மனிதர்கள் நடப்பதைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் உபகரணத்தைக் கண்டு பிடித்து விற்பனைக்கு விட்டிருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சையை எதிர்நோக்கும் உங்களுக்கு சில ஆலோசனைகள்

உங்களுடைய இலட்சியத்தை சரியாகத் தீர்மானித்துக் கொள்ளுங்கள். நீங்கள் எதற்காகக் கற்க வேண்டும், ஏன் உங்களுக்கு சிறந்த பேறுகள் தேவை என்பதையெல்லாம் உங்கள் இலட்சியத்தின் நிச்சயத் தன்மை தான் உறுதிப்படுத்தும். இலட்சியமின்றி கற்பது இலக்கின்றி அம்பு எய்வதற்கு சமமானது.

"ஆயிரம் மைல் பயணமும் ஒரு சிறு அடியில்தான் ஆரம்பமாகிறது" என்கிறது ஒரு சீனப் பழமொழி. சிறிதாக இருந்தாலும் தொடர்ச்சியான உங்கள் முயற்சி உங்களை வெற்றியை நோக்கி கை பிடித்து அழைத்துச் செல்லும்.

உங்கள் பரீட்சைக்குத் தேவையான குறிப்பேடுகள், புத்தகங்கள், கடந்த 10 வருடங்களின் வினாத்தாள்கள் உங்கள் கைவசம் இருப்பது அத்தியவசியம். உங்கள் குறிப்பேடுகளின் இடைவெளிகல் இருந்தால் அவற்றை நிரப்பிக் கொள்ளுங்கள். அதற்கான நேரம் இல்லாவிட்டால், தெளிவான ஒரு குறிப்பேட்டை போட்டோ நகல் எடுத்து வைத்திடுங்கள். குறிப்புக்கள், புத்தகங்களை உங்களுக்கு இலகுவான விதத்தில் பாட வாரியாக மற்றும் பகுதி வாரியாக ஒழுங்குபடுத்தி வைத்துக் கொள்ளுங்கள்.

உங்களுடைய உயிரியல் கடிகாரம் எப்படி வேலை செய்கிறது என்பதைப் புரிந்து நடந்து கொள்ளுங்கள். சிலரது மூளை அதிகாலையில் சுறு சுறுப்பாக இருக்கும். மற்றும் சிலர் முற்பகல் வேளையில் உற்சாகமாக இருப்பார்கள். இன்னும் சிலருக்கு முன்னிரவு நேரத்தில் அதிகமாகக் கிரகிக்க முடியும். வேறு சிலரது மூளை நடு இரவில் விழிப்பாக இருக்கும். நீங்கள் எந்தப் பாடத்தை எந்த நேரத்தில் கற்பது, உங்களது நாளின் மற்றைய வேலைகளை எப்படி ஒழுங்குபடுத்திக் கொள்வது என்பதை உங்களது உயிரியல் கடிகாரத்தை வைத்து நேர்த்தியாக்கிக் கொள்ளுங்கள்.

கற்கும் சூழலை உங்களுக்குத் தேவையான விதத்தில் உருவாக்கிக் கொள்ளுங்கள். உங்களுக்குத் தனியான அறை இல்லாத போது வீட்டின் ஒரு மூலையைக் கற்றலுக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்ளலாம். மேசை அழகாகவும் ஒழுங்காகவும் இருக்கட்டும். சுவரில் உங்களுக்கு விருப்பமான சுலோகங்களை ஒட்டி வையுங்கள்.

கற்றல் நுட்பங்கள் (Learning techniques) ஏராளமுண்டு. (Mind mapping, photo memory,SQ3R system etc) அவற்றில் அனைத்தையும் பயன்படுத்த வேண்டாம். உங்கள் தனித்துவம், இயலுமை மற்றும் விருப்பங்களுக்கேற்ப பொருத்தமான நுட்பங்களை மாத்திரம் கையாளுங்கள்.

நிறைய வேலைகளை ஒரே நேரத்தில் செய்யும் ஆற்றல் உண்மையிலே உங்கள் வினைத்திறனைக் குறைத்துவிடும் என்று அண்மைய ஆய்வுகள் சொல்கின்றன. ஒரு நேரத்தில் ஒரு வேலையில் கவனம் செலுத்துங்கள். பல வேலைகளைக் குறுகிய நேரத்தில் செய்யும் போது வேலையின் நேர்த்தி குறைவதோடு வீணான மன அழுத்தங்களுக்கு உட்பட வேண்டியும் ஏற்படலாம்.

படிக்கும் போது ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் ஒரு சிறிய இடைவேளை எடுத்துக் கொள்ளுங்கள். அந்த இடைவெளி உங்கள் இழந்த உற்சாகத்தை மீள் நிரப்பும். சிறு குளியல், பிஸ்கட்டோடு தேநீர், தோட்ட வேலை, மழைக்கால வானத்தை நோக்குதல், சின்னச் சின்ன வீட்டு வேலைகள், விருப்பமான புத்தகம் இப்படி ஏதாவதொன்றைச் செய்யலாம்.

உடற்பயிற்சி உடலுக்கு மட்டுமல்ல உள்ளத்தின் புத்துணர்ச்சிக்கும் உதவும். உங்களை சந்தோஷமாகவும் உற்சாகமாகவும் வைத்திருக்க உதவும் உடலின் மகிழ்ச்சி ஹோர்மோனான என்டோர்பின் அதிகமாகச் சுரக்கும் போது மூளையின் கிரகித்தல் வேகம் அதிகரிக்கும். உடற்பயிற்சியின் போது இந்த ஹோர்மோன் அதிகளவு சுரக்கிறது. மிதமான ஓட்டம், பாட்மின்டன், கையிறு பாய்தல் அல்லது துள்ளல் போன்ற ஏதாவதோர் உடற்பயிற்சிக்கு ஒரு நாளில் குறைந்தது 10 நிமிடங்களையாவது ஒதுக்குங்கள்.

ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கங்களும் அதிக தண்ணீரும் அத்தியாவசியமானவை. பரீட்சையை எதிர்நோக்கவிருக்கும் உங்களுக்கு நோயெதிர்ப்புச் சக்தியும் உடல், உள ஆரோக்கியமும் போதுமானளவு தேவை. மென் பானங்கள், உடனடி உணவுகள், நொறுக்குத் தீனிகளுக்குப் பதிலாக எழுமிச்சைப் பானம், பழங்கள், கடலை வகைகள் போன்றவற்றை உட்கொள்ளலாம். சுத்தமான தண்ணீர் அதி சிறந்த பானம் உடலை நீர்ப்பதாக வைத்திருப்பதோடு ஆரோக்கியமான அழகையும் தரும்.

### பரீட்சைக்கு முன்

- உங்களுடைய பரீட்சை அனுமதி அட்டை முதல் தேவையான அனைத்துப் பொருட்களையும் ஒரு முறை இருக்கின்றதா எனப் பாருங்கள்.
- 30 நிமிடங்கள் முன்னராக பரீட்சை நடக்குமிடத்திற்கு சமுகமளியுங்கள்.
- அமைதியாக இருங்கள். பரீட்சை ஆரம்பிக்கும் முன்னர் நண்பர் களுடன் கலந்துரையாடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.




தயாரிப்பு: சமீலா யூசுப் அலி

### பரீட்சையின் போது

- வினாத்தாளை முழுமையாக வாசித்து விளங்கிக் கொள்ளுங்கள்.
- ஒவ்வொரு கேள்விக்கும் எவ்வளவு நேரம் ஒதுக்குவது என்பது தீர்மானிக்கப் பட்டிருக்க வேண்டும்.
- ஏதாவது விடுபட்டிருந்தால் அல்லது பிழையான விடையை எழுதியிருந்தால் பதற்றப்பட வேண்டாம். பதற்றம் உங்களுடைய மற்ற விடைகளையும் பாதிக்கும்.
- கட்டுரை அமைப்பு வினாக்களைப் பொறுத்தவரை, விடை தெரிந்திருந்தாலும் அதை எப்படி நீங்கள் ஒழுங்குபடுத்தி எழுதுகிறீர்கள் என்பதில்தான் புள்ளிகள் தங்கியிருக்கின்றன. தெளிவான கையெழுத்தும் பந்தி பிரித்து எழுதுவதும் மிக முக்கியம்.

### பரீட்சைக்குப் பின்னர்

- வினாத்தாள் பற்றிய கலந்துரையாடல்களை முற்று முழுதாகத் தவிருங்கள்.
- உங்களை புத்துணர்வூட்ட சிறிது நேரம் விருப்பமான விடயங்களில் ஈடுபடுங்கள்.
- அடுத்த நாளுக்கான பாடத்திற்காகத் தயாராகுங்கள்.
- உங்களுடைய முழுமையான முயற்சியை செய்ததன் பின்னர் உங்களை வெற்றி பெறச் செய்யும் வல்லமையை இறைவனிடம் ஒப்படைத்து விடுங்கள். நீங்கள் எவ்வளவு தான் நேர்த்தியாகத் தயாராகி இருந்தாலும் உங்கள் மூளைகளுக்கு சிந்திக்கும் ஆற்றலையும் கரங்களுக்கு எழுதும் வலிமையையும் தருபவன் இறைவன் ஒருவனே.

வெற்றிக்கு வாழ்த்துக்கள்


உங்களில் ஒவ்வொருவரும் ஒரு அதிபுத்திசாலியே. ஆனால் நீங்கள் ஒரு மீனின் ஆற்றலை அதன் மரமேறக்கூடிய திறனைக் கொண்டு மதிப்பிட்டால் அந்த மீன், தன் வாழ்நாள் முழுவதும் தன்னை முட்டாள் என்று நம்பிக் கொண்டே வாழும்.

- அல்பேர்ட் ஐன்ஸ்டைன்





# அன்பும் காலமும்



முன்னொரு காலத்தில் ஓர் அழகிய தீவொன்றிருந்தது. அங்கு துக்கம், சந்தோஷம், அறிவு, அன்பு மற்றும் மற்ற உணர்வுகளும் வாழ்ந்து வந்தன.

ஒரு நாள் திடீர் அறிவித்தல். அந்தத் தீவு மூழ்கப் போகிறது என்ற அதிர்ச்சித் தகவல். எல்லா உணர்வுகளும் தங்களுக்கென்று தனியான கட்டுமரம் அல்லது தோணிகளை நிர்மாணித்து அங்கிருந்து வெளியேறத் துவங்கின.

ஆனால் அன்பு வெளியேற மறுத்து விட்டது. கடைசித் தருணம் வரை அங்கிருக்க வேண்டும் என்பதே அதன் ஆசை. எல்லா உணர்வுகளும் வெளியேறி விட அன்பு மட்டுமே எஞ்சியிருந்தது.

தீவு மூழ்கத் தொடங்கியது. கடைசியாக அன்பு தன் மற்றைய நண்பர்களிடம் உதவி கேட்போம் எனத் தீர்மானித்தது.

செல்வச் செழிப்புமிக்கப் பாரியதோர் சொகுசுக் கப்பல் அன்பைக் கடந்து சென்றது.

"செல்வச் செழிப்பே! என்னையும் உன்னுடன்அழைத்துச் செல்வாயா?" அன்பு கேட்டது.

"முடியாது, எனது கப்பல் ஏராளமான தங்கம், வெள்ளிகளினால் நிரம்பியுள்ளது, அதனால் அங்கு உனக்கு இடமில்லை."

அன்பு என்ன செய்வதென்று யோசிக்கும் போது பெருமை அழகான தோணியொன்றில் வந்தது.

"பெருமையே! தயவு செய்து எனக்கு உதவி செய் அன்பு கெஞ்சியது.

"அன்பே,! எனக்கு உதவி செய்ய முடியாது. நீ நனைந்திருக்கிறாய், நீ என் தோணியை நாசமாக்கி விடுவாய். பெருமை பதிலளித்தது.

துக்கம் அருகில் வந்தது. அன்பு கேட்டது "துக்கமே, நான் உன்னுடன் வருகிறேன்."

"ஓ அன்பே! நான் மிகுந்த கவலையில் இருக்கிறேன். நான் தனியாக இருந்தாக வேண்டும், உன்னை அழைத்துச் செல்ல முடியாது; துக்கமும் மறுத்து விட்டது.

சந்தோஷம் அன்பைக் கடந்து சென்றது. ஆனால் அது தாங்க முடியாத உற்சாகத் துள்ளலில் இருந்ததால் அன்பு அழைக்கும் குரலைக் கேட்கவேயில்லை.

திடீரென ஒரு குரல்!

"அன்பே, இங்கு வா! நான் உன்னை அழைத்துச் செல்கிறேன்" அது வயதில் முதிர்ந்தது. கரை புரண்டோடிய மகிழ்ச்சியும் குதூகலத்திலும் அன்பு எங்கே போகிறோம் என்பதைக் கூட கேட்க மறந்து விட்டது. கரை தட்டி விட்டதும் அன்பை விட்டு விட்டு அந்த முதிர்ந்த உருவம் சென்று விட்டது.

அன்பு மிகவும் முதிர்ந்திருந்த அறிவிடம் கேட்டது எனக்கு உதவி செய்தது யார்?

"அதுதான் காலம்" அறிவு பதிலளித்தது.

"காலமா?" அன்பு ஆச்சரியப்பட்டது.

ஆழ்ந்த சிந்தனையுடன் அறிவு சொன்னது "காலம் ஒன்று மட்டுமே அன்பின் விலை மதிப்பில்லாப் பெறுமதியை உணர்ந்திருக்கிறது."

**ஆங்கிலத்தில்: யாரோ**

**தமிழில்: சமீலா யூசுப் அலி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.

## மத்திய மாகாண சபைத் தேர்தல்



(9ஆம் பக்கத் தொடர்)

மாகாண தமிழ் வாக்கு வங்கி அதிகரிக்கத் தொடங்கியது. அதாவது, இ.தொ.கா. வாக்குகள் ஐ.தே.க. வாக்குகளாகின. இ.தொ.கா. வேட்பாளர்கள் கூடஎ ஐ.தே.க. விசுவாசிகளாக மாறிப் போனார்கள்.

இப்போதும் இதுதான் நடந்து கொண்டிருக்கிறது.

சேவலைக் காவு கொடுத்து விட்டு ஒரு பேரினவாதக் கட்சிச் சின்னத்தில் தொடர்ச்சியாக தம் வேட்பாளர்களை நிறுத்தி தேர்தல்களை இ.தொ.கா. சந்தித்து வருவதன் மூலம், தன் வாக்குகளை வெற்றிலை வாக்குகளாக மாற்றி விடும் ஆபத்தான கைங்கரியத்தை அது செய்து வருகிறது என்பதை அதன் தலைமைக்கு யாருமே எடுத்துச் சொல்வதில்லையா?

அரசுடன் இணைந்து பணியாற்றுவதில் எந்தத் தவறும் கிடையாது. மிகச் சிறிய சிறுபான்மையினக் கட்சிகளான மலையகக் கட்சிகள் எதிர்ப்பு அரசியலைச் செய்வது சாத்தியம் அல்ல. அதற்காக, அரசு சொல்கிற மாதிரி எல்லாம் ஆட வேண்டும் என்று அர்த்தம் கிடையாது. முஸ்லிம் காங்கிரஸ் அதைத் தெளிவாகக் கூறியிருக்கிறது. இராதா கிருஷ்ணனும் ம.ம.மு. மண்வெட்டிச் சின்னத்தில் தான் போட்டியிடுவேன் என்று கூறி விட்டார்.

ஆனால், நாங்கள் சேவல் சின்னத்தில்தான் மத்திய மாகாண சபைக்கு போட்டியிடுவோம் என்றும் மாகாண சபை அதிகாரங்களை நீர்த்துப் போகச் செய்யும் திருத்தங்களை ஆதரிக்க மாட்டோம் என்றும் பல பேரிழப்புகளைச் சந்தித்த வடக்கு மாகாண சபைக்கு அதிக அதிகாரங்களை அளிக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு என்றும் பகிரங்கமாக அறிவிக்கும் திராணி இ.தொ.கா.வுக்கு எப்போது வரும் என்று கேட்கிறார்கள் தமிழ் இளைஞர்கள்.

"நாங்கள் யாருக்கு வாக்களிக்கும்படி கை காட்டுகிறோமோ அவர்களுக்கே வாக்களிக்க வேண்டும்" என்று இ.தொ.கா. தலைமை எதிர்பார்க்கிறது. அப்படி வாக்களித்த காலம் ஒன்றிருந்தது உண்மைதான். ஆனால், தமது சொகுசுகளுக்காக மட்டும் மக்களின் வாக்குகளை அளவுக்கு அதிகமாகவே இ.தொ.கா. துஷ்பிரயோகம் செய்து வந்திருப்பதனால் இனிமேலும் வாக்காளர்கள் இ.தொ.கா. பேச்சைக் கேட்பார்கள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. இம்முறை அவர்கள் பெரும்பாலும் மனச்சாட்சிப்படி வாக்களிக்கலாம்.

ஏனெனில், முஸ்லிம்கள் மீதான தாக்குதல், 13ஐ நீர்த்துப்போகச் செய்யும் வேலைத்திட்டம், பௌத்த பேரினவாதத்தின் எழுச்சி, மதச் சகிப்புத் தன்மையற்ற நிலை, வடக்கில் நிகழும் சம்பவங்கள், இனப் பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வைப் பெற்றுத் தருவதில் அக்கறையின்மை போன்ற பல விஷயங்கள் அவை மலையக வாக்காளர்களுடன் நேரடித் தொடர்பு கொண்டவையாக இல்லாதிருப்பினும் கூட,

வெற்றிலைக்கு வாக்களிப்பதில் தயக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கலாம்.

எனவே, இ.தொ.கா. சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்.

## ஒலிபெருக்கி துஷ்பிரயோகம்



(7ஆம் பக்கத் தொடர்...)

ஒலி பெருக்கிகள் எழுப்பும் அதிர்வுகள் மனிதனின் உடல் உள கோளாறுகளுக்கு வழி வகுப்பதோடு மாத்திரமன்றி, சமூகத்திற்கு உள்ளிருந்தும் புறமிருந்தும் எமக்கு பல்வேறு சவால்களையும் அவ்வப்போது தோற்றுவித்தும் விடுகிறது. அகில இலங்கை ஜம்இயத்துல் உலமா மற்றும் முஸ்லிம் சமய விவகார திணைக்களம் இணைந்து இலங்கையிலுள்ள சகல பள்ளிவாசல்களுக்கும் ஒலி பெருக்கி பாவனை தொடர்பான வரை முறைகளை மிகவும் தெளிவாக அறிவுறுத்துமாறு நாம் வேண்டிக் கொள்கின்றோம்!

## இலங்கை-இந்தியா




(5ஆம் பக்கத் தொடர்)

ஆனால், அப்படியொன்றும் நடைபெறவில்லை. ஏனெனில், அவர்களின் இலக்கு மாகாண சபையன்று; மாறாக சுய நிர்ணய உரிமை கொண்ட சமஷ்ட்டி முறை அல்லது தனி நாடு என்பதாகும். 13ஐ ஏற்றுக் கொண்டு விட்டால் அதனுடன் மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டி வரும் என்பதாலோ என்னவோ அவர்கள் 13 சர்ச்சையில் பார்வையாளர்களாகவே இருக்கின்றனர்.

இந்த வகையில், இலங்கை அரசாங்கம் இரு பக்கங்களில் நெருக்கடிகளை எதிர்நோக்கும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. சிங்கள இனவாதத்தின் ஜனரஞ்சகமான கோஷங்களுக்கு ஏற்றபடி மாகாண சபையை ஒழிக்க அல்லது அதன் சிறகுகளை ஒடிக்க நடவடிக்கை எடுப்பதா, இந்தியாவும் சர்வதேசமும் கூறும் 13 ப்ளஸ் தீர்வுக்கு போவதா என்பதை அவசரமாக அரசு தீர்மானிக்க வேண்டியுள்ளது. பாராளுமன்றத்தில் உள்ள மூன்றில் இரண்டு பெரும்பான்மை, உயர் நீதிமன்றத்தில் உள்ள சாதக நிலை, அரசாங்கத்தின் கண் அசைப்புக்கு வீதி இறங்கத் தயாராயிருக்கும் இனவாத, மதவாத, தேசியவாதக் கும்பல்களின் ஆதரவு என்பன எல்லாம் சேர்ந்து மிக இலகுவாக 13ஐ ஒழிக்க முடியும் அல்லது அதன் அதிகாரங்களைப் பிடுங்க முடியும்.

இந்தியாவின் புகழ் பூத்த நேரு குடும்பத்தின் வாரிசான ராஜீவ் காந்தி செய்து கொண்ட ஒப்பந்தத்தைக் கிழித்தெறிவது என்பது இலங்கையின் சர்வதேச விவகாரத்தை மிக மோசமாகப் பாதிப்பதாக அமையும். இனவாதிகளைத் திருப்திப்படுத்தும் முடிவை இலங்கை எடுக்குமானால் அது குறுங்காலத்திலும் சரி, நீண்ட காலத்திலும் சரி பல புதிய பிரச்சினைகளை விலை கொடுத்து வாங்குவதாகவே அமையும். யுத்தம் முடிந்து பிரபாகரன் கொல்லப்பட்டதும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை மாட்டிக் கொண்டுள்ளது. சர்வதேசத்துக்கு வகை சொல்லும் கடப்பாட்டில் இருந்து விடுபட முடியாதுள்ளது அதனால். தன்னிச்சையாக சர்வதேசத்தைப் புறக்கணித்து உள்நாட்டில் கை தட்டல் பெறும் முயற்சிகளில் ஈடுபட்ட எத்தனையோ நாடுகள் ஈற்றில் பல இழப்புகளுடன் மீண்டும் பழைய இடத்துக்கே வர வேண்டி ஏற்பட்டதை மறந்து விட முடியுமா? அதுவும், ஏனைய நாடுகளில் தங்கியிருக்கும் ஒரு பலவீனமான பொருளாதார நிலையில் உள்ள இலங்கையைப் பொறுத்தமட்டில் ஏலவே ஜீ.எஸ்.பி. ப்ளஸ் சலுகையை இழந்தமையால் மட்டும் 400 ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டு, பல்லாயிரம் பேர் தொழிலை இழந்து, பெருந்தொகையான வெளிநாட்டுச் செலாவணியும் இழக்கப்பட்டுள்ளது. இன்றைய உலகப் போக்கில் எந்த நாடும் தன்னிச்சையாக உள்நாட்டை மட்டும் திருப்திப்படுத்திச் செயற்பட முடியாது என்பதையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

யுத்தம் முடிந்து வடக்கில் பௌதிக ரீதியான அபிவிருத்திகள், பல கோடி ரூபாய்களில் முன்னெடுக்கப்பட்டது. ஆனால், தமிழ் மக்களின் உள்ளத்தை வென்றெடுக்கவோ, தமிழ் தேசியக் கூட்டணியின் சுமுகமான உறவுகளைக் கட்டியெழுப்பவோ அரசாங்கம் சக்தி பெற வில்லை. 13 குறித்தோ, அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக அல்லது வேறு எந்த விடயமானாலும் தமிழ் மக்களின் கருத்துக்கள் பெறப்படாமல், தமிழ்த் தேசியக் கூட்டணியின் புறக்கணிப்புடன் செயற்படுவது சாத்தியப்பட போவதில்லை என்றே தெரிகிறது. மாவட்ட அபிவிருத்தி சபையும் மாகாண சபையும் கூட தோல்வியடைய அதுவே காரணம் என்பதை அறியாதவர் யாருமில்லை. இலங்கை-இந்திய உறவையும் பாதித்து தமிழ்-சிங்களவர் உறவையும் பாதிக்கும் ஒரு முடிவை நோக்கிப் போவதற்கிடையில் ஒரு முறைக்குப் பல முறை மீள் பரிசீலனை செய்ய அரசாங்கம் முயற்சிக்க வேண்டும்.

# இஸ்லாமிய வழிகாட்டுதலை பின்பற்றினால் முரண்பாடுகளை நீக்க முடியும்

## பீடாதிபதி பாக்கியராசா



பழுலுல்லாஹ் பர்ஹான்

குடும்ப உறவைப் பேணுவதில் இஸ்லாம் காட்டும் வழிகாட்டல்கள் பின்பற்றப்பட்டால் உலக முரண்பாடுகள் நிச்சயமாக நீங்கும் என மட்டக்களப்பு தேசிய கல்வியற் கல்லூரி பீடாதிபதி எஸ். பாக்கியராசா தெரிவித்தார்.

ஓட்டமாவடி அல்கிம்மா சமூக மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையில் மட்டக்களப்பு தேசிய கல்வியற் கல்லூரியின் இன நல்லுறவைப் பேணும் வகையிலான வருடாந்த புனித நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு அண்மையில் மட்டக்களப்பு தேசிய கல்வியற் கல்லூரி மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முஸ்லிம்களின் புனித நோன்பானது கோடிக் கணக்கான ஏழைகளின் பசியை உணர்த்திக் காட்டுவதுடன் அவர்களுக்கு உணவும் அளித்துவருகிறது.

இஸ்லாமிய. மதம் மிக அருமையான வழிகாட்டுதல்களை சொல்லிக் கொடுக்கிறது. நான் ஒவ்வொரு நாளும் முஸ்லிம்களின் காலை நற்சிந்தனை கேட்பேன். எனக்கு என்ன வேலைகள் இருந்தாலும் நான் முஸ்லிம்களின் காலை நற்சிந்தனை கேட்காமல் இருந்து விடுவதில்லை.

இன்று இலங்கையில் மட்டுமல்ல உலகளாவிய ரீதியில் குடும்ப உறவினர்கள் மத்தியில் மிக நீண்ட பகையும் பிரச்சினையும் உருவாகின்றது. நிம்மதியில்லாத வாழ்க்கையை அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

உண்மையில் குடும்பை உறவைப் பேணுவதில் இஸ்லாம் சொல்லும் அருமையான வழிகாட்டுதலைப் பெறும் பட்சத்தில் இந்தப் பிரச்சினைகள், நீண்ட காலப் பகைகள் நீங்கி சிறந்த முன்மாதிரிமிக்க சமூகத்தை கட்டியெழுப்ப முடியும். அதனால்தான் இஸ்லாம் மார்க்கம் சிறந்த போதனைகளை போதித்து வரும் மார்க்கமாகத் திகழ்கிறது என்கிறேன்.

எனவே, உலகத்திலுள்ள முரண்பாடுகள், பிரச்சினைகள், குடும்பப் பிணக்குகள் நீங்க குடும்ப உறவைப் பேணுவதில் இஸ்லாம் கூறும் வழிகாட்டுதலை அடியொட்டி வாழ வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அல்கிம்மா சமூக மேம்பாட்டு நிறுவனத்தின் சஊதி அரேபிய பணிப்பாளர் அஷ்ஷெய்க் அபு ஹுஸாம், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறுக், காத்தான்குடி நகர சபை உறுப்பினர் சல்மா அமீர் ஹம்சா, அல்கிம்மா சமூக மேம்பாட்டு நிறுவனத்தின் ஓட்டமாவடி கிளைப் பொறுப்பதிகாரி எம்.எஃப்.எம். ஹாறூன் (ஸஹ்வி), மட்டக்களப்பு தாளங்குடா தேசிய கல்வியற் கல்லூரி விரிவுரையாளர்கள் மற்றும் மாணவ மாணவிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



## எகிப்தில் இராணுவ புரட்சி



(15ஆம் பக்கத் தொடர்)

இந்த பிழையான அனுமானம் கடைசியில் ஜனாதிபதி முர்ஸிக்கு எதிராக அமைந்ததாக அவர் மேலும் குறிப்பிடுகிறார்.

### அடுத்தது என்ன ?

எகிப்தின் இராணுவப் புரட்சி நடைபெற்று முடிந்த நிலையில், மக்கள் அதற்கெதிராக பாரியளவில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். இதனால், இராணுவப் புரட்சி வெற்றி பெறுமா? அல்லது மக்கள் போராட்டம் வெற்றி பெறுமா? என்ற கேள்வி தொக்கி நிற்கிறது. ஒரு வேளை, இராணுவம் ஆர்ப்பாட்டத்தை கட்டுப்படுத்தினால் எகிப்தின் அரசியல் எதிர்காலம் எவ்வாறு அமையும்? என அரசியல் விற்பன்னர் பல அபிப்பிராயப்படுகின்றனர். இஸ்லாமிய சிந்தனையாளர் பஹ்மி ஹுவைதி இது தொடர்பாகக் குறிப்பிடும் போது: பழைய துருக்கியின் புதிய பரிமாணமாக எகிப்து மாறலாம் என குறிப்பிடுகிறார். அதாவது, துருக்கியிலும் இராணுவம் பல இராணுவப் புரட்சிகளை மேற்கொண்ட பிறகு தாம் இதனை நாட்டின் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காகவே மேற்கொண்டோம் எனச் சொல்லுவதற்கு தவறவில்லை. மதச் சார்பற்ற அன்காரா பல்கலைக்கழகம் இதற்காக இராணுவத் தளபதிகளுக்கு கௌரவ கலாநிதி பட்டங்களைக் கூட வழங்கியது. 1924 முதல் 2002 வரை நாட்டின் அனைத்து அரசியல் தீர்மானங்களிலும் இராணுவம் தலையிட்டது. இத்தகைய நிலை மீண்டும் எகிப்தில் வரலாம் என பஹ்மி ஹுவைதி கருதுகிறார்.

மறுபுறத்தில், பலஸ்தீன் அரசியல் விற்பன்னர் உஸ்தாத் யாஸிர் ஸஆதிரா எழுதும் போது: நிச்சயம் இஃவான்கள் மற்றும் அவர்களது அரசியல் நடவடிக்கைகள் முழுமையாக முடக்கும் செயற்பாடு நடைபெறலாம். ஆனால், அவர்கள் 70 வருட நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ள இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களின் செயற்பாடுகளை முடக்குவதால் அவர்களை கட்டுப்படுத்த முடியும் என நினைப்பது முட்டாள்தனம். என்றாலும், அவர்கள் தனது அரசியல் சாணக்கியங்களை இன்னும் பட்டை தீட்டிக் கொள்ள வேண்டும் என்கிறார்.

எகிப்தின் அரசியல் எதிர்காலம் எப்படி அமையும் என்பதை தெளிவாக வரையறுக்க முடியாத ஒரு நிலைதான் தற்போது காணப்படுகிது. எவ்வாறாயினும், இவ்விராணுவப் புரட்சியும் அதற்கு மறைகரமாக செயற்பட்டவர்களும் ஓர் அடிப்படையான செய்தியை இஸ்லாமியவாதிகளுக்கு சொல்லுகின்றனர். அதாவது அரபுலகில் மாற்றங்கள் இலகுவில் கொண்டு வர முடியாது. ஏனென்றால், மேற்கு அதனை விரும்பவில்லை என்பதை விட உங்களோடு சேர்ந்து வாழும் அரபுத் தலைவர்கள் அதனை விரும்பவில்லை என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபிகளாரின் சுன்னாவும் சட்டவாக்கமும்

மூலம்: கலாநிதி யூசுப் அல்கர்ளாவி
மொழியாக்கம்: அஷ்ஷெய்க் எம்.எப். ஸைனுல் ஹுஸைன் (நளீமி)

கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் எழுதிய "அஸ்ஸுன்னா மஸ்தரன் லில் மஃரிபா வல் ஹழாரா" (அறிவுக்கும் நாகரிகத்திற்குமான அடிப்படை என்ற வகையில் சுன்னா) என்ற நூலின் மொழிபெயர்ப்புத் தொடர்



(தொடர் 18)

## ஹஜ்ஜின்போது செய்யப்படும் செயற்பாடுகளில் சில சுன்னாவாகக் கொள்ளப்படாதவையாகும்

ஹஜ்ஜின் செயற்பாடுகளில் பெரும்பாலும் வணக்க வழிபாட்டின் சாயமே வடிந்துள்ளது. அப்படியிருந்தும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் ஹஜ்ஜின் சில செயற்பாடுகள் குறித்து நபித் தோழர்கள் அவை சுன்னாவாகவும் மார்க்கக் கிரியையா கவும் அமைந்தனவா, இல்லையா என கருத்து முரண்பாடு கொண்டுள்ளனர்.

மினாவிலிருந்து செல்லும் இரவில் பனூ களானா சமவெளி முஹஸ்ஸப்பில் தங்கு கின்ற செயல் அவர்கள் கருத்து முரண்பாடு கொண்டுள்ள விடயங்களில் ஒன்றாகும். இவ்விடத்திற்கு 'அல்அப்தஹ்' என்று சொல்லப்படுகின்றது. இது மினாவிற்கும் மக்காவிற்றும் இடையிலுள்ள பரந்த சம வெளியாகும்.

இப்னு உமர் முஹஸ்ஸபில் தங்குவதை சுன்னாவாகக் கருதியதாக நாபிஃ அறிவிக் கின்றார். உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களும் அவ்வாறே செய்து வந்துள்ளார் என அவர் கூறுகின்றார். இந்த அறிவிப்பு ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம் ஆகிய கிரந்தங்களின் பதிவு செய்யப்பட் டுள்ளது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் முஹஸ்ஸபில் தங்கி, ழுஹரையும் அஸரையும் மஃரிபையும் இஷாவையும் சேர்த்து தொழுதுள்ளார்கள் என்பதை இவர்கள் தம் கருத்துக்கு ஆதாரமாகக் கொள்கின்றனர். ஆயினும் இது குறித்து ஆஇஷா (ரழியல் லாஹு அன்ஹா) அவர்கள் இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) ஆகிய இருவரி டத்திலும் பிறிதொரு கருத்து நிலவுகின்றது.

"முஹஸ்ஸபில் தங்குவது எப்பெறுமான மும் அற்றதாகும். நிச்சயமாக அது அல்லாஹ் வின் தூதர் தங்கிச் சென்ற இடங்களில் ஓரி டம் மட்டுமேயாகும்" என இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) கூறிய தாக இமாம் புகாரி பதிவு செய்துள்ளார். எப்பெறுமானமும் அற்றது என்பதன் கருத்து அது பின்பற்றுவதற்குரிய சுன்னாவல்ல என்பதேயாகும்.

நிராகரிப்பாளர்கள் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் எதிராக பகைமையையும் நிராகரிப்பின் கிரியைகளையும் வெளிக் காட்டிய இடங்களில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இஸ்லாத்தின் கிரியைகளை வெளிப்படுத்திக்காட்ட நா டினார்கள். நிராகரிப்பும் இணை வைப்பும் அரசோச்சிய இடங்களில் ஏகத்துவத்தின் அடையாளங்களை நிலை நிறுத்துவது நபியவர்களது வழக்கமாக இருந்தது.

"வெளியேறிச் செல்வது இலகுவாக இருப்பதற்காகவே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அங்கு தங் கினார்கள் என அன்னை ஆஇஷா (ரழியல் லாஹு அன்ஹா) அறிவிக்கிறார்கள். (ஸஹீ ஹுல் புகாரி). "சமவெளியில் தங்குவது சுன் னாவல்ல" என ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) கூறியதாக இமாம் முஸ்லிம் பதிவு செய்துள்ளார்.

முஸ்னத் அஹ்மதில் பதிவு செய்யப்பட் டுள்ள ஹதீஸொன்றில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் முஹஸ்ஸ பில் தங்கியிருப்பதற்கான காரணத்தை ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) தெளி வுபடுத்தியுள்ளார். "அல்லாஹ்வின் மீது ஆணையாக எனக்காகவன்றி வெறெந்தக் காரணத்திற்காகவும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அங்கு தங் கவில்லை. இதனை ஹாபிழ் இப்னு ஹஜரும் தனது பத்ஹுல் பாரியில் குறிப்பிட்டுள் ளார்.

இப்னுல் கைய்யும் ஸாதுல் மஆதில் பின்வருமாறு கூறுகின்றார்: தஹ்ஸீப் (சம வெளியில் தங்குதல்) குறித்து அது சுன்னாவா அல்லது ஏதேச்சையாகத் தங்கிய இடமா, என முன் சென்ற எமது நல்லறிஞர்கள் முரண்பட்ட இரு கருத்துக்களைக் கொண் டுள்ளனர். அங்கு தங்குவது ஹஜ்ஜின் சுன் னாக்களில் ஒன்று என ஒரு சாரார் கூறுகின்றனர். அபூ ஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) பின்வருமாறு அறிவிப்புச் செய்கின்றார்:

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மினாவிலிருந்து செல்ல நாடிய போது, அல்லாஹ் நாடினால் நாங்கள் பனூகரைனாக்கள் நிராகரிப்பு கொள்கைக் காக உறுதிப் பிரமாணம் எடுத்துக் கொண்ட அவர்களது சமவெளியில் அதாவது முஹஸ் ஸபில் தங்குவோம் என்று கூறினார்கள். ஹாஷிம் கோத்திரத்தாரும் அப்துல் முத்தலிப் கோத்திரத்தாரும் அல்லாஹ்வின் தூதரை இந்த இடத்தில் எம்மிடம் ஒப்படைக்காத வரைக்கும் அவர்களுடன் திருமண பந்தத் தையோ, வேறு எந்த உறவையோ வைத்துக் கொள்வதில்லை என பனூகரைனாக்கள் குழுவினரும் குறைஷிகளும் தமக்கிடையே உறுதிப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர். நிராகரிப்பாளர்கள் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் எதிராக பகைமையையும் நிராகரிப்பின் கிரியைகளையும் வெளிக் காட்டிய இடங்களில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இஸ்லாத்தின் கிரியைகளை வெளிப்படுத்திக் காட்ட நா டினார்கள். நிராகரிப்பும் இணை வைப்பும் அரசோச்சிய இடங்களில் ஏகத்துவத்தின் அடையாளங்களை நிலை நிறுத்துவது நபி யவர்களது வழக்கமாக இருந்தது. 'அல்லாத்', 'அல்உஸ்ஸா' ஆகிய இரு சிலைகள் இருந்த இடத்தில் தாயிப் மஸ்ஜிதை நிறுவுமாறு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கட்டளையிட்டது இதற்கு சிறந்த உதாரணமாகும்.

தஹ்ஸீப், சுன்னா என்று கூறுவோர் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் அபூபக்ர், உமர் ஆகியோரும் அங்கு தங்கியுள்ளனர் என இப்னு உமர் அறிவிப்புச் செய்துள்ளதை தமது கருத்துக்கு ஆதாரமாக சொல்லுகின்றனர். உமர் தஹ் ஸீபை சுன்னாவாகக் கருதியதாக ஸஹீஹ் முஸ்லிமில் உள்ள அறிவிப்பையும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இப்னு உமர் அங்கு ளுஹரையும் அஸ ரையும் மஃரிபையும் இஷாவையும் தொழு கின்றவராகவும் அங்கு உறங்குபவராகவும் இருந்ததுடன், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அவ்வாறு செய்ததாகக் கூறுபவராகவும் இருந்தார். (ஸஹீஹுல் புகாரி)


# இலங்கை முஸ்லிம்களின் அரசியல் தலைமைத்துவம்

### தென்புல முஸ்லிம் அரசியல் தலைமைகளும் அவர்களின் தெரிவும்

சுதந்திரத்திற்கு முன்னதாக காணப்பட்ட முஸ்லிம் அரசியல் தலைமைகளுள் அல் ஹாஜ் மாக்கான் மாக்கார் அவர்களும் ஒரு வர். இவரின் பின்வரும் கூற்றிலிருந்து அன் றிருந்த முஸ்லிம் தலைவர்களின் அரசியல் நிலைப்பாட்டினை நாம் விளங்கிக் கொள்ள லாம்.

"...சிறுபான்மையினருக்கு (நான் யாழ்ப் பாணத்தில் அல்லது மட்டக்களப்பில் உள்ள வர்கள் பற்றி பேசவில்லை) சிங்களவர் களை ஒத்த சமமான பிரதிநிதித்துவம் தேவை யில்லை. ஆனால், எமக்குத் தேவை போது மான அளவு பிரதிநிதித்துவமும் நல்ல அர சாங்கமுமாகும். இந்த நாடு சிங்களவர் களால் ஆட்சி செய்யப்பட வேண்டும் என் பதையே நான் விரும்புகின்றேன்"

தமிழ் தேசிய காங்கிரஸின் பிரசித்தி பெற்ற அரசியல் கோரிக்கையாக இருந்த 50க்கு 50 என்ற கோரிக்கையை முஸ்லிம் தலைவர்கள் எதிர்த்த போதே அவர்களின் உண்மையான அரசியல் இலக்கு எது என்பது வெளிப்பட்டது. இவ் 50இற்கு 50 என்கின்ற கோரிக்கையானது பிரதிநிதித்துவத்தில் 50 வீதம் பெரும்பான்மை சிங்கள மக்களுக்கும் மீதமுள்ள 50 வீதம் நாட்டில் வாழ்கின்ற சிறுபான்மையினருக்கும் வழங்கப்பட



▶ சட்டத்தரணி ஸகி இஸ்மாயில்

வேண்டும் என்பதாகும். ஆரம்பத்தில் முஸ் லிம் தலைமைகளே இத்தகைய தமிழ் காங்கி ரஸின் கோரிக்கைக்கு உந்துகோலாக இருந்த னர். இருப்பினும், முஸ்லிம் லீக் கட்சியினர் பின்னர் தமது ஆதரவை வாபஸ் பெற்றுக் கொண்டனர். இதற்கு பின்வரும் காரணங் கள் முதன்மையாகக் காணப்பட்டன:

- தமிழர்கள் 50 வீத பங்கில் முழுவதை யும் பகிர்ந்து கொள்ள கருதியமை.
- இலங்கை மூர் அசோசியேசன் மற்றும் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளுக்கு இடை யில் ஒத்துழையாமை.
- 50ற்கு 50 என்ற கோரிக்கையை சிங்கள வர்கள் எதிர்த்தமை.


முஸ்லிம் தலைமைகள் கொண்டிருந்த இத்தகைய நிலைப்பாட்டினால் சோல்பரி கமிஷன் அமைக்கப்பட்ட போது முஸ்லிம் தலைமைகளும் அரசியலமைப்பு மீளமைப் பில் தமது கோரிக்கைகளையும் முன்வைப் பதற்கு சந்தர்ப்பம் கிட்டியது. இத்தகைய முஸ்லிம் தலைமைகளின் நடவடிக்கையின் பின்னணியில் இரு நோக்கங்கள் இருந்தன. அதாவது, தமிழ் காங்கிரஸின் கோரிக்கைக்கு முஸ்லிம்கள் ஆதரவு வழங்கினால் அது ராம நாதனுடைய கருத்தாக இருந்த முஸ்லிம் கள் தமிழர்களின் பரம்பரையில் வந்தவர்கள் என்பதை ஏற்றுக் கொண்டதாக அமைந்து விடும் என்றும் இதனால் முஸ்லிம்கள் தமது அடையாளத்தை இழக்க நேரிடும் எனவும் கருதினர்.

சுதந்திரத்திற்கு முன்னதான இலங்கை யில் சிங்களவர்களே அரசியல் மற்றும் வாணி பத்தில் முக்கிய பொறுப்புக்களில் நியமிக்கப் பட்டதனால் மேற்கு மற்றும் மத்திய பிர தேசங்களில் இருந்த முஸ்லிம் தலைவர் களும் சிங்களவர்களுடன் நட்புறவை வைத் துக் கொள்வது தமது நலனுக்கு நன்மை பயக்கும் எனக் கருதி வந்தனர்.

தமிழ் மக்களின் ஒரு பகுதியாக முஸ்லிம் கள் கருதப்படுவதை சேர். றாசிக் பரீட் எதிர்த்தார். இவ்வாறு கூறுவதை தனது சமூகத்திற்கு எதிரான இனச் சுத்திகரிப்பாக அவர் கருதினார். முஸ்லிம்கள் தமிழர்கள் அல்ல எனவும், முஸ்லிம்கள் அராபியர் களின் வழிவந்தவர்கள் எனவும் அவர் அழுத் தமாக தெரிவித்து வந்தார். இராமநாதனின் கருத்தை சேர். றாசிக் பரீட் அவர்கள் நிராகரித்ததுடன் முஸ்லிம்கள் தமது இறுதி மூச்சு வரை இத்தகைய பொய்யான கருத் துக்களுக்கு எதிராக போராடுவார்கள் என கண்டனமும் தெரிவித்திருந்தார். பின்னர், முஸ்லிம் தலைமைகளின் செயற்பாடுகள் ஒரு புதிய பாதையில் பயணிக்க ஆரம்பித் தது.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆரோக்கிய தேசம்

▲ தொகுப்பு: எஸ். பாயிஸா அலி ▲





# காலை உணவு கட்டாயம் வேண்டும்!

**சாப்பிட அடம்பிடிக்கும் குழந்தைகளாக இருந்தால் முதல் நாள் இரவே, அடுத்த நாள் சமையலை அவர்களுடன் சேர்ந்தே திட்டமிடுங்கள். கடைக்கு அழைத்துச் சென்று அவர்களையே காய்கறியைத் தேர்வு செய்யச் சொல்லுங்கள். ஒவ்வொரு காயிலும் என்ன சத்து இருக்கிறது என்பதைச் சொல்லுங்கள். காய்கறி குறித்து குழந்தை கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லத் தயாராக இருங்கள். இந்த அனுபவங்கள் உணவைப் பற்றிக் கற்பனை செய்யவும், அதை சாப்பிடும் ஆர்வத்தையும் ஏற்படுத்தும்.**

குழந்தையின் காலை இனிமையாக விடிவது பெற்றோர் கைகளில்தான் இருக்கிறது. எழுந்ததற்கும் பாடசாலை செல்வதற்கும் இடையில் ஒன்றரை மணி நேர இடைவெளி தேவை. 7:30 மணிக்கு பள்ளிக்குச் செல்ல, 5:30-6:00 மணிக்குள் எழ வேண்டும். அப்படியெனில் இரவு 8:30 மணிக்குத் தூங்க வேண்டும். அப்போதுதான் பதறாமல், சத்தான உணவு சாப்பிட்டு விட்டு, உற்சாகமாகப் பாடசாலை செல்ல முடியும் என்று கூறும் குழந்தைகள் நல மருத்துவர் வினோதினி காலை உணவின் அவசியத்தையும் விரிவாகப் பேசுகிறார்.

சத்தான காலை உணவே குழந்தைகளின் நினைவுத்திறன், எச்சரிக்கை உணர்வு, ஒருமுகத் தன்மை, பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன் மற்றும் மகிழ்ச்சியான மனநிலைக்கு வழிவகுக்கும்.

காலை உணவைத் தவிர்ப்பதால் வயிற்றில் அமிலம் சுரந்து, புண் ஆகி, நாளடைவில் அல்சர் பிரச்சினையாக மாறும். உடல் வளர்ச்சியையும் பாதிக்கும். மூளைக்குச் செல்லும் இரத்த ஓட்டத்தில் குளுக்கோஸ் குறைந்து சோர்வை ஏற்படுத்தும்.

சில வீடுகளில் எழுந்தவுடன் பால் கொடுப்பதால் செரிமானம் ஆகாமல் குழந்தைகள் மந்தமாகக் காணப்படுவார்கள்.

காலை உணவு சாப்பிடாமல் நொறுக்குத் தீனியை உள்ளே தள்ளிக் கொண்டே இருந்தால் பசியும் தீராது; உடலுக்கும் நன்மை இல்லை; எடையும் அதிகரிக்கும்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகும் உணவைத் தவிர்ப்பதால், உடல் அதிக சக்தியை செலவளிக்கிறது. இது சோர்வை அதிகரிக்கும். உடல் பலவீனத்தால் நோய் எதிர்ப்பு சக்தி குறையும். காய்ச்சல், சளி மற்றும் வைரஸ் தொற்றுகளின் பாதிப்பு அதிகமாகும். உடல் நலம் பாதிக்கப்படுவதால் இயல்பான வளர்ச்சியும் படிப்பும் பாதிக்கப்படும். இக்குழந்தைகள் கோபம், எரிச்சலுடன் காணப்படுவார்கள். எதிலும் நாட்டம் இல்லாமல் தனிமைப்படுத்தப்படுவார்கள். இதனால் மனநலம் பாதிக்கப்பட்டு வெறித்தனமான செயல்களில் ஈடுபடும் அபாயமும் உண்டு.

காலை உணவு முறையாக இருந்தால்தான் இரத்தத்தில் குளுகோஸின் அளவு சரியாக இருக்கும். மூளை, இதயம், செரிமான மண்டலம் மற்றும் எலும்பு, தசைகளும் ஆரோக்கியமாக இருக்கும். நார்ச்சத்துள்ள காய்கறிகள், பருப்பு வகைகளை உட்கொண்டால் செரிமான சக்தி அதிகரிக்கும். கொழுப்பு நிறைந்த காலை உணவு மந்த நிலையை உருவாக்கும். மாவுச்சத்து, கொழுப்பு, புரதம், விட்டமின் மற்றும் மைக்ரோ நியூட்ரியன்ட்ஸ் என சமச்சீரான காலை உணவு அவசியம்.

### பட்டினி கிடக்கும் பச்சைக் குழந்தைகள்

தேசிய அளவில் நடத்தப்பட்ட ஆய்வில், பெரும்பாலான குழந்தைகள் காலை உணவைத் தவிர்ப்பதற்கு நேரமின்மையைக் காரணம் காட்டுகிறார்கள். வாரத்தில் 3-5 நாட்கள் வரை காலை உணவை 22 சதவிகிதக் குழந்தைகள் தவிர்க்கிறார்கள். 20 சதவிகிதக் குழந்தைகள் வாரத்தில் ஓரிரு நாட்கள் தவிர்க்கிறார்கள். 58 சதவிகிதக் குழந்தைகள்தான் தினமும் சாப்பிடுகிறார்கள். அதுவும் சரிவிகித சத்துள்ளதா என்பது கேள்விக்குறியே.

### குழந்தைகளை சாப்பிட வைப்பது எப்படி?

சாப்பிட அடம்பிடிக்கும் குழந்தைகளாக இருந்தால் முதல் நாள் இரவே, அடுத்த நாள் சமையலை அவர்களுடன் சேர்ந்தே திட்டமிடுங்கள். கடைக்கு அழைத்துச் சென்று அவர்களையே காய்கறியைத் தேர்வு செய்யச் சொல்லுங்கள். ஒவ்வொரு காயிலும் என்ன சத்து இருக்கிறது என்பதைச் சொல்லுங்கள். காய்கறி குறித்து குழந்தை கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லத் தயாராக இருங்கள். இந்த அனுபவங்கள் உணவைப் பற்றிக் கற்பனை செய்யவும், அதை சாப்பிடும் ஆர்வத்தையும் ஏற்படுத்தும்.

### காலை உணவு வேளையை இனிமையாக மாற்ற சில டிப்ஸ்...

குளித்தல் உள்ளிட்ட அன்றாடக் கடமைகளைச் செய்து முடித்து, குழந்தைக்குப் பசித்த பிறகு உணவு வழங்கலாம். வழக்கமான உணவு வகைகளுக்குப் பதிலாக, குழந்தைக்குப் பிடித்த உணவு வகைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கலாம். பாலுடன் கோர்ன் ஃபிளேக்ஸ், வாழைப் பழம் சேர்த்துக் கொடுக்கலாம். இதில் புரோட்டீன், இரும்புச் சத்து, கார்போஹைட்ரேட் மற்றும் நார்ச் சத்து இருக்கிறது. ஓட்ஸ் காய்கறி கலவை அல்லது தேன் கலந்த ஓட்ஸ், அரை அப்பிள் கொடுக்கலாம். ரவையுடன் முந்திரி, பாதாம், உலர் திராட்சை சேர்த்த கேசரி அல்லது பிரெட் சேண்ட்விச் அல்லது வெண்ணெய் தடவிய பிரெட் கொடுக்கலாம்.

சமைக்கும் போது சின்னச் சின்ன வேலைகள் செய்ய குழந்தைகளை அனுமதியுங்கள். தனது பங்களிப்பை செலுத்தும் போது, அது, தான் சமைத்த உணவு என்ற எண்ணத்துடன் ரசித்து ருசித்து சாப்பிடப் பழகும்.

பாடசாலைக்கான தயாரிப்புகளை இரவே முடித்து விடுங்கள். தொலைக்காட்சி நேரத்தைக் குறைத்து, வேறு விளையாட்டுகளை அறிமுகம் செய்யுங்கள். குழந்தைகளின் வேலையை அவர்களே செய்ய வாய்ப்பளியுங்கள். காலை நேர டென்ஷனைத் தவிர்க்க இது உதவும். சாப்பிடும் போது பெற்றொரும் இணைந்து கொண்டால் போட்டி போட்டு சாப்பிட்டு சுவாரஸ்யத்தை ஏற்படுத்தலாம். பெற்றோரும் சரி விகித சத்துணவுக்கு மாறுவதே நல்லது.

பசித்த வயிறும் அழுத கண்களுமாக குழந்தைகளைப் பாடசாலைக்கு அனுப்பும் நிலை மாறட்டும்!

சத்தாக சாப்பிட வைத்து இன்முகத்துடன் வழியனுப்புவோம்! முத்தங்களை பரிசாகப் பெறுவோம்!

குறிப்பு: கடந்த இதழில் ஆரோக்கியம் பகுதியில் **ரமழான் கால உணவுப் பழக்கம் அமைய வேண்டியது எவ்வாறு?** என்ற தலைப்பிலான கட்டுரையை டாக்டர் எம்.ஏ. முர்ஸலீன் (BUMS) எழுதியிருந்தார். தவறுதலாக அவரது பெயர் பிரசுரிக்கப்படவில்லை. தவறுக்கு வருந்துகிறோம். (ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுப்புறவியல்

ஏ.எம்.எம். ஸியாத் - இறக்காமம்

## கிழக்குத் தென்கோடி

(சென்ற இதழின் தொடர்)

### இணை மொழிகள்

ஒருங்கிசைவான ஓசையுடைய இரு சொற்கள் இணைந்து பொருட் செறிவைத் தரும் மொழிகளை இணை மொழிகள் என்பர். இது கிராமப் புரங்களில் நகைச்சுவைக்காகவும் உரையாடல்களில் ரசத்தைக் கூட்டுவதற்கும் கையாளப்படுகின்றன. பல நூறு இணை மொழிகள் ஊர்கள் தோறும் உலவி நிற்கின்ற போதிலும் பெருவாரியாகக் கையாளப்படும் மொழிகளை இனி நோக்குவோம்.

*அடக்கொடுக்கம்:* திருமணப் பேச்சுகளின் போது, மணமகளைப் பற்றி உயர்வாகப் பேசுகையில் "பொண்ணு நல்ல அடக்கொடுக்கமான புள்ள" என்று கூறி, மணமகள் மீது நல்லெண்ணத்தையும் விருப்பத்தையும் ஏற்படுத்தும் வகையில் பேசுவதை நாளாந்தம் காண முடிகிறது.


*அணம் மணம்:* 'தவறானவை' என்பது பொருள். இதனை நன்கு விளங்கிக் கொள்ள மேல் வரும் தொடர் உதவும். "தம்பி! என்னப் பத்தி ஊராக்கள் நல்லாத்தான் நெனச்சிக்கி இருந்தாங்க. ஒங்கட சம்பந்தத்துக்குப் பொறகு அணம் மணமான கதைகள்தான் கூடக் கொறைய வருகுது. அதனால, நமக்கு நீங்க ஒத்து வராது." என்று கூறுவர்.

*ஆக்கட்டம் காச்சட்டம்:* சோறு ஆக்குவதையும் கறி சமைப்பதையும் இவ்வாறு கூறுகின்றனர். குடும்பத் தலைவியர் தமது பொழுதுபோக்குகள் பற்றிப் பேசிக் கொள்ளும் போது, அவர்கள் சலித்துப் பேசிக் கொள்ளும் இணை மொழியாகக் காணப்படுகின்றது. "என்ன மச்சி பொழுது போக்கு" என்று ஒருவர் கேட்டால் அதற்கு மற்றவர், "ம்ஹ்... ஆக்கட்டம் காச்சட்டத்திற்கே நேரம் போகுது அதுக்குள்ள பொழுதுபோக்கு எங்க கெடக்கு" என்று பதில் கூறுவர்.

*அலாய் பலாய்:* புறம் பேசுதலைக் குறிக்கும். இதைக் 'கழுவிக் குடித்தல்' என்ற நாட்டார் மரபுத் தொடர் விளக்கி நிற்கின்றது.

*அய்ன இய்ன:* 'கண்ட இடங்களில் எல்லாம்' என்பது பொருளாகும். "அவன் சின்னப் புள்ளயில அய்ன இய்ன பொறக்கித் திண்டு வளந்தவன். அந்த எரப்பணப் புத்தி அவன உட்டுப் போகுமா?" என்று கூறுவர்.

*அட்டா துட்டி:* சிறுவர்களில் சிலர் முரண்பாடான (துடுக்குத்தனம்) அதீத செயற்பாடுகளில் ஈடுபட்டு வீட்டிலோ, பாடசாலையிலோ அசாதாரண



நிலையைத் தோற்று விப்பர். இவர்களை 'அட்டா துட்டிக்' காரர்கள் என முத்திரை குத்தி நடைபெறும் பிரச்சனைகளுக்கெல்லாம் பொறுப்பாளியாக ஆட்படுத்தப்படுவர்.

*அடிச்சிக் கிடிச்சி:* வலிந்து செய்வது என்பது பொருளாகும். இவ்விணை மொழியானது 'அடித்துக் கடிந்து' என்பதன் பேச்சு வழக்காறாகக் காணப்படுகிறது. "பிள்ளைகள அடிச்சிக் கிடிச்சிப் படிப்பிக்கேலா, அன்பாலதான் கட்டியாளொனும்" எனும் அமுத வார்த்தைகள் குழந்தை உளவியல் பாங்கினைப் பளிச்சிட்டு நிற்பதை காண முடிகிறது.

*உப்புச் சப்பு:* உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்பார்கள். அது போலவே பொருள் தீர்ந்த வார்த்தைகளை உப்புச் சப்பில்லாதவை எனப் புறந்தள்ளுவர். உபயோகமில்லாத் தன்மை, பயனற்ற செயல்களை வெளிப்படுத்திக் கூறிவிடுகிறது. "இன்று பல பெரிய சங்கங்கள் கூட உப்புச் சப்பில்லா கூட்டங்களையே நடத்திக் கொண்டிருக்கின்றன." எனும் கூற்றின் மூலம் இதன் பொருளை நன்கு விளங்கிக் கொள்ள முடிகிறது.

*ஓதலும் படிப்பும்:* இது எல்லைக்குட்பட்ட அறிவினைக் கூறும். "அவர்ர ஓதலும் படிப்பும் அவ்வளவுதான்" என்று ஒருவரின் அறிவெல்லைப் பரப்பைக் கோடிட்டுக் காட்டுகிறது.

*கண் தலை:* ஆடம்பர வாழ்வு அதிஷ்டவசமாகக் கிடைக்கும் போது, தன் பழைய நிலையை மறந்து பகட்டு வாழ்க்கை வாழ்கின்றவர்களைக் குத்தலாகப் பேசுவதற்கு இவ்விணை மொழி பெரிதும் துணையாகிறது. இதனை ஏனைய தமிழ்ப் பிரதேசங்களில் 'தலை கால்' என வழங்கப்படுகின்றது. "தம்பி, கண் தலை தெரியாம ஆடுறாரு" எனும் கூற்று வாயிலாக நன்கு விளங்கிக் கொள்ளலாம்.

*காது கன்னம்:* சிலர் தம்மைத் தாமே புகழ்ந்து பேசிக் கொண்டே இருப்பர். இவ்வாறான தற்பெருமை வாதிகளின் வாதங்களும் உரையாடல்களும் பிறருக்கு துன்பம் விளைவிப்பனவாகவும் சலிப்பை ஏற்படுத்துவனவாகவும் அமைகின்றன. "அவாட புகழ் கதயக் காது கன்னம் வெச்சிக் கேக்கேலா" என்று கூறுவர். மிகக் கொடூரமான சத்தங்களைக் கேட்க முடியாது போகும் சந்தர்ப்பங்களில் இவ்விணை மொழி நன்கு பயன்படுகின்றது.

*காணி கீணி:* கிழக்கு மாகாணத்தில் மிகப் பரவலாகக் காணப்படும் ஒரு விடயமாக சீதனக் கொடுக்கல்-வாங்கல்கள் காணப்படுகின்றன. சீதனம் வாங்கப்படுவதை நியாயப்படுத்தும் பல பேர்கள் எங்கும் பரவியே காணப்படுகின்றனர். திருமணப் பேச்சின் போது, சீதனத் தொகை, வீடு, காணிக் கொடுக்கல் வாங்கல்கள் போன்ற பல விடயங்கள் பேசப்படும். அப்பேச்சு வார்த்தைகளின் போது "காணி கீணிகள் கொடுத்தாத்தானே நல்லாரிருக்கும். எல்லாம் நம்மட பிள்ளகளுக்குத்தானே?" எனச் சாமர்த்தியமாகப் பேசிக் கொள்வர்.

*நாத்த சூத்தம்:* பிறர் குறைகளை இவ்வாறு கூறுவர். "மால மஃரிக்கி நேரம் அவட நாத்த சூத்தக் கதைகளெப் பேசாத மச்சி..." என பெண்களின் உரையாடல்கள் களைகட்டிச் செல்லும் அதேவேளை, பழுந்தடைந்த தின் பண்டங்களையும் இவ்விணை மொழியால் சூட்டுவர்.

## சிறு குறிப்பு




| | |
|---|---|
| நூலின் பெயர் | : முஸ்லிம் சமூகமே நாம் எங்கே இருக்கின்றோம்? |
| ஆசிரியர் | : ரஸீன் பாத்திமா ரஸ்மா |
| வெளியீடு | : ஷாபி பதிப்பகம் |
| முகவரி | : வெயாங்கல்ல, அகலவத்த |
| விலை | : 150 ரூபா |



# நினைவுகளில் தொங்கும் நீர் ஊஞ்சல்

-ஒட்டமாவடி அறபாத்-

தொடர்– 43

முஸ்லிம் குரல் பத்திரிகை பௌசர் அவர்களின் முயற்சியால் வெளிவந்து கொண்டிருந்தது.

அப்போது இலங்கை அரசிற்கும் புலிகளுக்கும் இடையே சமாதான ஒப்பந்தம் நிகழ்ந்தது. இலங்கை அரசுடன் பேசிக் கோண்டே விடுதலைப் புலிகள் முஸ்லிம்கள் மீதான மோசமான அடக்கு முறையைப் பிரயோகித்து வந்த காலம். முஸ்லிம் காங்கிரஸ் நோர்வேயுடன் சேர்ந்து கொண்டு விடுதலைப் புலிகளின் முஸ்லிம்கள் மீதான அடக்குமுறையை மௌனத்துடன் பார்த்துக் கொண்டிருந்தது. முஸ்லிம்கள் மீதான விடுதலைப் புலிகளின் அடக்கு முறையை எதிர்த்து முஸ்லிம் காங்கிரஸால் பேச முடியவில்லை. அந்தக் காலகட்டதில் முஸ்லிம்களின் குரலாக முஸ்லிம் குரல் பத்திரிகை துணிச்சலுடன் பேசியது.

வாழைச்சேனை பிரதேசத்தில் சமாதான ஒப்பந்த காலகட்டத்தில் முஸ்லிம்களைக் கடத்தி, எரித்துக் கொல்லுமளவிற்கு நிலைமை இருந்தது. இது குறித்து சென்ற பகுதிகளில் விரிவாக எழுதியிருக்கிறேன். முஸ்லிம் குரல் இந்த அடக்கு முறையை எதிர்த்து துணிச்சலாகக் குரல் கொடுத்தது. ரஷ்மி, அப்துல் போன்றவர்களுடன் நானும் பத்திரிகைக்குப் பங்களித்து வந்திருக்கிறேன்.

கொழும்பில் பத்திரிகைக் காரியாலயம், ஆறு பேருக்கு மேல் முழு நேர பணியாளர்கள், வாடகை, மாதாந்தக் கொடுப்பனவு, அச்சக செலவு என மோசமான நெருக்கடிகளை சந்தித்து பத்திரிகை வந்து கொண்டிருந்தது. இரு தடவை என நினைக்கிறேன், பத்திரிகை அச்சிட்ட அச்சகத்திற்குப் பணம் கொடுக்க நானும் எனது காரியாலய பணத்தினைக் கடனாகக் கொடுத்து உதவி இருக்கிறேன்.

முஸ்லிம் குரலை நடத்த முடியாத நிதி நெருக்கடியால் அப்பத்திரிகை நின்று போனது. வார இதழாக வந்து இரு வார இதழாக வந்து இறுதியில் வராமலே போனது...

இலங்கை முஸ்லிம்களின் பத்திரிகை வரலாற்றில் அப்பத்திரிகைக்கு மறுக்க முடியாத முக்கியத்துவம் உண்டு. இக்காலகட்டத்தில்தான் அரசுக்கும் புலிகளுக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தையில் முஸ்லிம்களின் இடம் மறுக்கப்பட்டது. முஸ்லிம்கள் ஒரு தேசிய இனம் இல்லை என கருத்துக்கள் எழுந்தன.

முஸ்லிம்களுக்கான தனித் தரப்பை வலியுறுத்தியும் முஸ்லிம்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையை முன்வைத்தும் கோட்பாட்டு ரீதியாக முஸ்லிம்களுக்குள் இருந்து ஒரு பத்திரிகை வருவது முக்கியம் எனக் கருதியதால் சுயம் பத்திரிகை வந்தது. இப்பத்திரிகையில் நான், அப்துல், பௌசர், முஷ்றீன், சிராஜ், ஆத்மா, பாரிஸ், ரஷ்மி ஆகியோர் இருந்தோம்.

பொரல்லையில் தமிழ் பத்திரிகை மட்டும்தான் கிடைக்கும். நூல்கள் கிடைக்காது. 103 பஸ் எடுத்தால் மருதானைக்கு வந்து வாசிகசாலையைத் தேடலாம் என்ற உதிப்பில் ஒரு சனிக்கிழமை மாலை மருதானைக்கு வந்தேன். கொடகே புத்தக நிலையம் என்ற பெயர் பலகையைக் கண்டு மலைத்து உள்ளே சென்றேன். அனைத்தும் சிங்கள மொழி மூல நூல்கள். இன்று கொடகே புக் எம்போரியம் சிறந்த தமிழ் நூல்களைத் தெரிவு செய்து வருடாந்தம் விருது வழங்குவதுடன், தமிழ் மொழியிலான நூல்களின் தொகுதியையும் விற்பனைக்கு வைத்துள்ளது. இந்த விருது தெரிவிலும் இலக்கியப் பெருச்சாளிகளின் கை வரிசை நிகழ்வதாகக் குற்றச்சாட்டும் இருக்கின்றது.

நேரே பொலிஸ் நிலையப் பக்கமாக நடந்து வந்த போது சிலர் தீவிரமாகவே வாசிப்பில் இருப்பதைக் கண்டு அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. ஆர்வ மேலீட்டால் உள்ளே நுழைந்தேன். சுற்றும் முற்றும் பார்க்கவில்லை. யாரும் புத்தகம் படிப்பதைக் கண்டால் போதும் வாசிப்பவனின் மனம் பரபரக்க ஆரம்பித்து விடும். எதிரே இருக்கும் முகம் தெரியாத சின்னக் குழந்தையுடன் அதன் அம்மாவுக்குத் தெரியாமல் கண்களால், கைகளால் ஜாடை காட்டி சிரிப்பதைப் போல் மனம் இறக்கை கட்ட ஆரம்பித்து விடும். அவ்வாறான மன நிலைதான் அந்த பத்திரிகை விரித்துப் பார்க்கும் இடத்தைக் கண்டதும் ஏற்பட்டது.

பத்திரிகைகள், அதை வாசிக்கும் மனிதர்கள் இவர்களை நோட்டமிட்டுக் கொண்டே புத்தக அலுமாரிகள் உள்ளனவா என்று ஆராய்ந்தேன். ஒன்றுமில்லை. எல்லோரும் தீவிரமாக வாசிப்பதில் இருந்தார்கள். அதுவும், ஆங்கிலப் பத்திரிகை. என்னை வியப்புடனும் ஆச்சரியத்துடனும் சில விழிகள் பார்த்து விட்டு வாசிப்பதில் ஆர்வமாய் இருந்தன.

முஸ்லிம்கள் செறிந்து வாழும் மருதானை வாசிகசாலையில் தமிழ் பத்திரிகைக்கு தடையா? பத்திரிகைக்கு செய்தி கிடைத்து விட்ட மகிழ்ச்சியில் புலனாய்வு செய்யும் பணியில் இறங்கினேன். ஒருவரை "அனுகி இங்க தமிழ் பத்திரிகை இல்லையா?" என்றேன். என்னவோ பியர், பன்றி இறைச்சியைக் கேட்டு விட்ட மகா குற்றவாளியைப் பார்ப்பதைப் போல் என்னை உச்சி முதல் உள்ளங்கால் வரை அதிசயமாகப் பார்த்தார். அவர் இதழோரம் எள்ளல் துளி எட்டி நின்று வேடிக்கை காட்டியது.

என்னை நோக்கி காத்திரமாக ஆனால், மிக இரகசியமாக கத்தினார். "மொழி முக்கியமல்ல குதிரையின்ர பெயரை சொல்லுங்க கட்டிடுவோம்" என்றார். அப்போதுதான் மேலே திரையில் குதிரைகள் மூச்சிரைக்க ஓடிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன்!

பந்தயக் குதிரை நிலையத்திற்கு நுழைந்திருக்கின்றேன் என்பதை நினைக்கையில் மிகுந்த அவமானமாய் இருந்தது. அவர்கள் வாசிக்கவில்லை தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் புரிந்தது. நானே என் நிலையை எண்ணி சிரித்துக் கொண்டேன்.

பிற்காலங்களில் குதிரைப் பந்தய கசினோக்களைக் கடந்து செல்கையில் இதழோரம் முகிழும் புன்னகையைக் கட்டுப்படுத்த முடிவதில்லை. 2000ஆம் ஆண்டுக்குப்பின் கொழும்பில் நல்ல புத்தகங்களைப் படித்துப் பயன் பெற்றேன் என்பது வேறு விடயம்.

நான் எழுதத் தொடங்கி கொஞ்சம் பெயர் அடிபடத் தொடங்கிய காலம். சொந்தக் கிராமத்தில் அறிமுகம் இல்லை. படித்ததும் வெளியூரில். படிப்பு முடிந்து வேலையும் வெளியூரில். பெயர் மட்டும்தான் சனங்களுக்குப் பரிச்சயம். அனேகருக்கு ஆளைத் தெரியாது.

இதனை சாதகமாகப் பயன்படுத்தியவர்களும் உண்டு. வில்லங்கமான எழுத்துக்கள் பிரசுரமாகும் போது மட்டும் அவர்கள் கழன்று விடுவார்கள். புலிகள் உச்சத்தில் கோலோச்சிய காலத்தில் புலிகளுக்கெதிரான பதிவுகளைப் புனைப் பெயரில் அன்றி சொந்தப் பெயரிலேயே எழுதியதால் என் எழுத்துக்கு சொந்தம் கொண்டாடிய பலர் கழுவுற நீருல நழுவுற மீனாகிப் போனார்கள்.

ஊஞ்ஞல் இன்னும் ஆடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸதகதுல் ஜாரியா

கிண்ணியா எம்.எம். அலி அக்பர்




வழமை போன்று அன்றும் கடைத் தெருப் பக்கம் சென்றான் றிசான். கொழும்பிலிருந்து கடைகளுக்கு விற்பனைப் பொருட்களை ஏற்றிக் கொண்டு கிழமைக்கு மூன்று அல்லது நான்கு தடவைகள் லொறிகள் வந்து கொண்டே இருக்கும். இந்த லொறிகளிலிருந்து விற்பனைப் பொதிகளை இறக்கி அந்தந்தக் கடைகளுக்குத் தூக்கிச் சுமந்து கொடுப்பது தான் றிசானின் தொழில். லொறிகள் வராத சந்தர்ப்பங்களில் பெரிய கடைகளின் முதலாளிமார் றிசானை தங்கள் வீட்டிலுள்ள முக்கிய வேலைகளுக்குப் பயன்படுத்துவார்கள்.

ஏதோ கிடைக்கின்ற கூலிப் பணத்தில் சேமிப்பில்லாமல் வாழ்க்கைச் செலவை சுமாராக ஈடு செய்து வந்தான் அவன். படித்தது ஆறாம் வகுப்பு வரைக்கும் தான். பட்டதாரிகளுக்கே வேலை கிடைக்காத இக்கால கட்டத்தில் தனக்கு எந்த வேலைதான் கிடைக்கப் போகிறது என்றுதான் இந்த வேலையை செய்து வருகிறான்.

ஞாயிறு தினங்களில் பெரிய கடைகளொன்றும் திறப்பதில்லை. றிசானும் அன்றைய தினத்தில் வீட்டிலேயே இருப்பான். அன்று ஞாயிற்றுக்கிழமை காலை மணி 10.30ஐயும் தாண்டிக் கொண்டிருந்தது அவனது குடிசையின் முன்னால் ஆடம்பரமான காரொன்று வந்து நின்றது. அதிலிருந்து ஜமீந்தார் போன்ற ஒருவர் இறங்கி றிசானுடைய வீட்டையே நோக்கி வந்து கொண்டிருந்தார். கிட்ட வந்ததும் றிசானை ஏற இறங்கப் பார்த்தவர்,

"என்னடா றிசான் இப்புடி இளைத்துப் போயிருக்கியே! அடையாளமே தெரியலடா"

அந்தக் குரல்தான் றிசானுக்கு வந்தவர் யார் என்பதை நினைவூட்டியது. பாடசாலையில் ஆரம்ப வகுப்பிலிருந்து ஆறாம் வகுப்பு வரையும் தன்னோடு ஒன்றாகப் படித்த நாசீர்தான் என்பதை உடனே புரிந்து கொண்டான் அவன்.

எந்த நேரத்திலும் எங்கு சென்றாலும் இருவரும் இணைந்துதான் செல்வார்கள். உண்மையில் றிசானுக்கு இணை பிரியாத நண்பனாக எல்லா வகையிலும் இருந்தவர்தான் செல்வச் சீமானாக வந்திருக்கும் இந்த நாசீர்.

தன்னை விட்டும் 1981ஆம் ஆண்டில் பிரிந்து சென்றவன், 32 வருடங்களுக்குப் பிறகு தன்முன் வந்து நிற்கின்றானே, அப்பாடா! இருவரும் ஆரத் தழுவிக் கொண்டார்கள். நாசீருடன் தொடர்பு இல்லாதிருந்தாலும் நல்ல செலல்வாக்குடன் இருக்கிறான் என்பதை மட்டும் தெரிந்து வைத்திருந்தான் றிசான். தன் ஆரம்பகால உயிர் நண்பன் றிசானைப் பற்றி இரண்டொருவரிடம் விசாரித்த நாசீருக்கு அவன்மேல் பரிதாபமும் பற்றும் ஏற்பட்டது. அதனால்தான் நேரில் அவனைச் சந்தித்து உதவும் நோக்கோடு வந்தார்.

றிசானின் வீட்டை கண்ணோட்டமிட்டார் நாசீர். உடைவுபட்ட மேசையின்மேல் காட்போட் மட்டை, புழுதி படிந்த புத்தகங்கள், மூன்று கால் நாற்காலி ஒன்று, பூச்சு இல்லாத செங்கல் தெரியும் வீட்டுச் சுவர்கள், கண்ணாடி உடைந்த கப்போட், வெடிப்புகள் தெரியும் வீட்டுத் தரை, தடிப்புத் துணியால் மறைக்கப்பட்ட ஜன்னல்கள் இரண்டு இப்படித்தான் காட்சியளித்தது றிசானின் வீடு. மனைவி, இரு பிள்ளைகள் சகிதம் மிக ஏழ்மையாகவே வாழ்ந்து வருகிறான் என்பதை நன்றாகவே ஊகித்துக் கொண்ட நாசீர்,

"இதென்னடா ஓன்ட வாழ்க்க! ஒன்னப் பற்றி எப்புடியெல்லாம் நெனச்சி வெச்சிருந்தன் தெரியுமாடா"

" நானென்னடா செய்றது; ஆறாம் வகுப்பு படிச்ச எனக்கு எவண்டா வேல தரப் போறான்? வேற தொழில் செய்யவதென்டாலும் முதல் வேணும். இதுக்கு நான் எங்கடா போறது. ஆரம்பத்தில 3 பெரிய கடைகளில மாறி மாறி சேல்ஸ் மேனா இருந்தன். அப்போதுதான், நான் உழைக்கிறன் என்ற எண்ணத்தோட கலியாணத்தையும் முடிச்சித் தந்தாங்க. அதுக்குப் பொறவு அது ஒத்துவரலடா நாசீர். நெல் அறுவடைக் காலங்களில வயல் பக்கம் போனன் பசி பட்டினி இல்லாமலிருந்திச்சி. அதுக்கும் இப்ப ஆப்பு வெச்சிட்டாங்க. நெல் அறுவட செய்யிற மெசின் வந்த பொறகு எங்களப் போல ஆக்களுக்கு எடமில்லாமப் போச்சி. அதனால இப்ப நாட்டாம வேல செய்யிறன்"

"அடப்பாவமே! அது மிச்சம் கஷ்டமான வேலயடா" என்றவன்,

"இனி இப்புடியெல்லாம் நீ கஷ்டப்பட வேணாம். அதுக்கு சில ஏற்பாடுகளச் செய்யப் போறன். என்ர தேவக்கதிகமாக சில குத்தகை வருமானங்கள் கிடைக்கிது. அதில ஒரு பகுதிய ஒனக்கு ஒதுக்குறன். அது மட்டுமில்ல ஒனக்கு தேவைக்கி பணம் தேவப்பட்டா தயங்காம என்னிடம் வந்து கேள்"

இந்த வார்த்தைகளைக் கேட்ட றிசான் அப்படியே அதிசயித்துப் போனான்.

அன்றைய மதிய உணவை றிசானின் குடும்பத்தாருடன் இணைந்து சாப்பிட விரும்பினார் நாசீர். தரையில் பாய் விரித்து சாப்பிடலானார்கள். நாசீருக்காக, அவர் திருப்தியாக சாப்பிட வேண்டுமென்று நாவுக்குச் சுவையாக சமைத்திருந்தாள் றிசானின் மனைவி தாஹிரா.

றிசான் குடும்பத்தாரின் மகிழ்ச்சிப் பிரவாகம் அவரவர் முகங்களில் நன்றாகவே ஜொலித்துக் கொண்டிருந்தது. இதனை அவதானித்த நாசீரின் முகமும் பன்மடங்கு ஜொலித்து, இந்தக் குடும்பம் இன்றுள்ளது போல் எப்போதுமே இருக்க வேண்டும் என்றே அவரது உள்ளமும் வேண்டிற்று.

அன்று மாலை 4 மணிக்கெல்லாம் நாசீர் அங்கிருந்து புறப்பட ஆயத்தமானார். அப்போது றிசானை அழைத்து,

"டேய் றிசான்; நான் தர ஏற்பாடு செய்த மூன்று கடைகளின் குத்தகைப் பணம் ஒனக்குப் போதா இருக்குமென்டு நெனக்கிறன்..." இதைச் சொல்லி முடிப்பதற்குள்,

"இல்லடா நாசீர். நீ தரப் போறதாகச் சொல்லுகிற பணத்தையெல்லாம் விட, என் மீது நீ வெச்சிருந்த அன்பின் நிமித்தம் இங்கு வந்து ஏழ்மையா இருந்த எங்களோட உறவாடி, சாப்பிட்டு மகிழ்ந்தாயே அது தாண்டா எனக்கிப்ப பெரிசாத் தெரியுது. எனக்கு எதுவும் தேவலப்பா. ஒண்ட அன்பு என்றைக்கும் இருந்தா அதுவே எனக்குப் போதும்"

"குத்தகை வருமானம் ஒரு பக்கமிருக்க, எனக்கு ஆறு கடைத் தொகுதிகள் இருக்கு. அதில ஒரு மல்டி கடைக்கு ஒன்ன உரிமையாளனாக்கப் போறன்"

"இல்லடா நாசீர் வேணாண்டா. நான் எப்புடியும் பிளச்சிக்குவன். ஒனக்கு இந்தச் சிரமங்களெல்லாம் ஏன்டா, விட்டிடு"

"அந்தக் கருணையாளன் அல்லாஹ் எனக்கு நிறையவே தந்துட்டான். ஒரு வேள என்னத் தீஉரென்டு அவன் அழச்சிட்டான் என்று வெச்சிக் கொள் றிசான்..."

"டேய், டேய்! ஏன்டா இப்புடியெல்லாம் பேசுறாய், நீண்ட காலம் நீ வாழணும்"

"ஒரு பேச்சுக்குத்தான் சொன்னன். அப்படி ஆனாலும் அல்லாஹ் என்னிடம் கேட்பானே! பணச் செல்வத்த அள்ளித் தந்தேனே, எப்புடியெல்லாம் நீ அதப் பயன்படுத்தினாய் என்று. இதற்கு நான் பதில் சொல்லி ஆகணுமே றிசான். அது மட்டுமில்ல, அந்த நாயனுக்கு மட்டும் தெரியக் கூடியதா சில பண உதவிகளயும் செய்து வாறன். அதனால நான் தர இருப்பத மனங் கோணாம வாங்கிக்க. இந்த நாட்டாம வேலயெல்லாம் விட்டெறிச்சிட்டு நான் சொல்றபடி செய்"

நாசீர் சென்று 15 நாட்களாகி விட்டன. அன்றைய நாள் மாலை நெருங்கும் போது மீண்டும் றிசானின் வீட்டுக்கு வந்த நாசீர், ஒரு பைலை றிசானிடம் காண்பித்தார். அதில் ஒரு பத்திரத்தைக் கையிலெடுத்து,

"இது ஒனக்கு மாதா மாதம் பணம் அனுப்பப் போகும் மூன்று கடைகளின் குத்தகைப் பணம் 15 ஆயிரம் ரூபாவுக்கான உறுதிக் கடிதத்தின் நகல். மற்றது மல்டி கடை ஒன்ட பெயருக்கு மாற்றப் போகும் பத்திரத்தின் அசல். இது ஒன்ட பெயருக்கு இனி மாற்றப்படும். இதயெல்லாம் ஒன்ட பெயருக்கு அசல்களாக மாற்றி சட்டத்தரணி ஆரிப் என்பவரால தரப்படும். அதன் பொறகு நீ ஒரு கடைக்கி உரிமையாளனாகிடுவாய். அந்த நாள் எனக்கு மிகவும் சந்தோஷமாகவே இருக்கும் றிசான். இன்ஷா அல்லாஹ் வாற 24ஆம் திகதி உன் குடும்ப சகிதமா வந்து பெற்றுக் கொள்" என்றவர் அங்கிருந்தும் புறப்பட்டார். றிசானும் சந்தோசத்துடன் நாசீரை வழியனுப்பி வைத்தான்.

24ஆம் திகதியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் றிசான். நாசீர் வந்து போனது 8ஆம் திகதி. இன்னும் 16 நாட்கள் கழிய வேண்டியிருந்தது. ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு யுகமாகத் தோன்றியது அவனுக்கு.

24ஆம் திகதியும் கடந்து மார்ச் மாதமாக இருந்ததால் 31ஆம் திகதியும் கடந்து விட்டது. நாசீரிடமிருந்து எந்தத் தகவல்களும் கிடைக்கவில்லை. மனம் சோர்ந்து போனான் றிசான். ஏதோ பத்திரங்களைக் காண்பித்து வாய்ச் சொல்லால் பேசி விட்டுச் சென்றவனை எப்படி நம்புவது என்றெண்ணியவனாக தனது நாட்டாமை வேலையைத் தொடர நினைத்தான்.

அன்று ஏப்ரல் 9ஆம் திகதி றிசானுக்கு பதிவுத் தபாலொன்று வந்தது. ஆரிப் சட்டத்தரணியிடமிருந்து வந்த தபால்தான் அது. இதைக் கண்டதும் தன்னை வந்து சந்திக்கும் படியாக இருந்தது. கடிதம் கிடைத்த மறுநாள் மனைவி, பிள்ளைகளுடன் சட்டத்தரணி ஆரிபின் வீட்டையடைந்தான் றிசான். ஆரிப் அவர்களை அன்போடு வரவேற்றார்.

"பாருங்க றிசான் ஒங்கட நண்பர் வாழ்க்கய. இறந்தும் கொடை கொடுத்தவர்தான் சீதக்காதி வள்ளல் என்று சொல்வார்கள்; இப்ப ஒங்கட நாசீர் தொரயும் மௌத்தாகிட்டாரு"

"என்ன! நாசீர் மௌத்தாகிட்டாரா? இன்னாலில் லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன், எப்ப சேர் இது நடந்திச்சி..."

"போன மாதம் 20ஆம் தேதி ஒங்கட பெயருக்கான ரெண்டு உரிமப் பத்திரங்களின் நகல்களத் தந்து, 24 ஆம் தேதிக்கு இடையில முடிச்சித் தருமாறு கேட்டிருந்தாரு. அவசர அவசரமா இந்த வேலைகள முடிச்சிட்டு 23ஆம் தேதி அறிவிச்சன். சரி, இன்ஷா அல்லாஹ் நான் சொன்னமாதிரி 24ஆம் திகதி றிசானுக்கிட்ட இதயெல்லாம் ஒப்படைச்சிடனும் என்றவருக்கு 24ஆம் திகதி காலையில் மாரடைப்பு வந்து மௌத்தாகிட்டாரு. இதத்தான் நான் சொன்னன் றிசான் மண் மறைந்தும் அவர் இதயெல்லாம் கொடையாகத் தந்துள்ளார் என்று."

"யா அல்லாஹ் என்ன சோதனை இது" என்று தேம்பித் தேம்பி அழத் தொடங்கினான் றிசான்.

மேசையில் கிடந்த பைலைப் புரட்டி அதிலிருந்த பாத்திரமொன்றைக் காண்பித்து நாசீர் அவர்களின் மூன்று கடைகளால் வரும் குத்தகைப் பணம் 15 ஆயிரம் ரூபாவின் உரிமைக் கடிதத்தையும் நாசீரின் கடைகளில் ஒன்றின் காணியின் உறுதிப் பத்திரம், கடைக் கட்டிடத்தின் உரிமைப் பத்திரம் எல்லாவற்றையும் விளக்கப்படுத்தி சட்டத்தரணி ஆரிப் அப்படியே றிசானிடம் காண்பித்தார்.

"ஒரு நாள் நான் இறைவனுக்கிட்ட செல்லத்தான் போறன். அப்போது நான் ஒனக்கு பணச் செல்வத்த அள்ளி அள்ளித் தந்தனே அத நீ எப்புடியெல்லாம் செலவு செய்தாய் என்று அவன் கேட்டால் நான் என்ன பதில் சொல்வது. அதனாலதான் ஒனக்கு இப்படிச் செய்யப் போறன். இதால எனக்கு எவ்வளவு மன நிம்மதியேற்படும் தெரியுமா? என்று சொன்னான் சேர் அந்த நாசீர்"

"இறைவன் வகுத்த விதிய நம்மால எதுவு[ம்] செய்ய முடியாது றிசான். ஒங்களுக்கு மட்டுமில்ல இன்னும் மறைமுகமாக எவ்வளவோ உதவிகள செய்திருக்காரு. அந்த அல்லாஹ்வுக்கும் அவருக்கும்தான் அது தெரியும், நான் அவரப் பற்றித் தெரிந்து கொண்டது ஒன்றே ஒன்றுதான்..."

"சொல்லுங்க சேர்... நானும் அத தெரிஞ்சிக்கணும்"

"நாசீர் இம்மண்ணுலக விட்டு மறஞ்சாலும் அவரால நன்மையடைந்தவங்க அவருக்காக பிரார்த்தன புரிய வேணும். அந்தப் பிரார்த்தன அவருக்கு நேரடியாகவே போய்ச் சேரணும் இதத்தான் ஸதகதுல் ஜாரியா என்று சொல்லப்பட்டிருக்கு. அதாவது இவ்வுலகில பலரும் நன்மையடையக் கூடிய ஏதாவதொன்றச் செய்து அதனால அவர்கள் பிரயோசனமடஞ்சி இறைவனப் பிரார்த்தித்தால் அப்பிரார்த்தனையின் நன்மைகள் நேரடியாகவே நன்மையடையச் செய்தவரப் போய்ச் சேருமாம். இதத்தான் நாசீரும் விரும்பினாரு"

"நிச்சயமா அவருடைய எண்ணத்த நிறைவேற்றுவன் சேர். அவர் எனக்குச் செய்த இந்த ஏற்பாட்ட ஆயுள் இருக்கும் வரை நானோ, மனைவி பிள்ளைகளோ மறக்கவே மாட்டோம். எனக்கிருக்கும் இந்த ரெண்டு மகன்மார்களயும் மூன்று கடைகளின் குத்தகை வருமானத்த வெச்சி மத்ரசாவில சேர்த்து ஹாபீஸ்களாக்கியே தீருவன். அவர்கள நாசீருக்காகப் பிரார்த்தன செய்யவும் வெப்பன் சேர்"

"வெரி குட் றிசான். நீங்கள் செய்யப் போற இந்தக் காரியம் எப்போதும் நாசீருக்கு ஸதகதுல் ஜாரியாவாக தொடர்ந்து கொண்டே இருக்கும். இதப் பிடியுங்க ஒங்கட உரிமப் பத்திரங்கள"

சட்டத்தரணியிடமிருந்து பத்திரங்களைப் பெற்றுக் கொண்ட றிசான், தன் இரு கரங்களையும் மேலே உயர்த்தி நண்பன் நாசீருக்கான துஆப் பிரார்த்தனை செய்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கலாபூஷணம், ஏ.எம்.எம். அலி - கிண்ணியா

ஆன்மப் பசி கொண்டவர்கள்
அள்ளிப் பருக அருளமுது!
இந்த உலகத்திற்கு மட்டுமா?
அந்த உலகத்தின்
சுவனத்துச் சுகத்திற்காகவே
உதித்து வந்துள்ளது ரமழான் மாதம்!
ஒவ்வோராண்டும்
அருட் பேரழகை எம்மில்
பதித்து வந்துள்ளது ரமழான் மாதம்!

இம்மாதத்தின் வருகையால்
இரவும் பகலும்
ஆசா பாசங்களாகிய
அழுக்கு ஆன்மா
கழுவப்படுகிறது
எம்மிதய அறைகளில் இறையச்சம்
கொழுவப்படுகிறது!

ஆண்டவனை அண்டச் சொன்னது
இம்மாதம்
அவனை ஆண்டவனாகவும்
தன்னை அடிமையாகவும்
மதிக்கச் சொன்னது இம்மாதம்
இறைவனை இரவு பகலாகத்
துதிக்கச் சொன்னது இம்மாதம்
அவனிட்ட கட்டளையைத் தட்டாமல்
இயற்றச் சொன்னது இம்மாதம்
மற்றதெல்லாம் அவன் பொறுப்பு!
மருத்துவனும் அவன்தான்!
மருந்தருளும் அவன்தான்!

நாம் நோயாளிகள்
நோன்புதான் ஔடதம்!
ஆம்! அம்மருந்தை அருந்துவோமா?
ஆன்ம நலம் அடைவோமா?

மதுரமான தேன் பிழிற்றும்
மலர்மீது
மதுகரம் அமர மறக்குமோ?

பூ மண்டலத் தோப்பிற் பூத்த
புதுமலர் நோன்பு
பிழிற்றும் அருட் தேனுண்ண
மனித மதுகரம் மறுக்குமோ?
அத்தேனுண்ணாது பறக்குமோ?

இஸ்லாம் மார்க்கம் தந்திருக்கும்
இந்தச் சமயந்தான் ஏற்றவொரு சமயம்




## இனவாதம் பேசுதல்

ஆவேசப்படுவதாலும்
ஆர்ப்பாட்டம்
செய்வதாலும்
கொடி பிடித்துச் சென்று
கோஷமிடுவதாலும்
அடைந்த பயன்கள்
எவை?
சிந்தனைப் புரவியை
சற்றே தட்டிவிடுங்கள்
இது'வும் சகோதர
வாஞ்சையின்
வெளிப்பாடே!

அடக்கமாய்,
அமைதியாய்
ஆரவாரமில்லாமல்
அயரா உழைப்பும்
அர்ப்பணிப்பும்
பின்னிப்
பிணைந்தமையால்தாம்
இன்று நாங்கள்
நிம்மதிச்
சுவாசத்தை
நிலையாக்கிக்
கொண்டோம்!
ஆனால்,
நீங்களோ...?
திரும்பத் திரும்பக்
கொடிபிடிக்கவே
விழைகிறீர்கள்!



தாஹிர்- ஏறாவூர்

## ஈருலக வாழ்க்கைக்கு வழி செய்வோம்

ரமழான் மாதம் மலர்ந்ததுவே
வண்ண மாதம் பிறந்ததுவே
புண்ணியங்கள் பல பூத்திட - வாழ்வில்
புனித மாதம் பிறந்ததுவோ!

ஏகன் அன்பை எய்திட - நாம்
ஏக தானங்கள் வழங்கிடுவோம்
புகழுக்காய்,
பெருமைக்காய் ஈய்திடாது - நாளை
மறுமைக்காய்,
நன்மைக்காய் ஈய்திடுவோம்

துருப்பிடித்த வாழ்வுகளை
சலவை செய்வோம் - நம்
குருதியில் புதியதோர் உணர்வினை
சேர்வை செய்வோம்

தூய கலிமாவின் அர்த்தமதை
உணரச் செய்வோம் - நாளை
மறுமையின் வெற்றிக்காய்
நன்மை செய்வோம்

சோதரங்களே விழித்திடுங்கள்!
தொண்டு செய்வோம்
ஏழையர் வறுமையை
நீங்கச் செய்வோம்

ஸகாத் சதகா கூட்டுச் சேர்த்து - நம்
சமூக குறைகளைத் தீர்த்து வைப்போம்
தோழமையை உணர்த்தி ஏழ்மையைத்
துரத்தி
ஈருலக வாழ்கைக்கு வழி செய்வோம்!

ஏ.சி. ஜரீனா முஸ்தபா - வெலிகிட்ட



## தியாகி

நான்
சுவர்க்கத்து
ஹூர்லீன்களை
பலஸ்தீனில்
வாங்கப் போகிறேன்
அங்கே தான்
நிறைய



தியாகிகள் தயாராகிறார்கள்
நானும்
இஸ்லாமிய வாலிபனே!
இப்போது
எனக்கும்
ஹூர்லீன்கள்
வாங்கும் சக்தியுண்டு

பாத்திமா மனாழிரா அஸீஸ்
காவத்த முனை

## கண்ணியம் தரும் ரமழானே!

எச்.எம். ஹலால்தீன் - கிண்ணியா

பூத்துக் குலுங்கும் மலராய் — புவி
பூரிக்க நீயும் வந்தாய்
காத்துக் கிடந்த மனதில் — அருள்
காவியம் படைத்து நின்றாய்

அருள் மணம் கமழும் — புனித
அல்குர்ஆன் தந்தாய்
இருள் அகன்று செல்லும் — மனித
மனதில் நிலைத்து நின்றாய்

ஏழை எளியோர் மனதை — எங்கும்
எளிதாய் அறியச் செய்தாய்
பாலை நிலத்து பூவாய் — எழில்
பாரில் வந்து உதித்தாய்

நோய் தீர்க்கும் மருந்தாய் — அருள்
நோன்பென பெயர் கொண்டாய்
காய்த்திருக்கும் கனியாய் — மாந்தர்
கண்ணியம் கொள்ளச் செய்தாய்

புண்ணியம் நிறைந்த மாதமாய் — நீயும்
புவியில் வலம் வந்தாய்
கண்ணியம் நிறைந்த ரமழானே — எம்
அருளை ஏற்றுக் கொள்வாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

QD/28/NEWS/2013

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில்...

பிரதி
- திங்கள்
- செவ்வாய்
- புதன்
- வியாழன் ஆகிய தினங்களில்

கேட்கத் தவறாதீர்கள்

பி.ப. 02:05 முதல் பி.ப 02:20 வரை

## 'இஸ்லாமிய வாழ்வியல்'

ரமழான் சிறப்பு நிகழ்ச்சி

- உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பர் (அமீர், இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி)
- டாக்டர். ஆகில் அஹ்மட் ஷரிபுத்தீன்
- எம்.எச்.எம். ஹஸன் (M.Ed)
- கலாநிதி எம்.ஐ. மவ்ஜுத் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து சிறப்பிக்கும் ரமழான் விசேட நிகழ்ச்சி

அனுசரணை: **JUST MEDIA FOUNDATION**

RADIO RADIO RADIO







எமது வெளியீடுகளான

| அல்ஹஸனாத் | அகரம் | ப்ரபோதய |
|---|---|---|
| www.alhasanath.lk | www.aharam.lk | www.prabodaya.lk |

என்பன மின் சஞ்சிகை (E-Magazine) வடிவில் இணைய தளத்தை அலங்கரிக்கின்றன.

வெகுவிரைவில் எங்கள் தேசம் The Trend

JUST MEDIA FOUNDATION

JUST MEDIA FOUNDATION

## JUST MEDIA FOUNDATION

77, Dematagoda Road, Colombo 09, Tel: 011 2698771, E-mail: jmfsrilanka@gmail.com, www.facebook.com/jmfsrilanka

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Printed at IPC PRINTING PRESS, 23, De Vaas Lane, Grandpass, Colombo 14.